பக்கங்கள்
16+8

விலை
ரூ. 60

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 38
கதிர் : 197

ஞாயிற்றுக்கிழமை 11 ஜூன் 2023

வைகாசி 28 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

காங்கேசன்துறையில்

## ஆயுதக் கிடங்கு அகற்றம்; பாதுகாப்பு முகாம் மூடல்!

### மக்களின் 30 ஏக்கர் நிலம் விடுவிப்பு

**யாழ்ப்பாணம், ஜூன் 11**

**நல்லாட்சிக் காலத்தில் விடுவிக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்த காணிகளில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் நேற்று அங்கிருந்து வெளியேறியுள்ளனர். 33 ஆண்டுகளின் பின்னர் 40 பொதுமக்களுக்குச் சொந்தமான சுமார் 30 ஏக்கர் காணியும் இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.** »15



## ஒடுக்கப்பட்டோரின் குரல் 'தெணியானின்' சிலை திறப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11

கடந்த ஆண்டு மறைந்த ஈழத்தின் மூத்த எழுத்தாளர் தெணியானின் (கந்தையா நடேசு) முதலாம் ஆண்டு நினைவு தின நிகழ்வும், உருவச் சிலை திறப்பு நிகழ்வும், 'ஒடுக்கப்பட்ட மக்களின் குரல் தெணியான்' நூல் வெளியீடும் »15

வெளிநாட்டிலிருந்து

## வவு. திரும்பிய இருவருக்கு எச்.ஐ.வி. தொற்று உறுதி

வவுனியா, ஜூன் 11

வெளிநாட்டிலிருந்து கடந்த வாரம் வவுனியா திரும்பிய இருவருக்கு எச்.ஐ.வி. தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இவ்வாறு தொற்று கண்டறியப்பட்ட இருவரும் ஆண்களாவர். »15

## விபத்தை ஏற்படுத்தி கொள்ளை முயற்சி!

பரந்தனில் சம்பவம்

கிளிநொச்சி, ஜூன் 11

விபத்தை ஏற்படுத்தி காப்பாற்றுவதுபோல் பாசாங்கு செய்து அலைபேசி மற்றும் மோட்டார் சைக்கிளைக் கொள்ளையிட முயற்சித்த சம்பவம் கிளிநொச்சியில் கடந்த வியாழக்கிழமை பதிவாகியுள்ளது. »15

இலத்திரனியல், உணவு உள்ளிட்ட

## 300 பொருள்களுக்கு இறக்குமதித் தடை நீக்கம்

கொழும்பு, ஜூன் 11

பல பொருள்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளதாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகம் »15

## அலைபேசிகளின் விலையை குறைப்பதற்குத் தீர்மானம்

கொழும்பு, ஜூன் 11

அலைபேசிகளின் விலைகளை 20 வீதத்தால் குறைப்பதற்கு அலைபேசி விற்பனையாளர்கள் தீர்மானித்துள்ளதாக அந்தச் சங்கத்தின் »15

## இந்திய நெருக்கடியால் மாகாணசபைத் தேர்தல்

மொட்டுக் கட்சியினரை தயாராகுமாறு பஸில் ராஜபக்ச அறிவுறுத்தல்



கொழும்பு, ஜூன் 11

இந்தியாவின் கடும் அழுத்தம் காரணமாக முதலில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படலாம் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நிறுவுனரும் முன்னாள் அமைச் »15

## பௌத்தத்தை அரசியல் ஆயுதமாக ஒருபோதும் பயன்படுத்த வேண்டாம்



### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 11

மதமும் ஆட்சியும் ஒன்றாகக் கலக்கக் கூடாது. பௌத்தத்தை ஒரு அரசியல் ஆயுதமாக்குவதில், மதம் பெற வேண்டிய உயர்வான அந்தஸ்து குறைமதிப்புக்கு உட்படுத்தப்படுகின்றது - இவ்வாறு கவலை வெளியிட்டுள்ளார் எதிர்க் »15

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
முற்பணம் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது
ரூ.120,000/=
அதிகபட்ச இரகசியதன்மை
சிநேகபூர்வமான உடனடி சேவை
சிறந்த பாதுகாப்பு
011 200 88 88
சந்தை நிலைவரங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட முற்பணமானது முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம்.
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
செலான் தங்கக்கடன்
Fitch Rating: "A-" (lka)
செலான் வங்கி

இந்தியாவுடனான சரக்குக் கப்பல் சேவை

## வடக்கு இறக்குமதியாளர்கள் அதிக ஆர்வம்காட்டவேண்டும்

யாழ்ப்பாணம், ஜூன் 11

பாண்டிச்சேரி - காங்கேசன்துறை இடையிலான சரக்குக் கப்பல் சேவை இந்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த இறக்குமதியாளர்கள் இன்னும் அதிக ஆர்வத்துடன் இறக்குமதிக்குரிய நடவடிக்கைகளில் இறங்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாண்டிச்சேரிக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான சரக்குக் கப்பல் சேவைக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இதற்கு அமைவாக ஹேலீஸ் நிறுவனம் 350 மெற்றிக் தொன் »16

சஞ்சீவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரங்குகளின் அதீத பெருக்கத்தால்

# மில்லியன் கணக்கில் தேங்காய்கள் அழிவு!

விவசாயத்துறை அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 11

குரங்குகளின் பெருக்கத்தால் மில்லியன் கணக்கான தேங்காய்கள் அழிக்கப்பட்டுள்ளன. அழிவடைகின்றன. கடந்த வருடத்தின் முதல் அரையாண்டுக்குள் சுமார் 93 மில்லியன் தேங்காய்களை குரங்குகள் அழித்துள்ளன என்று விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குரங்குகள் உட்பட காட்டு விலங்குகளால் விவசாயப் பயிர்களுக்கு ஏற்படும் பாதிப்புத் தொடர்பில் ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி நிலையம் விவசாய அமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. 2022 ஆம் ஆண்டு முதல் ஆறு மாத காலப்பகுதியில் மாத்திரம் 93 மில்லியன் தேங்காய்களை குரங்குகள் நாசம் செய்துள்ளன. அதேபோல் காட்டு விலங்குகளால் மாத்திரம் தெங்கு, பலா உட்பட 200 மில்லியனுக்கும் மேற்பட்ட உணவுப் பொருள்கள் நாசமடைந்துள்ளன.

விளைநிலங்களை ஆக்கிரமித்துள்ள குரங்குகள், காட்டு யானைகள் உட்பட விலங்குகள் மனித குடியிருப்புக்களையும் விட்டுவைக்கவில்லை. கொழும்பு நகரில் உள்ள பூங்காக்களிலும் குரங்குகள் திரிவதைஅவதானிக்கமுடிகிறது. ஆகவே, காட்டு விலங்குகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டும்.

காட்டு விலங்குகளால் பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்படும் பாதிப்பை இல்லாதாக்குவது அல்லது குறைப்பது தொடர்பில் சுற்றுச்சூழல் நிபுணர்கள் முன்வைத்துள்ள யோசனைகள் நடைமுறைக்குச் சாத்தியமற்றன. பயிர்ச்செய்கையின்போது விலங்குகளுக்கு என தனித்து பயிர்ச்செய்கையை மேற்கொண்டு அதனை விலங்குகளுக்கு ஒதுக்கிக் கொடுக்குமாறு சுற்றாடல் நிபுணர்கள் பரிந்துரைத்துள்ளனர். இது சாத்தியமற்றதாகும். விலங்குகளுக்கு என விவசாயிகள் தனித்து விவசாயம்செய்ய மாட்டார்கள்.

தென்னை மர ஓலையில் தகரம் கட்டுதல், மரத்தை பொலித்தீன், சீலை ஆகியவற்றால் மூடுதல் என முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் நடைமுறைக்கு சாத்தியமற்றன. விலங்குகளுக்கு என காடுகளில் மரங்களை வளர்க்குமாறு முன்வைக்கப்பட்டுள்ள யோசனை சிறந்தது. இருப்பினும், காடுகளில் பலா, மா மரங்களை நட்டு, உடனே விளைச்சலைப் பெறமுடியாது. அதற்கு நீண்டகாலம் செல்லும். குரங்குகள், காட்டு யானைகள் உட்படக் காட்டு விலங்குகளின் இனப்பெருக்கம் தீவிரமடைந்துள்ளது. அவற்றால் ஏற்படும் அழிவுகளைத் தடுக்க ஏதேனும் ஒரு வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ம)

## ஓட்டோ - லொறி விபத்து வயோதிபத் தம்பதி சாவு

கொழும்பு, ஜூன் 11

ஓட்டோ - லொறி விபத்தில் வயோதிபத் தம்பதியர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் அம்பாந்தோட்டை வலஸ்முல்லை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடந்துள்ளது.

ஓட்டோவில் பயணித்த அதேபகுதியைச் சேர்ந்த 77 மற்றும் 75 வயதுடைய தம்பதியரே விபத்தில் சிக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

ஓட்டோச் சாரதியும் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பில் லொறியின் சாரதியை பொலிஸார் கைதுசெய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர். (ச-22)

## காதல் விவகாரம்; யுவதி கொலை

கொழும்பு, ஜூன் 11

தாயாருடன் வசித்துவந்த இளம் யுவதி ஒருவர், தாயின் கண்முன்னே கத்தியால் குத்திக்கொலை செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் மொனராகலையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பட்டப்பகல் வேளையில் இடம்பெற்றுள்ளது. 22 வயதுடைய யுவதியே படுகொலைசெய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய யுவதியின் காதலனை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

காதலை முறித்துக்கொள்ள முயன்றதால் பழிவாங்கும் வகையிலேயே யுவதியை கழுத்தறுத்து கொலை செய்ததாக சந்தேகநபரிடம் மேற்கொண்ட விசாரணையில் தெரிவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-22)

## விலங்குகளால் பயிரழிவு: விரைந்து கட்டுப்படுத்துக

ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 11

குரங்குகள், காட்டுயானைகள் உட்படக் காட்டு விலங்குகளால் பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்படும் பாதிப்பைக் கட்டுப்படுத்தத் துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய வகையில் விசேட அதிகாரசபை ஒன்று அமைக்கப்படவேண்டும். பிரச்சினையின் பாரதூரத்தன்மையைக் குறிப்பிடும் அரசாங்கம் பிரச்சினைக்குத் தீர்வுகாண உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விவாதத்தின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

குரங்கு உட்படக் காட்டு விலங்குகளால் விவசாயப் பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்படும் பாதிப்புத் தொடர்பில் அரசாங்கம் அறிக்கை பெறுகிறது. பேச்சுக்களில் ஈடுபடுகிறது. ஆனால், இதுவரை நடைமுறைக்கு சாத்தியமான எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை. காட்டு விலங்குகளால் விவசாயப் பயிர்களுக்கு பாரதூரமான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. கிராமப்புறங்களில் வீடுகளை குரங்குகள் ஆக்கிரமித்துள்ளன.

ஒருசிலருக்கு 30 முதல் 40 வரையான தென்னை மரங்கள் உள்ளன. ஆனால், சம்பல் செய்வதற்கு கூட குரங்குகள் தேங்காய்களை விட்டு வைப்பதில்லை. சுற்றாடல்துறை நிபுணர்களின் அறிக்கைகளைப் பெற்று, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது. ஏனெனில், அவர்கள் சுற்றாடல் மற்றும் காட்டு விலங்குகளின் நலன் தொடர்பில் விசேட கவனம் செலுத்துவார்கள். ஆகவே, காட்டு விலங்குகளால் பயிர்ச்செய்கைக்கு ஏற்படும் பாதிப்பைக் கட்டுப்படுத்தும் திட்டங்களை செயற்படுத்த துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய வகையில் முன்னெடுக்க வேண்டும் - என்றார். (ம)

2015 - 2020 வரையில்

## 25 லட்சம் வாகனங்கள் நாட்டுக்குள் இறக்குமதி!



கொழும்பு, ஜூன் 11

2015-2020க்கு இடைப்பட்ட காலத்தில் நாட்டுக்கு 24 இலட்சத்து 98 ஆயிரத்து 714 வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் நாட்டில் 5 பேருக்கு ஒருவர் வாகனத்தைக் கொள்வனவு செய்துள்ளனர் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது, 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை நாட்டுக்கு வருடாந்தம் இறக்குமதி செய்யப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவு என நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சீ தொலவத்த எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். (ம)



## ரூ. 50 லட்சம் பெறுமதி பீடி இலைகள் கடத்தல்!

புத்தளத்தில் மூவர் கைது

புத்தளம், ஜூன் 11

சட்டவிரோதமாக பீடி இலைகளைக் கடத்திச் செல்ல முற்பட்ட மூவரை புத்தளம் பாலாவி பகுதியில் வைத்து நேற்றுச் சனிக்கிழமை புத்தளம் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைதுசெய்துள்ளனர்.

கற்பிட்டியிலிருந்து நீர்கொழும்புக்கு பீடி இலைகளை லொறியொன்றில் கடத்திச் செல்லமுற்பட்டபோது அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 36 உரப்பைகளில் 1100 கிலோகிராம் பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவை சுமார் 50 லட்சம் ரூபா பெறுமதியானவை எனப் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை சான்றுப்பொருள்களுடன் புத்தளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதை அடுத்து மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-இ)

## எந்தத் தேர்தலுக்கும் பெரமுனவினர் தயார்

மஹிந்த தெரிவிப்பு

எந்தத் தேர்தலுக்கும் பொதுஜன பெரமுனவினர் தயார் என்று தெரிவித்துள்ளார் பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச. பொதுஜன பெரமுனவினருடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேர்தலுக்கு நாங்கள் தயார். ஜனாதிபதித் தேர்தலுக்கும் கூட நாங்கள் தயார் என்று மஹிந்த மேலும் தெரிவித்தார். (ம-22)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 13ஆவது திருத்தம் நீக்கப்பட வேண்டும்

## ரோஹித அபேகுணவர்த்தன தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 11**
**மக்கள் பிரதிநிதிகள் இல்லாத மாகாணசபைகள் வெள்ளையானை போல் செயற்படுகின்றன. மாகாணசபைத் தேர்தலை நடத்தவேண்டும் அல்லது அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்து மாகாணசபை முறைமையையும் இரத்துச் செய்யவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் ஒன்றை நடத்தாமல் மக்கள் ஆணையைத் தீர்மானிக்கமுடியாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிடுகிறார்.

அரசியல்வாதிகளுக்கு சாதகமான நேரத்தில் தேர்தலை நடத்தினால் முறையற்ற மக்களாணையை வெளிப்படுத்தப்படும். 2020ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பொதுத்தேர்தலை நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்தது.

தமக்கு மக்களாணை இல்லாத காரணத்தால் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாட்டில் கொவிட் பெருந்தொற்றுத் தாக்கத்துக்கு மத்தியில் தேர்தலை நடத்தக்கூடாது எனக் குறிப்பிட்டு கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

அவரது நோக்கத்துக்கு அமைய பொதுத்தேர்தல் ஏப்ரல் மாதம் இடம்பெறவில்லை.

மாகாணசபைகள் மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் ஆளுநர்களினால் நிர்வகிக்கப்படுகிறது. அரசமைப்பு ரீதியில் ஆளுநர்களின் நிர்வாகம் இடம்பெற்றாலும் அது முறையற்றது.

மாகாணசபைகள் மக்கள் பிரதி நிதிகள் ஊடாகவே நிர்வகிக்கப்பட வேண்டும்.

காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாணசபைத் தேர்தலை நடத்தவேண்டும் அல்லது அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக இரத்துச் செய்து மாகாணசபை முறைமையை இரத்துச் செய்ய வேண்டும் - என்றார். (ம)



## இயற்கை உரத்தொழிற்சாலை மூங்கிலாறு வடக்கில் திறப்பு!

முல்லைத்தீவு, ஜூன் 11

முல்லைத்தீவு உடையார்கட்டு மூங்கிலாறு வடக்கில், உடையார்கட்டு விவசாயிகள் கூட்டுறவுச் சங்கத்தின் இயற்கை உர உற்பத்தித் தொழிற்சாலை கடந்த புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

உடையார்கட்டு விவசாயிகள் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சே.யோகராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் க.கமலேஸ்வரன் கலந்துகொண்டார்.

இதன்போது இயற்கை உரத்தயாரிப்பு முறை தொடர்பில் எடுத்துரைக்கப்பட்டதுடன் பொதி செய்யப்பட்ட இயற்கை உரம் சம்பிரதாயபூர்வமாக அறிமுகம் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டது. அத்துடன் மரக்கன்றுகளும் நடப்பட்டன. (ச-19)




### நீதிக்காகக் குரல்கொடுத்த

## அருட்பணி சந்திரா அடிகளாரின் நினைவேந்தல் மட்டக்களப்பில்!

மன்னார், ஜூன் 11

நீதி மறுக்கப்பட்டு வன்முறையும் கொடுங்கோன்மையும் நிலவிய சூழ்நிலையில் நீதிக்காகக் குரலற்ற மக்களுக்கு குரலாகத் திகழ்ந்த அமரர் அருட்பணி சந்திரா பெர்னாண்டோ அடிகளாரின் 35 ஆவது நினைவேந்தல் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு தூய மரியன்னை பேராலய முன்றிலிலுள்ள அவரது சமாதியருகே மட்டக்களப்பு பல்சமய ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் சர்வமத பிரார்த்தனையைத் தொடர்ந்து அஞ்சலி உரைகள் நிகழ்த்தப்பட்டன. மட்டக்களப்பு மாவட்ட பல் சமய ஒன்றியத்தினர், சமய பிரமுகர்கள், அமரர் அருட்பணி சந்திரா பெர்னாண்டோ அடிகளாரின் குடும்பத்தினர் உள்ளிட்ட பலர் பங்கேற்று அஞ்சலித்தனர். (ச-60)

### முல்லைத்தீவு

## பதில் மாவட்டச் செயலராக கனகேஸ்வரன் கடமையேற்பு

மன்னார், ஜூன் 11

முல்லைத்தீவு மாவட்டத்தின் பதில் மாவட்டச் செயலராக, முல்லைத்தீவு மாவட்ட மேலதிக மாவட்டச் செயலராக பணியாற்றிய கனகசபாபதி கனகேஸ்வரன் கடந்த புதன்கிழமை கடமையேற்றுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலராகக் கடமையாற்றி வந்த க.விமலநாதன் கடந்த மே மாதம் 20ஆம் திகதியுடன் சேவையிலிருந்து ஓய்வுபெற்றார்.

இந்த நிலையிலேயே பதில் மாவட்டச் செயலராக கனகசபாபதி கனகேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த புதன்கிழமை தனது கடமைகளை அவர் பொறுப்பேற்றார். (ச-213)


## மதுவரித் திணைக்களத்தினர் போதையில் அட்டகாசம்

### விசாரணை ஆரம்பம்

கொழும்பிலுள்ள உணவகமொன்றில் கடமையில் ஈடுபட்ட பணியாளரை, மதுபோதையிலிருந்த மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தாக்கினரென சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மதுவரித் திணைக்கள ஆணையாளரின் ஆலோசனைக்கு அமைய, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் கபில குமாரசிங்க தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை இரவு இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. உணவகத்தின் பணியாளருக்கும் மதுவரித் திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்ட நிலையில் மதுவரித் திணைக்கள அதிகாரிகள், குறித்த உணவகத்தின் பணியாளர் மீது தாக்குதல் நடத்தியமை சி.சி.ரி.வி காட்சிகளில் பதிவாகி உள்ளது. அதன்போது அவர்கள் மதுபோதையில் இருந்ததாகவும் பொலிஸாரின் விசாரணையில் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)




### இலங்கை - இந்திய

## மின்விநியோக இணைப்பு; உலகவங்கி ஒத்துழைப்பு

கொழும்பு, ஜூன் 11

இலங்கை - இந்திய மின் விநியோக கட்டமைப்பை ஒன்றிணைப்பதற்கு இலங்கை மின்சாரசபைக்கு ஆதரவு வழங்கத் தயாரென உலகவங்கி தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பில் உலகவங்கியின் பிராந்திய வலையமைப்புத் திட்டத்தின் பணிப்பாளர் மற்றும் உலக வங்கியின் இலங்கைக்கான முகாமையாளர் ஆகியோர் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் அதிகாரிகளுடன் கடந்த செவ்வாய்க்கிழமை கலந்துரையாடினர்.

இந்தத் திட்டத்துக்கு இந்திய மதிப்பில் 4 ஆயிரம் கோடி ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதன்மூலம் ஆயிரம் மெகா வோட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த மின் இணைப்பானது தமிழகத்தின் மதுரையில் இருந்து இலங்கையின் வடமத்திய மாகாணத்தின் அநுராதபுரத்துக்கு செல்லும் வகையில் அமையும்.

அதற்கமைய 2030ஆம் ஆண்டுக்குள் இலங்கை - இந்திய மின் விநியோகக் கட்டமைப்பை ஒன்றிணைப்பதற்கு முன்னுரிமையளிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது என மின்சாரசபை அதிகாரிகள் குறிப்பிட்டனர். அதற்கான தொழில்நுட்ப அறிவு மற்றும் நிதிக் கட்டமைப்பைத் தயாரிப்பதற்கு உலகவங்கி ஆதரவு வழங்கும் என உலகவங்கி அதிகாரிகள் தெரிவித்தனர். (ச-இ)

### மின்சாரசபை

## பணம் செலுத்தும் பகுதி சனியிலும் இயங்கும்!

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ்.பழைய பூங்கா வீதியிலுள்ள இலங்கை மின்சாரசபையின் பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகத்தில் இனி சனிக்கிழமைகளிலும் பணம் செலுத்தலாம்.

நாளை 10ஆம் திகதி சனிக்கிழமை முதல் பொது மக்களின் நன்மை கருதி இந்தச் செயற்பாடு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

சனிக்கிழமைகளில் காலை 9 மணி முதல் மாலை 3 மணிவரை பணம் செலுத்தும் பகுதி திறந்திருக்கும் என வடமாகாண பிரதிப் பொது முகாமையாளர் பொறியியலாளர் செ.பிரபாகரன் தெரிவித்தார். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பிரபாகரன் உயிருடன் உள்ளாரா? கேள்விக்குப் பதில் இல்லையாம்

## மிலிந்த மொரகொட தெரிவிப்பு



**கொழும்பு, ஜூன் 11**

**விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரன் உயிருடன் இருக்கின்றாரா? என்ற கேள்விக்கு என்ன பதில் சொல்ல முடியும் என்று எனக்குத் தெரியவில்லை - இவ்வாறு இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொராகொட தெரிவித்துள்ளார்.**

இந்திய ஊடகமொன்றுக்கான நேர்காணலின்போது, 'அனுபவம் மிக்க அரசியல்வாதியொருவர் சமீபத்தில் பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார் எனத் தெரிவித்தார். இது தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன?' என்ற கேள்விக்குப் பதில் வழங்குகையிலேயே, 'என்னால் இதற்கு என்ன பதில் சொல்ல முடியும் எனத் தெரியவில்லை' என்று மிலிந்த மொராகொட தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் மூத்த அரசியல் தலைவர்களில் ஒருவரான பழ.நெடுமாறான், கடந்த சில வாரங்களுக்கு முன்னர் செய்தியாளர் சந்திப்பொன்றை நடத்தியிருந்தார். அதில், 'பிரபாகரன் உயிருடன் உள்ளார். அவர் விரைவில் வெளிப்படுவார் என்று உறுதியாகக் கூறுகின்றேன்' என்று தெரிவித்திருந்தார். இதையடுத்து, பிரபாகரன் உயிருடன் உள்ளாரா? இல்லையா? என்பது தொடர்பில் பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் தோன்றியிருந்தன. (ம)



விசேட தேவையுடையோர்

# தகவல் அறியும் முறை வவு.வில் விழிப்புணர்வு!

வவுனியா, ஜூன் 11

விசேட தேவையுடையோர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினூடாக எவ்வாறு தகவல்களை அறிந்து கொள்வது? மற்றும் அதன் பலாபலன்களை எவ்வாறு அடைவது? உள்ளிட்டவை தொடர்பில் தெளிவூட்டும் செயற்றிட்டம் வவுனியாவில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

விஸ் அபிலிட்டி என்ற அமைப்பின் ஏற்பாட்டில் வவுனியா கலைமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இந்த விழிப்புணர்வுச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது விசேட தேவையுடையோர் தமது அன்றாடச் செயற்பாடுகளினூடாக சமூகத்தில் ஏற்படும் எதிர்மறை வெளிப்பாடுகளை அறிதல் மற்றும் மக்கள் மத்தியில் கொண்டு செல்லுதல் உள்ளிட்டவை தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டன. (ச-ரி-110)

# விபத்தில் சிக்கி முதியவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செட்டியார்மடம் பகுதியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விபத்தில் வயோதிபர் ஒருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சைக்கிளில் வீதியால் சென்றுகொண்டிருந்த குறித்த முதியவ்ரை அந்த வீதியால் பயணித்த வாகனம் மோதியதில் இந்த விபத்துச் சம்பவித்துள்ளது. விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-27)

# வீட்டிலிருந்தோரை தாக்கி நகை, பணம் கொள்ளை!

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீடொன்றின் பின் கதவை உடைத்து உட்புகுந்த திருடர்கள், வீட்டிலிருந்தோரை தாக்கி நகை, பணம் மற்றும் கைத்தொலைபேசியை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொற்றாண்டகுளம் பகுதியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு இடம்பெற்றுள்ளது. 6 பேர்கொண்ட கும்பலொன்றே இந்தக் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளது என பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டுக்கமைய பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-113,27)



# ஓட்டோ விபத்து; இருவர் காயம்

வவுனியா, ஜூன் 11

வீதியில் பயணித்த ஓட்டோவொன்று கட்டுப்பாட்டை இழந்து புரண்டு விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்துள்ளனர்.

வவுனியா மாவட்ட நீதிமன்றுக்கு அருகே நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இந்த விபத்து நடந்துள்ளது. சாரதியின் கட்டுப்பாட்டையிழந்த ஓட்டோ நீதிமன்றுக்கு அருகே வீதியின் மறுபக்கம் சென்று வீதி தடுப்புச்சுவரில் மோதுண்டு புரண்டதில் விபத்து நேர்ந்துள்ளது. விபத்து தொடர்பில் வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-18)

# கலை இலக்கியப் போட்டி விண்ணப்பங்கள் கோரல்

பருத்தித்துறை, ஜூன் 11

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்படும் தேசிய கலை இலக்கியப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பாலர், சிறுவர், கனிஷ்ட, சிரேஷ்ட மற்றும் திறந்த பிரிவுகளின் கீழ் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. கதை கூறுதல், சிறுவர் கதை, கிராமியப்பாடல் இசைத்தல், கையெழுத்துப் போட்டி, கிராமிய கதை ஆக்கம், கவிதை ஆக்கம், பாடல் நயத்தல், இலக்கிய விமர்சனம், பாடல் எழுதுதல், சிறுகதை, நாடகப் பிரதியாக்கம், கவி இசைத்தல், நாட்டார் கலை, ஆய்வுக்கட்டுரை உள்ளிட்ட பிரிவுகளில் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

போட்டிக்குரிய விண்ணப்பப்படிவங்களை அந்தந்த பிரதேச செயலகங்களில் பெற்று எதிர்வரும் ஜூலை 14 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-ரி)

# கொடுப்பனவு விநியோகம்

சாவகச்சேரி, ஜூன் 11

தென்மராட்சிப் பிரதேசத்தில் பொதுசன மாதாந்த உதவிப்பணம், பிரதேச அஞ்சல் அலுவலகங்களில் நேற்றுமுன்தினம் தொடக்கம் வழங்கப்பட்டு வருகிறது.

பிரதேச சமூக சேவைகள் அலகினரால் இந்த மாதத்துக்குரிய கொடுப்பனவு பட்டியல் அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதையடுத்து கொடுப்பனவுகள் விநியோகிக்கப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-ரி-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உங்கள் இல்லமே உங்கள் சரணாலயம். இதுவே உங்கள் அருங்காட்சியகம் அமையப்பெறும் இடம், முடிவில்லா கற்பனைகளின் பிம்பமாக, அதன் அழகிய வடிவங்களை புதிதாய் தோற்றுவித்து, நீங்கள் உங்களை பிரதிபலிக்கும் விதத்தை மீள்வடிவமைக்கின்றது. Rocell டைல்ஸ், குளியலறை சாதனங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் ஆகியவற்றின் நேர்த்தியான தொகுப்பானது அதன் ஈர்த்தெடுக்கும் நிறம், அமைப்பு, வடிவம் மற்றும் வனப்பு என்பனவற்றின் கொண்டாட்டங்களினூடாக, உங்கள் இல்லத்தை எழில்மிகு அழகின் உறைவிடமாக மாற்றுகின்றது.

அழையுங்கள் 076 6 22 33 44

Rocell

# வணக்கம் Jaffna!

First Capital
A Janashakthi Group Company

Sri Lanka's pioneering investment institution is expanding to Jaffna.

## Join the pioneering team as our
## Business Development Lead

### Roles & Responsibilities

- Canvass group business among Institutions, Corporate and Retail Sector and individuals in the Region.
- Guide customers on how to minimize risks / maximize profits in relation to all business verticals across First Capital Group with competitive pricing.
- Achieve growth and profitability targets.
- Organize presentations & workshops for clients as appropriate.
- To be aware of the present market conditions and their impact, target market for our existing products, shortlist customers and set up marketing pitches.
- Provide value addition to customers through market information/development so that customers are kept updated.
- Responsible for day-to-day administration functions of the Branch.
- Analyze the market, including competitors and consumers and monitor competitor activities in the region and make appropriate recommendations to the Management.
- Ensure compliance with statutory regulations and set controls and procedures.

### Skills, Competencies, and Experience

- 3 years work experience either in a Bank or Financial Institution with minimum of 1 year in Sales or previous acceptable work experience in Investment Banking/Treasury sales related work.
- A keen interest in Capital Markets and related products.
- Excellent verbal & written communication skills.
- Networking ability with excellent PR skills.
- Ability to work under pressure and meet deadlines.
- A Degree or professional qualification from a recognized institution would be an advantage.




Send us your resume to
**hr@firstcapital.lk**

JXG JANASHAKTHI GROUP

*40 Years of Excellence*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைகளுக்கு சிம்ம சொப்பனமான மாவீரன் சங்கிலி மன்னன்



என்.பி.ஸ்ரீந்திரன்,
சங்கிலியன்
நினைவுதினக் குழு செயலர்

யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசித் தமிழ் மன்னன் 2 ஆம் சங்கிலியனின் 404ஆவது நினைவு தினம் இன்று ஞாயிற்றுக்கிழமை கடைப்பிடிக்கப்படவுள்ளது. அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்த குடியென்பது வரலாற்றாசிரியர் கருத்து. தொன்மையும் சிறப்பும்மிக்க தமிழ் மன்னர் பரம்பரையில் வந்துதித்த வீரமறவனே! சங்கிலி மன்னன். யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசித் தமிழ் மன்னன். 7ஆம் செகராஜசேகரன் என்ற சிறப்புப் பெயருடையவன்.

கி.பி. 1519ஆம் ஆண்டு முதல் கி.பி. 1561ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்டவன். ஆறாம் பரராஜசேகரனுக்கும் மங்காத்தாளுக்கும் மகனாக பிறந்தவன். ஆரியச்சக்கரவர்த்திகள் வம்சத்தில் வந்துதித்தவன். சிறந்த சைவத்தமிழ் மன்னனாகத் திகழ்ந்தவன். நெற்றியில் நீறும் நிமிர்ந்த உரம் மிக்க நெஞ்சும் கையினில் வீர வாளும் கண்களில் ஒளியும் கொண்ட கம்பீரத் தோற்றத்தைக் கொண்டவன். நல்லாட்சி நாதனாக விளங்கியவன். வலிமை மிகு காலால் படையையும் கடல் படையையும் வைத்திருந்தவன். கடல் கடந்த வணிகத்தின் மூலம் பெருமளவு வருமானம் பெற்றிருந்தவன்.

போர்த்துக்கேயரின் வணிக முயற்சிகள் நாட்டு நலனுக்கு பாதகமானது என்பதனை அறிந்திருந்தவன். இதன் காரணமாக 1540 ஆம் ஆண்டுகளில் போர்த்துக்கேயரின் வணிகக்கப்பல்கள் யாழ்ப்பாண துறைமுகத்துக்கு வந்தவேளை படைகளையனுப்பி கப்பல்களையும் பொருள்களையும் பறிமுதல் செய்து பறங்கிகளுக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்தவன். அவர்களை விரட்டியடித்தவன். பலம் மிக்க ஆட்சியொன்றை நிறுவியிருந்தவன் இதன் காரணமாக போர்த்துக்கேய பறங்கிகளின் வணிகத்துக்கும் மதமாற்ற நடவடிக்கைகளுக்கும் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தவன். பிரான்சிஸ் சவேரியர் பாதிரியாரும் குறோஸ் பாதிரியாரும் மேற்கொண்டிருந்த மதமாற்ற நடவடிக்கைகளுக்கு படை கொண்டு பதிலடி

**ஆண்ட பரம்பரை மீண்டும் ஆள வேண்டும். அடுத்த சந்ததியினரை அதற்கு நாம் தயார்படுத்த வேண்டும்.**

கொடுத்தவன். சங்கிலி மன்னனுக்கு பாதிரியார் இருவரும் கடும் பகையாளிகளாக இருந்தனர். யாழ்ப்பாண வரலாற்றைக் குறித்து வைத்த இப் பாதிரியார் சங்கிலியனின் வீரப்பிரதாபங்களை மறைத்து வைத்துள்ளனர். வரலாற்றை திரிபுபடுத்தி எழுதியுள்ளனர் என்பது வரலாற்றாசிரியர் கருத்தாகும்.

கி.பி. 1544 இல் பாதிரியார் இருவர்களதும் தூண்டுதலின் பெயரில் மன்னாரில் வாழ்ந்த சைவமக்கள் பலர் கத்தோலிக்கர்களாக மதம்மாற்றப்பட்டிருந்தனர். இதையறிந்த சங்கிலி மன்னன் படையனுப்பி மதம் மாற்றிய யாவரையும் தண்டித்தான். இது முதல் யாழ்ப்பாணத்தரசு போர்த்துக்கேயருக்கு எதிராக எழுச்சி பெற்றிருந்தது. இந்த எழுச்சிக்குத் துணையாக சிங்கள மன்னன் மாயாதுன்னை சங்கிலி மன்னனுடன் கை கோர்த்து நின்றான். போர்த்துக்கேயரை யாழ்ப்பாணத்தில் நிலை கொள்ள விடாது தடுப்பதில் கடும் பிரயத்தனங்களை எடுத்திருந்தான். 1545 ஆம் ஆண்டு சீதாவாக்கை கண்டி இராச்சியங்களுடன் தொடர்பைப் பேணியிருந்தான். போர்த்துக்கேயர்களுக்கு எதிராக படையனுப்பி உதவிகள் புரிந்திருந்தான். தமிழ் மன்னன் சங்கிலியன் ஓர் மாவீரன் என்பதை நல்லூர் வீரமாகாளியம்மன் ஆலயத்தருகில் வயல் வெளியில் போர்த்துக்கேய படைகளுடன் நடந்த 10 நாள் வாற்போர் கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது. இப் பத்து நாள் போரிலும் ஆயிரத்து 700 க்கு மேற்பட்ட பறங்கி படைகளின் தலைகள் சங்கிலியனின் வாளுக்கு இரையாகியிருந்தன. இதைக் கண்ட பறங்கி படைகள் கதிகலங்கிப் பின்வாங்கி நின்றன. உயிரைக் காக்க ஒரே வழி சரண்புகுவதேயென எண்ணி நின்றன. 11ஆம் நாள் சங்கிலி மன்னன் 400 பேரைக் கொண்ட படை வீரர்களுடன் மேலும் முன்நோக்கிச் சென்றிருந்தான். அவ்வேளை தரங்க மாடியிலிருந்து துணைப் படைகள் பறங்கிப் படைகளுக்கு உதவிக்கு வர அவர்கள் உற்சாகமடைந்து போராடத்தயாரானார்கள்.

அவ்வேளை மகாபாரதப் போரிலே மாமன்னன் கர்ணனை வீழ்த்த மாயவன் சூழ்ச்சி செய்தது போல் நயவஞ்சகம் மிக்க காக்கை வன்னியன் சங்கிலி மன்னனுடன் நட்புப் பூண்டு காட்டிக் கொடுத்து பறங்கிகளிடம் வெகுமதிகளைப் பெற்றிருந்தான். சங்கிலி சிறைபிடிக்கப்பட்டான். கோவா கொண்டு சென்று தூக்கிலிடப்பட்டான். மறைந்தான் மாவீரன் வீழ்ந்தது யாழ்ப்பாண இராச்சியம் ஆண்டனர் பல நூறு வருடங்கள் அந்நியர்.

வீர பாண்டிய கட்டப் பொம்மனுக்கு நிகராகச் செயற்பட்டு தமிழையும் சைவத்தையும் கட்டிக் காத்த சங்கிலி மன்னன் புகழ் பாடுவோம் பரணி பாடுவோம் அவனது வரலாற்றை எமது சந்ததிக்கு எடுத்துச் சொல்வோம். இப் பணியில் அரசியல்வாதிகளும் கல்விமான்களும் கலங்கரை விளக்காக விளங்க வேண்டும். சங்கிலி மன்னன் இறந்ததாக கருதப்படும் வைகாசித் திங்களில் வரும் அட்டமி பூராட்டாதித்திதியில் சிரார்த்த கிரியையை நாட்டின் பல பாகங்களிலும் அனுஷ்டிப்போம். ஆண்ட பரம்பரை மீண்டும் ஆள வேண்டும். அடுத்த சந்ததியினரை அதற்கு நாம் தயார்ப்படுத்த வேண்டும். அனைவரும் இணைவோம் அருந்தமிழ் வீரம் வளர்ப்போம்.






## கழிவுப்பொருள்கள் மீள்சுழற்சி கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 11

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தில் மீள் சுழற்சி செய்யப்பட்ட கழிவுப் பொருள்களின் கண்காட்சி கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

சர்வதேச சுற்றாடல் தினத்தையொட்டி மீள்சுழற்சியை ஊக்குவிக்கும் வகையில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் கண்காட்சி முன்னெடுக்கப்பட்டது. கண்காட்சியில் 20 பிரிவு உத்தியோகத்தர்கள் தமது கைவினைப் பொருள்களைக் காட்சிப்படுத்தியிருந்தனர். சிறந்த பொருள்களுக்கு பரிசில்களும் கையளிக்கப்பட்டன. (ச-66)

## நல்லிணக்க மேம்பாடு; கிளிநொச்சியில் நிகழ்வு

கிளிநொச்சி, ஜூன் 11

தமிழ்- சிங்கள அரச அலுவலர்களிடையே இன நல்லிணக்கம் மற்றும் மொழி, கலாசாரத்தை வலுப்படுத்தும் வகையிலான நிகழ்வொன்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் மொழிகள் கற்கைபீட மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இந்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் அநுராதபுரத்தில் பணியாற்றும் தமிழ் அலுவலர்கள் மற்றும் கிளிநொச்சியில் கடமையாற்றும் சிங்கள மொழி அலுவலர்கள் பங்கேற்றனர்.

இதன்போது பௌத்த மதத் தலைவர்கள் மற்றும் சிங்கள மொழி அரச அலுவலர்களைத் தமிழ் கலாசார முறைப்படி தமிழ் அலுவலர்கள் வரவேற்றனர்.

தொடர்ந்து அவர்களுக்கு கும்பம் வைத்தல், கோலமிடுதல், ஆரத்தி உள்ளிட்ட தமிழர் கலாசார முறைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டன. இறுதியில் இரு தரப்பு கலாசார உணவுகளும் பரிமாறப்பட்டன. (ச-27,113)

## பழுதடைந்த அரிசி விற்பனை
## தட்டிக்கேட்டவர் மீது வர்த்தகர் தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஜூன் 11

பழுதடைந்த அரிசியை விற்பனை செய்துள்ளீர்கள் எனத் தட்டிக்கேட்டவர் மீது வர்த்தகர் ஒருவர் தாக்குதல் நடத்தியதில் தாக்குதலுக்கு உள்ளானவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் ஊர்காவற்றுறையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

நுகர்வோர் ஒருவர் அரிசியை வாங்கிச் சென்று சமைக்க முற்பட்டபோது பழுதடைந்த அரிசியை விற்பனை செய்திருந்தமை தெரியவந்தது. அதனையடுத்து வர்த்தகரிடம் நியாயம் கேட்டபோது வர்த்தகர் குறித்த நபரைத் தாக்கியுள்ளார். சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து ஊர்காவற்றுறை பொலிஸார் வர்த்தகரைக் கைது செய்துள்ளனர். (ச-23)

## மானிய மண்ணெண்ணெய் முல்லையில் பகிர்ந்தளிப்பு

முல்லைத்தீவு, ஜூன் 11

சீன அரசாங்கத்தால் இலங்கைக்கு மானிய அடிப்படையில் வழங்கப்பட்ட மண்ணெண்ணெய் முல்லைத்தீவு மீனவர்களுக்கு இலவசமாக கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டது.

படகொன்றுக்கு 75 லீற்றர் வீதம் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரத்து 113 மீனவர்களுக்கு இந்த மானிய மண்ணெண்ணெய் பகிர்ந்தளிக்கப்பட்டது. முல்லைத்தீவு தொடக்கம் கொக்கிளாய் வரையான பகுதிகளில் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு மானிய எரிபொருள் வழங்கல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப்பணிப்பாளர், கடற்றொழில் சம்மேளனத் தலைவர், மீனவ அமைப்புக்களின் தலைவர்கள் ஆகியோரின் பங்கேற்புடன் மீனவர்களுக்கு மானிய எரிபொருள் வழங்கப்பட்டது. (ச-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மனிதத் தொல்லை!

**2022**ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களுக்குள் நாட்டில் சுமார் 93 மில்லியன் தேங்காய்கள் குரங்குகளால் அழிக்கப்பட்டிருக்கின்றன என்று வெளிப்படுத்தியுள்ளார் விவசாயத்துறை அமைச்சரான மஹிந்த அமரவீர. குரங்குகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பான பிரேரணை நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் விவாதிக்கப்பட்டிருக்கின்றது. இதன்போதே இந்த அச்சுறுத்தும் புள்ளிவிவரம் விவசாயத்துறை அமைச்சரால் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால், இந்த விவசாயப் பேரழிவுக்குக் குரங்குகள்தான் காரணமா? என்ற சிந்தனையை – தெளிவை எம்முள் நாம் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்.

இலங்கையில் விவசாயிகளுக்கும் வன விலங்குகளுக்கும் இடையிலான வாழிட மோதல் இன்று நேற்று நடப்பதல்ல. நீண்டதும் நெடியதுமான தொடர்கதை இது. கடந்த பலவருடங்களாகவே வன விலங்குகளால் குறிப்பாக யானைகள் மற்றும் குரங்குகளால் ஏற்படும் பயிரழிவுகள் மற்றும் விவசாய அழிவுகள் தொடர்பில் விவசாயிகள் தொடர்ச்சியாக முறையிட்டுக்கொண்டுதான் உள்ளனர். இந்த வாழிட மோதலால், விவசாயத்தைக் கைவிட்ட விவசாயிகளும், வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களும் ஏராளம். ஆனால், இந்த வாழ்விட மோதல் ஏன் ஏற்படுகின்றது? எதற்காக குரங்குகளும் வன விலங்குகளும் மனித வாழ்விடங்களுக்குள்ளும், விவசாய நிலங்களுக்குள்ளும் ஊடுருவுகின்றன என்ற கேள்விகளை – நியாயமான அடிப்படையில் பரிசீலனை செய்வதற்கு அரசாங்கம் தயாரில்லை.

உண்மையில் விலங்குகள் மனிதர்களுடைய வாழ்விடங்களுக்குள் வரவில்லை. மனிதர்களாகிய நாம்தான் விலங்குகளின் வாழ்விடங்களுக்குள் எதேச்சதிகாரமாக அத்துமீறியிருக்கின்றோம். கடந்த பத்து வருடங்களுக்கு முன்பிருந்த வனாந்தரங்கள் இன்றில்லை. தமிழர் தாயகமாக இருந்தாலும் சரி அல்லது ஒரு நாடாக இலங்கையாக இருந்தாலும் சரி எங்கும் கட்டடக் கானகங்கள்தான் இப்போது எஞ்சி நிற்கின்றன. காலாகாலமாக விவசாயப் பகுதிகளாக இருந்த நிலங்களை இப்போது கட்டடங்கள் ஆக்கிரமித்திருக்க, விவசாய நிலங்கள் வனாந்தரங்களில் புதிதாக உருவாக்கப்படுகின்றன. இதன் விளைவாக உணவுப்போட்டியும் உறைவிடப்போட்டியும் விலங்குகளிடத்தில் மனிதர்களின் செயற்பாட்டால் வலிந்து ஏற்படுத்தப்படுகின்றது. தமக்கான உணவு மூலங்கள் அழிக்கப்பட்ட நிலையில், உறைவிடங்கள் இழக்கப்பட்ட நிலையில், இதன் தொடர்ச்சியாகத்தான் உணவைத் தேடியும், உறைவிடங்களைத் தேடியும் விலங்குகள் மனித வாழ்விடங்களுக்குள்ளும் விவசாய நிலங்களுக்குள்ளும் ஊடுருவுகின்றனவே அன்றி இதில் குரங்குகளின் யானைகளின் தவறென்று என்னதான் உள்ளது?

விவசாயிகளுக்கு உதவவேண்டுமாயின், விவசாய உற்பத்திகள் உறுதிப்படுத்தப்படவேண்டுமாயின் வனாந்தரங்களின் இருப்பை முதலில் உறுதிசெய்யுங்கள். காடுகளின் அழிப்பைத் தடுத்து நிறுத்துங்கள். காடுகளின் இருப்பும் அளவும் குறுகக்குறுக விலங்குகள் காடுகளை விட்டு வெளியில் செல்லும் என்பது இயற்கை நியதி. யதார்த்தமும் அதுவே. எல்லாவற்றையும் விட, சீனாவுக்கு ஒரு லட்சம் குரங்குகளை வழங்கும் திட்டம் அண்மையில் பரிசீலிக்கப்பட்டது. எனினும் சூழலியல் ஆர்வலர்களின் எதிர்ப்பையடுத்து அந்தத் திட்டம் தற்போது தற்காலிகமாகக் கிடப்பில் போடப்பட்டுள்ளது. சீன விசுவாசத்தின் காரணமாக, குரங்குகளை சீனாவுக்கு வழங்குவதில் இருக்கும் சட்டச்சிக்கல்களையும் – எதிர்ப்புக்களையும் சமாளித்து 'வெற்றிகரமாக' அவற்றை சீனத்தை நோக்கி அனுப்பி வைப்பதற்கான முன்னகர்வுதான் இந்த 'குரங்குக் கட்டுப்பாட்டுப் பிரேரணையா' என்ற நியாயமான சந்தேகமும் எழாமலில்லை.

### நாளொரு நல்வார்த்தை

"சில நேரங்களில் உங்கள் மகிழ்ச்சியே உங்கள் புன்னகைக்கு மூலமாக இருக்கும், ஆனால் சில நேரங்களில் உங்கள் புன்னகையே உங்கள் மகிழ்ச்சிக்கு மூலமாக இருக்கும்"

– நட் ஹன்



# பாடப்புத்தகங்களில் இனி பாலியல்கல்வி வேண்டும்

## டயானா வலியுறுத்து

**கொழும்பு, ஜூன் 11**

**பாலியல் மற்றும் பாலியல் நோய் தொடர்பில் போதிய தெளிவு இல்லாத காரணத்தால்தான் பெரும்பாலான சிறுவர்கள், இளைஞர்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளார்கள். ஆகவே நாட்டின் கல்வி முறைமைக்குள் பாலியல் கற்கை உள்வாங்கப்படவேண்டும் என இராஜாங்க அமைச்சர் டயானா கமகே வலியுறுத்தினார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதாரப் பாதிப்பு மற்றும் ஏனைய காரணிகளால் பிள்ளைகளின் மந்த போசணை வீதம் சடுதியாக அதிகரித்துள்ளது. ஆகவே இது நாட்டின் எதிர்காலத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும். பிள்ளைகளின் சுகாதாரம் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியது அரசாங்கத்தின் முக்கியமான பொறுப்பாகும்.

மாணவர் பருவத்தில் உள்ள சிறுவர்களில் 11 சதவீதமானோர் குடும்ப வறுமை காரணமாக பாடசாலைக் கல்வியில் இருந்து இடை விலகியுள்ளார்கள். ஆகவே மாணவர்களின் கல்வியைத் தீர்மானிக்கும் ஒரு காரணியாக ஏழ்மை காணப்படுகிறது. ஆகவே இவ்விடயம் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

மாணவர்களின் சுகாதாரத்துடன், பாலியல் கல்வி முறைமை தொடர்பில் நடப்பு நிலைவரத்துக்கு ஏற்ப புதிய கொள்கைளை வகுக்க வேண்டும். பாலியல் தொடர்பில் போதிய விளக்கம் மற்றும் தெளிவு இல்லாத காரணத்தால் பிள்ளைகள் பெரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளார்கள். கடந்த காலங்களில் இவ்வாறான பல சம்பவங்கள் நாட்டில் பதிவாகியுள்ளன. ஆகவே இதனை மாணவர்களுக்கு நிச்சயம் கற்பிக்க வேண்டும் - என்றார். (ம)

# நாடு முன்னேற வேண்டுமாயின் தமிழர்களுக்குத் தீர்வு அவசியம்

## சந்திரிகா தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 11

தமிழ் மக்கள் பல்லாண்டு காலமாக எதிர்நோக்கிவரும் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வை முன்வைக்காது இந்த நாட்டை முன்னேற்றமுடியாது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்துக் கட்சிகளுடனும் பேசி புதிய அரசமைப்பினூடாக அரசியல் தீர்வைக்காண முனைய வேண்டும். அதற்கு நாம் முழுமையான ஆதரவு வழங்குவோம். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக்கொண்டு தீர்வுக்கான பேச்சை ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்தால் அந்தப் பேச்சு தோல்வியில்தான் முடிவடையும். தீர்வு விடயத்தில் தமிழ்க் கட்சிகளை இனிமேல் ஏமாற்ற முடியாது. தமிழ்த் தலைவர்கள் இந்த விடயத்தில் மிகவும் அவதானமாக உள்ளார்கள் - என்றார். (சு-22)

**நாளை**

12.06.2023
திங்கட்கிழமை
வைகாசி 29

சுபநேரம் : 11.52 – 01.22
ராகுகாலம் : 07.22 – 08.52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

4 செற் . 2 செற் ஆர்மோனியங்கள் . வயலின் விற்பனைக்கு உண்டு.

**077 360 8826**

## காணி விற்பனைக்கு

யாழ். ஆறுகால்மடம் பகுதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(ஓட்டுமடச் சந்திக்கு அண்மையில்)

தொடர்பு: **077 11 08 451**

## வீடு தேவை

4 பேர் கொண்ட அரச அலுவலர் குடும்பத்திற்கு நல்லூர் கல்வியங்காடு, திருநெல்வேலி சுற்றாடலில் வீடு தேவை.

தொடர்புகளுக்கு:
**076 279 0015**

## விற்பனைக்கு

மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் (மொத்தமாக) மற்றும் கடைக்குரிய றாக்கைகள் என்பன விற்பனைக்கு உண்டு.

**077 673 8033, 075941 3565**

(CS25204)(J-1)

## வீடு வாடகைக்கு உண்டு

இரத்தினபுரம் 1ம் ஒழுங்கை கிளிநொச்சியில் சகல வசதிகளுடனும் அமைந்த வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- **0779152223**

(CS40117)(J-1)

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலிச் சந்தியில் இருந்து கொக்குவில் செல்லும் வழியில் ஆடியபாத வீதியில் 200 மீற்றர் தூரத்தில் 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு. (15 அடி அகலமான பாதை)

(CS25205)(J-1)

**077 431 6132**

சுதந்திரபுரத்தில்

# இராணுவத்தால் கொல்லப்பட்டோரின் 25ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்று

புதுக்குடியிருப்பு, சுதந்திரபுரத்தில் 1998 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 10ஆம் திகதி இலங்கை வான் படையின் வான் தாக்குதல் மற்றும் இராணுவத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட எறிகணைத் தாக்குதல்களில் படுகொலை செய்யப்பட்ட 33 பொது மக்களின் 25ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று கடைப்பிடிக்கப்பட்டது. தாயக நினைவேந்தல் அமைப்பின் ஏற்பாட்டில் முல்லைஈசனின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஈகச்சுடரை இரண்டு மாவீரர்களின் தந்தையான முடியாண்டி ஏற்றி வைக்க தொடர்ந்து உயிரிழந்தவர்கள் நினைவாக சுடர் ஏற்றி மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன், உள்ளூராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்கள், உயிரிழந்த பொதுமக்களின் உறவினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ-ஒ.19)

## ROOM வாடகைக்கு தேவை

யாழ். மாவட்டத்தை தாண்டிய பிரதேசங்களில் மாணவர் ஒருவருக்கு Room எதிர்பார்க்கப் படுகின்றது.

**T.P:077 8399 382**

## வீடு வாடகைக்கு தேவை

யாழ். நகரை அண்டிய பகுதியில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்கு தேவை.

தொடர்பு: **077 6581 506**

(CS25202)(J-1)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்பான வாழ்வில் 27.05.1945

ஆண்டவன் அழைப்பில் 22.05.2022

## அமரர் வல்லிபுரம் விக்னேஸ்வரன்



"அன்பின் குலவிளக்கு"
அன்பினால் எம்மை அரவணைத்த தெய்வமே!
அறிவினை புகட்டி அழகாக்கிய குருவே!
அத்தனை உறவையும் அன்பாக மதித்து!
அகிலத்தின் பெருமையுடன் அமைதியாய்
வாழ்க்கையிலே!
அனைவரையும் மறந்து ஆண்டவனடி
சேர்ந்ததேனோ ஐயனே!

மனிதப் பிறப்பின் மகத்துவம் நிறைத்தீர்கள்!
மண்ணின் பெருமையை மனதிற் பதித்தீர்கள்!
மனதார இறைதொண்டை மகிழ்ச்சியுடன்
தொடர்ந்தீர்கள்!
மறவாது சொந்தங்களை மனதால் நேசித்தீர்கள்!
மற்றவர்க்கு உதவும் நற்பண்பை
வளர்த்துநிற்கையிலே
எமைப் பிரிந்ததேனப்பா

தந்தையாய் இருந்து தம்பணி புரிந்து!
தலைவனாய் மகிழ்ந்து தாயைக் காத்து!
மகனாய், சகோதரனாய் கணவனாய்,
அண்ணாவாய், தம்பியாய்!
மருமகனாய், மாமனாய், மைத்துனராய்,
பெரியப்பாவாய் சித்தப்பாவாய் தோழனாய்!
மகிழ்வுடனே அப்பப்பாவாய், அம்மப்பாவாய்!
அத்தனை உரிமையுடன்
இன்பமாய் வாழ்க்கையிலே இறைவன்
அழைத்ததேனோ!

அத்தனை பாசத்தையும் அள்ளி நிறைத்து விட்டு
ஆண்டவன் அடி சேர்ந்து ஆண்டொன்று
ஆனதப்பா
மறக்க முடியவில்லை நீங்கள்
அனைவருடனும் கதைத்து கதைத்து
உறவோடு உரையாடி உயிர் பிரிந்த
நிமிடங்களையும் .

எங்கள் குலதெய்வமே!
என்றும் உங்கள் நினைவுகளை தாங்கியவாறு....
ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
எம்பெருமானைப் பிரார்த்திப்போமாக!

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!**

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

பிரதேச வைத்தியசாலை அச்சுவேலி

## நோயாளர் நலன்புரிச்சங்க பொதுக்கூட்டம்

காலம் : 25.06.2023
நேரம் : பிற்பகல் 3.00 மணி
விடயம் : புதிய நிர்வாக சபை உறுப்பினர்களை தெரிவு செய்தல்

உறுப்பினர்கள் யாவரும் அங்கத்துவப் பணத்தினை செலுத்துவதுடன் புதிய உறுப்பினர்களும் அன்றைய தினம் மதியம் 12.00 மணிவரை பணம் செலுத்தி சேர்ந்துகொள்ளலாம். மேலதிக விபரங்களை வைத்தியசாலை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

திரு.இ.தனுசன்
செயலாளர்.
நோயாளர் நலன்புரிச்சங்கம்.
பிரதேச வைத்தியசாலை, அச்சுவேலி.
11.06.2023

## 31ம் நாள் நினைவஞ்சலி

(கனடாவில் காலஞ்சென்ற)

**அமரர் சதாசிவம் - பரமலிங்கம் (கிளி)**

மலர்வு 07.06.1959

உதிர்வு 11.05.2023



கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கன காலம் இருப்பீர்கள்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்போம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS25203)(J-1)

## காணி விற்பனைக்கு

- பருத்தித்துறையில் உபய கதிர்காமம் கோயிலுக்கு முன்பாக காணி சுற்று மதிலுடன்.
- சண்டிலிப்பாய் சந்தியில் இருந்து 70 m தூரத்தில் வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு.

Contact number
Heman Antony Rajeswaran - +94 74 002 2214

(CS/50733)AH-1

## பணியாளர் தேவை

SV முருகேசு அங்கர் விற்பனை முகவர் நிறுவனத்துக்கு **கணக்காளர் மற்றும் கணினி இயக்குநர்கள்** தேவைப்படுவதால் குறித்த வேலை தேவைப்படுவோர் (ஆண்/ பெண்) எமது அலுவலகத்துக்கு நேரில் வரவும். **(ஞாயிறு தவிர்த்து)**

**முகாமையாளர்,**
**SV முருகேசு அங்கர் விற்பனை முகவர் நிறுவனம்,**
**இல.154, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.**
**021 492 5825, 021 222 2991**

(CS/50767)AH-1

## நீர்க்கசிவைத் தடுப்பதற்கு

உங்கள் கட்டடங்கள் மற்றும் புதிதாகக் கட்டப்படும் கட்டடங்களில் ஏற்படும் நீர்க்கசிவைத் தடுப்பதற்கு உலகத் தரம் வாய்ந்த இரசாயனப் பொருட்களைக் கொண்டு 10 வருட உத்தரவாதத்துடன் சீர் செய்து தருவோம்.

**Finex** (சகல கட்டட இரசாயனப் பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம்)

**போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.**

North and East Engineering
55 Stanly Road, Jaffna, Srilanka.
FINEX
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northandeastengineering.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு

கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளியில் வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும். சுண்டுக்குளி பாடசாலையில் இருந்து 250m தூரத்தில் உண்டு.

**077 942 2447**

(CS50784) AH-1

## கடை வாடகைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் சந்தியில் 30 அடி நீளம் 13 அடி அகலம்கொண்ட கடை வாடகைக்குண்டு

**075 037 5429**

(CS 50790) N-1

## வேலையாள் தேவை

யாழ். நகரிலுள்ள திரையரங்கிற்கு வேலையாள் தேவை.

வயது : 25-55

தொடர்பு: **077 393 5909**

(காலை 9.30 - மாலை 5.30 வரை)

## கடை வாடகைக்கு

கொழும்பு 11 புறக்கோட்டை 5 ஆம் குறுக்குத் தெருவில் 2 மாடிக் கடை வாடகைக்குண்டு. (12x40) அடி.

**075 302 7874**
**075 840 0284**

(CS 50778) AH-1

## காணி விற்பனைக்கு

சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி, இராசவீதியில் 6 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

இ.நவநீதன்
**077 842 5421**
**077 788 8849**

CS(50777)AH-1

## காணியும் வீடும் உடன் விற்பனைக்குண்டு

அரியாலை சுப்பிரமணியம் வீதியில் 3/4 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. 5 அடிப்பாதை மாத்திரமே உண்டு. தேவையானவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

**076 227 2343**

(CS/50779)AH-1





## யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசித் தமிழ் மன்னன், 2 ஆம் சங்கிலியனின் 404 ஆவது நினைவு தினம்

**இடம்: சங்கிலி மன்னன் சிலையடி முத்திரைச்சந்தி**

**காலம் : 11.06.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி**

**சிரார்த்தக் கிரியை மாலை 2.00 - 3.00 மணிவரை கீரிமலையில் இடம்பெறும்.**

சைவப் பெருமக்கள்
அணிதிரண்டு வாரீர் சைவம் காத்த
மன்னனுக்கு அஞ்சலி செய்வோம்!



தலைவர்

**செயலாளர்**
**சங்கிலி மன்னன் நினைவுதினக் குழு**

**077 960 3001**



செயலாளர்

(CS 25181)(N-1)

# மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 11 . 1951



மறைவு 10 . 06 . 2023

## நாகலிங்கம் மகேந்திரன்

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் உடுவில் தெற்கு பாலாவோடையை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் மகேந்திரன் அவர்கள் நேற்று (10.06.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பஞ்சலிங்கம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மினிதேவியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான செல்வராசா, தங்கராசா மற்றும் பரமேஸ்வரி (சுதுமலை), ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பத்மநாதன், அமரர் பரமநாதன், அமரர் பத்மராணி, பத்மலோஜினி, பத்மரஞ்சினி, பரமானந்தன், பவானி, பகீரதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கபிலன், கௌந்தி (கொழும்பு), ரமணன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், வாகீஸ்வரி, சார்ள்ஸ், கீர்த்தனா ஆகியோரின் மாமனாரும், கவிநஜா, அனுஷாந், ஜஸ்வினி, எரோன், அபிஷா, அட்சயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2023) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மகன் - 074 124 1828**
**மகள் - 077 631 8331**
**ரமணன் - 0033 606 756929**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 25202) A-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 12 . 1956



மறைவு 04 . 06 . 2023

## நிற்குணானந்தன் சக்திரூபன்

நீர்வேலி மத்தியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட நிற்குணானந்தன் சக்திரூபன் கடந்த (04.06.2023)ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் நீர்வேலி மத்தியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நிற்குணானந்தன் - புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், உடுவில் மல்வம் முதலாம் குறுக்கு வீதியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா (சுப்ரமணியம்) - இரத்தினம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், நாகலட்சுமி (ஜெயந்தி)யின் அன்புக் கணவரும், அக்சலாவின் அன்பு தந்தையும், ஹைமா, காலஞ்சென்ற மகாரூபன் மற்றும் ஆனந்தரூபன், நிர்த்தனரூபன், ஊர்மிளா ஆகியோரின் அன்பு சகோதரரும், ஜெயக்குமரன், சுபாஜினி, காலஞ்சென்ற றொபின்திரன், சிவயோகநாதன், கேதீஸ்வரநாதன், கோமளகாந்தி, தர்மபூபதி, விஜயலக்ஷ்மி, காலஞ்சென்ற பிரபாகரன், கிரிதரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கௌதமன், லாவன்யன் ஆகியோரின் அன்பு மாமனாரும், வித்தியாயினியின் பாசமுள்ள சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (19.06.2023) திங்கட்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


(CS 9343) AH-1

**தகவல்: குடும்பத்தினர்.**

**011 - 258 4473 (கொழும்பு), 0044 7424 733441 (லண்டன்)**

# மரண அறிவித்தல்

தோற்றம் 09 - 02 - 1956



மறைவு 09 - 06 - 2023

## ஆழ்வார் புலேந்திரன்

காரைநகரைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட ஆழ்வார் புலேந்திரன் அவர்கள் நேற்று முன்தினம் (09.06.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வார் நாகமுத்து தம்பதிகளின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, ஏரம்பு, இராசையா (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கோகிலமணியின் அன்புக் கணவரும், துசிதா (பிரான்ஸ்), துசாயினி (லண்டன்), கபிலாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும், டக்சாகரன் (பிரான்ஸ்), சாய்சங்கர் (லண்டன்), செந்தூரன் ஆகியோரின் அன்பு மாமனும், டக்சித், காவியன், ஆதிரா, கோசிகன் ஆகியோரின் அன்புத் தாத்தாவும், சதாசிவம், காலஞ்சென்றவர்களான துரைராசா, செங்கமலர் மற்றும் மனோன்மணி, காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் றூபி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், றெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: நியூ லங்கா பாம்**
**பலாலி வீதி, ஊரெழு மேற்கு, பிள்ளையார் கோயில் வீதி, கணேசா பாடசாலை அருகில்**
**077 612 9343**

**நியூ லங்கா பாம்**
**கிளை:**
**K.K.S. வீதி, இணுவில்**

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் (V), 1984. அத்த நட்சத்திரம். நிரந்தர வருமானம் பெறும் மணமகனுக்கு உள்நாடு அல்லது வெளிநாட்டில் மணமகள் தேவை.
யாழ் நகரில் மணமகனுக்குச் சொந்தமான வீடும் உண்டு.

**071 330 1133,**
**077 349 0204**

(CS/50740)AH-1

## திருமண சேவை

உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் தெரிவுகளில் விரைவான சேவைக்கு எமது திருமண சேவையை நாடுங்கள்.

**077 964 9245**

## சமையலாளர் தேவை

யாழ் நகரில் இயங்கும் Hotel ஒன்றுக்கு நன்கு சமைக்கத் தெரிந்த சமையலாளர் தேவை.
(சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்)

**077 608 2371**
**075 242 1047**

(CS/50770)AH-1

## ஐரோப்பிய நாடுகளுக்கான Tourist விசா

**Schengen Visa** 27 நாடுகளுக்கு பயணிக்கலாம்
சுற்றுலா விசாவினை பெற்றுக்கொள்ள நாட வேண்டிய நம்பகரமான ஒரே இடம் EUROPE LINK

• வயதெல்லை 27க்கு மேல் | விசாவிற்கு பின் கட்டணம்



Italy | France | Greece | Switzerland

பதிவுகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்

EUROPE LINK
0742 555 319 | 0117 005 877
0763 915 660
info@europelinkedu.com
www.europelinkedu.com

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி. சனசமூக நிலையத்துக்கு அருகில் 4 அறைகள் மற்றும் பிரத்தியேக காரியாலய அறையுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும்.
வாகனத் தரிப்பிட வசதி உண்டு.
நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

**077 971 5044**

(CS/9347)AH-1

## யா/ அனலைதீவு வடலூர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை பழைய மாணவர் சங்கம் உருவாக்குதலும் நிர்வாகத் தெரிவும்

யா/ அனலைதீவு வடலூர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை **பழைய மாணவர் சங்கமும் புதிய நிர்வாகமும்** உருவாக்கும் பொருட்டு **எதிர்வரும் 26.06.2023 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பாடசாலை மண்டபத்தில்** நடைபெற இருக்கும் பொதுக்கூட்டத்தில் பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்
ச.விக்கினேஸ்வரி

(CS/50774)AH-1

## அவுஸ்திரேலியாவில் உயர் கல்வியைத் தொடர மாணவர்களுக்கு ஓர் வாய்ப்பு

**Courses available:**

Diploma / Degree

- Hospitality Management
- Business Management
- Leadership and Management
- Early Childhood Education and Care
- Commercial Cookery
- Building and Construction

**Requirements:**

1. Manimum Age limit 18 to 21
2. GCE
3. IELTS 6

WANT TO VISIT RELATIVES IN AUSTRALIA - CONTACT US

தொடர்புக்கு: HOTLINE: 076 622 8891
WhatsApp: 075 833 6540
076 907 7757

(CS/9346)AH-1

Australian Migration Consultants
41 1/2, George R De Silva Mw, Colombo 13
011 243 7285, Email: sl.austvisa@gmail.com




## பிரமாண்டமான முறையில் Restaurant மற்றும் Free Delivery தொடங்கப்படுகிறது

**SAWAL RICE**
முதல் முதலில் யாழ்ப்பாணத்தில்
Family Pack 6 Potion
சவல் ரைஸ் அறிமுகம்
(நண்டு, கணவாய், மீன், இறால், கோழி, முட்டை உள்ளடக்கிய சவல் சாப்பாடு

1KM DELIVERY FREE

விலை 5500/-



அனைத்து விதமான வைபவங்களும் ஆடம்பர முறையில் செய்து தரப்படும்
மண்டபம் முற்றிலும் இலவசமாக தரப்படும்

T.P: 074 084 0631

- ஐந்து சிக்கன் பிறைட் றைஸ்க்கு 1Mega Free
- எட்டு சிக்கன் பிறைட் றைஸ்க்கு (இலவசமாக 2 பிறைட் ரைட் வழங்கப்படும்)



பாரம்பரிய மண்பானை பிரியாணி ஆறு சுவையுடன்

1 Potion Rs. 1000
2 Potion Rs. 2800 — Half Chicken, Boiled Egg Malvie Fish Sambol, Raitha
3 Potion Rs. 5100 — Full Chicken Boiled Egg, Maldive Fish Sambol, Raitha, Chatny, Papadam

ஐந்து நட்சத்திர Hotel ன் அனுபவம் வாய்ந்த சமையல் காரரால் அறுஞ்சுவை உடைய உணவை இலவசமாக நீங்கள் இருக்கும் இடத்திற்கு (1km) கொண்டுவந்து தரப்படும்

# ஞானம்ஸ் ஹோட்டல்


No. 293,301, Clock Tower Road, Jaffna.
021 222 0630 / 021 222 0631
076 222 0632 / 074 084 0631

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சோமசுந்தரம் லோகேந்திரன்

**(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம்)**



இணுவில் கிழக்கு, சிவகாமி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், கே.கே.எஸ் வீதி, இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் லோகேந்திரன் நேற்றுமுன்தினம் (09.06.2023) வெள்ளிக் கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் - யோகம்மா தம்பதிகளின் மூத்த புதல்வரும், காலஞ்சென்ற அம்பலவாணர் - (காரைக்கால் சாமியார்) - பரமேஸ்வரி தம்பதிகளின் மூத்த மருமகனும், நாகேஸ்வரியின் (ரதி) அன்புக் கணவரும், தர்ஷிகாவின் (ஆசிரியை - யா/ மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை) அன்புத் தந்தையும், ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (ஆசிரியர் - யா/ அருணோதயக் கல்லூரி) பாசமிகு மாமனாரும், இந்திராணி, காலஞ்சென்ற கமலபூபதி மற்றும் தெய்வேந்திரன், இந்திரலீலா, வசந்தகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வரத்தினம், மங்களேஸ்வரன், கமலரஞ்சினி, இரத்தினேஸ்வரன், கருணதாஸ், ஸ்ரீரஞ்சினிதேவி (ராணி), கதிர்காமலிங்கம் (கண்ணன்), தட்சாயினி (ஆனந்தி) ஆகியோரின் மைத்துனரும், சரவணபவன், அருள்நேசன் ஆகியோ ரின் சகலனும், மீனலோஜினியின் சகோதரனும், லிதுசாயி, கிசோராம் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (11.06.2023) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04.04.1950 | 09.06.2023 |

(CS/50783)AH-1

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

க. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (மருமகன்) -077 691 6225

# மரண அறிவித்தல்

## திருமதி தவமணி கந்தையா

சாவகச்சேரி வடக்கு, ஐயா கடையடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி தவமணி கந்தையா அவர்கள் நேற்று (10.06.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் கந்தையா (தபாலதிபர்) வின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பொன்னையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற இராமலிங்கம் அபிராமி தம்பதிகளின் அன்பு மருமகளும், Dr. அனுசியா கந்தையா (அமெரிக்கா), Dr. அனுசாந்தினி கந்தையா, அனுராதா ஜெயரவி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயரவியின் (கனடா) அன்பு மாமியாரும், சௌம்யா (கனடா), மதுஷான் (கனடா) ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம், இராசம்மா, பூமணிதேவி மற்றும் சரவணமுத்து, தியாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2023) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 06.02.1941 | 10.06.2023 |

**தகவல்:**

**Dr. அனுசியா** (USA) - **0019 17589 0026**
**Dr. அனுசாந்தி - 021 227 0189, 074 234 6562**
**அனுராதா** (Canada) - **001 514 334 1351**

**ஐயா கடையடி,**
**சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி.**

(CS/50759)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## செல்வி இராசேந்திரன் நிசாந்தி

(மாணவி - யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி - A/L 2024)

**தாய் மடியில்** 10.04.2005 **இறைவனின் அடியில்** 07.06.2023



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி இராசேந்திரன் நிசாந்தி கடந்த (07.06.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இராசேந்திரன் - நிரோயினி தம்பதிகளின் அன்பு மகளும், ஜதுர்ஷா, யதுஷன் ஆகியோரின் அன்புத் தங்கையும், ஹரிஸ், அபினாஸ் ஆகியோரின் அன்புச் சித்தியும், நித்தியானந்தம் பாலஜோதியின் அன்புப் பேர்த்தியும், தமயந்தன் - நித்தியா தம்பதிகளின் பெறாமகளும், தயாபரனின் அன்பு மருமகளும், தியா, றியான் ஆகியோரின் அன்பு அக்காவும், ஜெயக்குமாரின் அன்பு மச்சாளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் இல.37, உடையார் லேன், கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/50759)AH-1

**தகவல்: குடும்பத்தினர்.**

அம்மா - 077 356 1169
ஜதுர்ஷா - சகோதரி -077 841 9485
யதுஷன் - சகோதரன் - +1416 454 7149

அபிவிருத்தியை எட்டுவதற்கு

# சமையற்கலை கற்கைகளுக்கு நாட்டில் தனியொரு பாடசாலை

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



**கொழும்பு, ஜூன் 11**

**நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ள உலகம் முழுவதிலும் உள்ள சுற்றுலாப் பயணிகளை ஈர்த்துள்ள இலங்கையின் தனித்துவமான சமையற் கலையை மேம்படுத்துவதற்கு பல்வேறு புதிய வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும். இந்தத் துறையின் முன்னேற்றத்துக்காக சமையற்கலை தொடர்பான பாடசாலையொன்று விரைவில் நிறுவப்படும்- என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான 'சமையற்கலை மற்றும் உணவுக் கண்காட்சி'யில், கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: நாட்டில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதில் நாம் விசேட கவனம் செலுத்தியுள்ளோம். முதற்கட்டமாக நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கி வருமானத்தை அதிகரிப்பதே எமது திட்டம். சுற்றுலா வர்த்தகத்தை முன்னெடுத்து கட்டணத்தை அதிகரிக்க வேண்டுமாயின், அவர்களுக்கு நல்ல சேவையை நாம் வழங்க வேண்டும். அதற்குப் பல்வேறு விடயங்கள் உள்ளபோதும் கவர்ச்சிகரமானது இலங்கையின் விருந்தோம்பல் மற்றும் எமது தனித்துவமான சமையற்கலைதான்.

சுற்றுலாத்துறை விரிவுபடுத்தப்படும்போது, நாட்டில் போதுமான சமையற் கலைஞர்கள் இருக்க வேண்டும்.

இன்று நாட்டின் மனித வளம் பெருமளவில் நாட்டைவிட்டு வெளியேறுவதைக் காணமுடிகிறது. நாட்டில் சமையற் கலைஞர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். அவர்களுக்கு சர்வதேசதரத்திலான 'நட்சத்திர ' அடையாளங்களை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும். புதிய சுற்றுலாக் கொள்கையை தயாரிக்கும்போது, சுற்றுலா அமைச்சுடன் இதுகுறித்து கலந்துரையாடவுள்ளேன். சமையற் கலை மற்றும் சமையற் கற்கைகளுக்கு என புதிய பாடசாலையொன்றை ஆரம்பிக்க நாம் எதிர்பார்த்துள்ளோம். இதற்கு தனியார் துறையினரும் பங்களிப்பாளர்கள் என எதிர்பார்க்கப்படுகிறது - என்றார். (ச-இ)






பாலியல் சமத்துவத்தை வலியுறுத்தி, யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் நேற்று சனிக்கிழமை பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்துக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பேரணி ஆரியகுளத்துக்கு முன்பாக நிறைவடைந்தது. (ம-23)

# ஆணின் சடலம் மீட்பு

கொழும்பு, ஜூன் 11

கொழும்பு, வெள்ளவத்தையில் ஆணின் சடலம் ஒன்று நேற்று சனிக்கிழமை மீட்கப்பட்டுள்ளது என்று வெள்ளவத்தைப் பொலிஸார் தெரிவித்தனர். கோட்டையில் இருந்து தெஹிவளையை நோக்கிப் பயணித்த ரயிலில் மோதுண்டே குறித்த நபர் உயிரிழந்துள்ளார் என ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-22)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# MID YEAR MADNESS

50% வரை தள்ளுபடி

# சேல்

24 மாதங்கள் வரை வட்டியற்ற இலகு தவணைத்திட்டம்

BUY ONLINE Abans.com

இலங்கை சந்தைக்கு ஏற்ற தரமான மற்றும் நீடித்துழைக்கும் உற்பத்திகள்.

இச்சலுகை ஜூன் 20 வரை மாத்திரம்

**LG UHD TV**
புதிய கேமிங் அம்சங்களுடன் துல்லியமான நேரடி காட்சிகளை அனுபவியுங்கள்.
43"
சாதாரண விலை ரூ.279,999
சேல் விலை ரூ.219,999 | தள்ளுபடி ரூ.60,000

**JBL PARTY BOX 310**
செவிகளுக்கு விருந்தளிக்கும் துல்லியமான இசைக்கோர்வைகளை JBL மூலம் அனுபவியுங்கள்.
சாதாரண விலை ரூ.359,999
சேல் விலை ரூ.279,999 | தள்ளுபடி ரூ.80,000

**Abans Audio**
போர்டபல் ஸ்பீக்கர்
சிறந்த பேஸ் ஒலியை அனுபவியுங்கள்.
சாதாரண விலை ரூ.44,999 இலிருந்து
சேல் விலை ரூ.34,999 இலிருந்து | தள்ளுபடி ரூ.10,000 இலிருந்து

**hp**
HP 15S Intel Core i3 - 12th Gen / 4GB RAM/ 256GB SSD /Windows 11 / Micorsoft Office 2021/ 15.6" FHD
சாதாரண விலை ரூ.192,990
சேல் விலை ரூ.172,990 | தள்ளுபடி ரூ.20,000

**octa**
SANETRA 10.1 INCH TABLET
ஒன்லைன் கல்விக்கு மிகச்சிறந்தது
சாதாரண விலை ரூ.56,990
சேல் விலை ரூ.37,990 | தள்ளுபடி ரூ.19,000

**Haier**
ஒற்றைக்கதவு குளிர்சாதனப் பெட்டி
190L
சாதாரண விலை ரூ.140,990
சேல் விலை ரூ.99,990 | தள்ளுபடி ரூ.41,000

**LG**
இன்வெர்ட்டர் SIDE-BY-SIDE குளிர்சாதனப் பெட்டி
659L
பிரம்மாண்ட இடவசதி, அதிக உணவுகளை சேமியுங்கள்.
சாதாரண விலை ரூ.879,990
சேல் விலை ரூ.829,990 | தள்ளுபடி ரூ.50,000

**Abans**
Fully Auto சலவை இயந்திரம்
பெரிய குடும்பத்திற்கு மிகவும் உகந்தது.
7.5KG
சாதாரண விலை ரூ.114,990
சேல் விலை ரூ.79,990 | தள்ளுபடி ரூ.35,000

**Haier Abans**
DIVIDER சகிதம் வரும் இரட்டைக்கதவு செஸ்ட் பிரீஸர்
மின்சாரத்தை குறைக்கும் செயல்திறன்மிக்க வாயுவைக் கொண்டுள்ளது.
200L 300L 400L 710L 719L
சாதாரண விலை ரூ.152,990 இலிருந்து
சேல் விலை ரூ.122,990 இலிருந்து | தள்ளுபடி ரூ.30,000 இலிருந்து

**Whites Haier Abans**
போத்தல் கூலர்
மின்சாரத்தை குறைக்கும் செயல்திறன்மிக்க வாயுவைக் கொண்டுள்ளது.
232L 240L 250L 300L 350L
சாதாரண விலை ரூ.139,990 இலிருந்து
சேல் விலை ரூ.119,990 இலிருந்து | தள்ளுபடி ரூ.20,000 இலிருந்து

**Abans**
பாதுகாப்பு அம்சங்களுடன் வரும் ப்ரீ ஸ்டாண்டிங் குக்கர் (50 CM/ 60CM/ 90CM)
சாதாரண விலை ரூ.182,990 இலிருந்து
சேல் விலை ரூ.89,990 இலிருந்து | தள்ளுபடி ரூ.93,000 இலிருந்து

**mistral**
எயார் கூலர்
வெப்பத்தை தனித்து குளிர்ச்சியை பரப்பும்.
20L
சாதாரண விலை ரூ.99,990
சேல் விலை ரூ.54,990 | தள்ளுபடி ரூ.45,000

**mistral**
இலெக்ட்ரிக் அவன்
23L 32L 45L
2 வருட உத்தரவாதம்
சாதாரண விலை ரூ.42,990 இலிருந்து
சேல் விலை ரூ.32,990 இலிருந்து | தள்ளுபடி ரூ.10,000 இலிருந்து

**Abans**
Pump உடனான இன்ஸ்டன்ட் வோட்டர் ஹீட்டர்
குளிர்ச்சியான நாட்களில் வெந்நீர் குளியலை அனுபவியுங்கள்.
4.5 KW
2 வருட உத்தரவாதம்
சாதாரண விலை ரூ.91,990
சேல் விலை ரூ.64,990 | தள்ளுபடி ரூ.27,000

**LG**
LG 12000 BTU Antivirus & Wi-Fi
மின்சாரத்தை சேமிக்கும், 99.7% வைரஸை அழிக்கிறது.
சாதாரண விலை ரூ.399,990
சேல் விலை ரூ.339,990 | தள்ளுபடி ரூ.60,000

**Tefal**
பிரைபேன்
இலகுவாகவும், சுலபமாகவும் சமைத்திடுங்கள்.
சாதாரண விலை ரூ.15,990 இலிருந்து
சேல் விலை ரூ.12,990 இலிருந்து | தள்ளுபடி ரூ.3,000 இலிருந்து

ABSGDH

Sampath Cards | Commercial Bank | HNB Cards | HSBC | Standard Chartered | Seylan | NDB bank | PAN ASIA BANK | LOLC Finance | Cargills Bank

0115 999 000

*நிபந்தனைகள் உண்டு. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சலுகைகள் ஜூன் 20ஆம் திகதியிலிருந்து மாறுபடலாம்.
முன்னறிவித்தலின்றி விலைகள் மற்றும் ஏனைய சலுகைகள் மாறலாம்.

Abans


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதகமான கிறீம் வகைகள் சட்டவிரோதமாக இறக்குமதி

## நுகர்வோர் அதிகாரசபை பாவனையாளருக்கு எச்சரிக்கை

**கொழும்பு, ஜூன் 11**

**இலங்கையில் சருமத்தை வெண்மையாக்கும் கிறீம் வகைகள் தொடர்பில் நுகர்வோர் அதிகாரசபையால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் கொழும்பு மாவட்ட நுகர்வோர் அதிகாரசபை பிரிவின் சிரேஷ்ட புலனாய்வு அதிகாரி ஈ. யு. ரஞ்சனா தெரிவிக்கையில்,

சருமத்தை வெண்மையாக்கப் பயன்படுத்தப்படும் கிறீம்கள் மற்றும் வாசனைத் திரவியங்களில் இருக்கவேண்டிய பாதரசத்தின் அளவு அங்கீகரிக்கப்பட்ட வரம்பைவிட அதிகமாக உள்ளதாக இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவன அறிக்கைகள் உறுதிப்படுத்துகின்றன.

நுகர்வோர் அதிகாரசபையின் விசேட அதிரடிச் சோதனைப் பிரிவினர் கடந்தவாரம் சோதனை மேற்கொண்டனர்.

இதன்போது இறக்குமதியாளர் அல்லது உற்பத்தியாளரின் விவரங்களின்றி சட்டவிரோத 7 வகையான கிறீம்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றின் பாதரசத்தின் அளவு ஒரு கிலோவுக்கு 8.1மில்லிகிராமிலிருந்து 31.540 மில்லிகிராம் வரை மிக அதிகமாக இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவற்றில் பாதரசம் அதிகமுள்ளதால் புற்றுநோய் மற்றும் சிறுநீரக பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளது.

ஒவ்வொரு உறுப்புக்கும் பாதகமான விளைவுகள் ஏற்பட வாய்ப்புள்ளன என மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

எனவே, கிறீம்கள் மற்றும் திரவங்களைக் கொள்வனவு செய்யும் போது, இறக்குமதி விவரங்கள் தொடர்பில் பரிசோதிக்கவேண்டும் என நுகர்வோர் விவகார அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

(ச-இ)


இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்

பிரிவு-47

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன, க.பொ.த.(சா/த) பரீட்சைகளிற்கு தோற்றிய மாணவர்களுக்கான குறுங்காலப் பிரிவுகள்

- ★ Diploma in English / Spoken English
- ★ Diploma in ICT
- ★ Diploma in Singalam
- ★ Diploma in Psychology & Counselling
- ★ Diploma in Business Management
- ★ Diploma in Media Studies
- ★ Diploma in Political Science
- ★ Diploma in Social Work
- ★ Diploma in Nursing

ஆரம்பம்:
17 - 06 - 2023 சனிக்கிழமை
10.00 A.M
காலம்: 03 மாதங்கள்
சான்றிதழ் பிரிவுகள்

IPS Thirunelvely, Jaffna
to your future
T.P: 021 4340229
076 685 2529



உள்ளகக் கணக்காய்வாளர் தேவை
(Internal Auditor)

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல நிறுவனத்துக்கு உள்ளகக் கணக்காய்வாளர் (internal auditor) தேவை.
அனுபவம், தகைமை என்பனவற்றுக்கு ஏற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
சுயவிவரக் கோவையை admin@uthayan.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.




கொக்குவில் தேசிய கலை இலக்கியப் பேரவையில் "மதப் பண்பாடுகளும் சமூக அசைவியக்கமும்" என்ற தலைப்பில் சமூக விஞ்ஞானப் படிப்பு வட்ட விசேட கலந்துரையாடல் கடந்த 3ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்றது. (ய)



பிரசித்தி பெற்ற இணுவில் கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவப் பெருந் திருவிழாவின் 12 ஆம் நாள் திருவிழாவான திருமஞ்சத் திருவிழா கடந்த 5ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது. (ய-66)

# மரண அறிவித்தல்

தோற்றம்
20 . 04 . 1962



மறைவு
09 . 06 . 2023

### சந்தியாப்பிள்ளை ஸ்ரனிஸ்லாஸ் யோசேப் மனோகரன்

பலாலி தெற்கு வசாவிளானைப் பிறப்பிடமாகவும், பழைய பூங்கா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சந்தியாப்பிள்ளை ஸ்ரனிஸ்லாஸ் யோசேப் மனோகரன் நேற்றுமுன்தினம் (09.06.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சந்தியாப்பிள்ளை ஸ்ரனிஸ்லாஸ் காலஞ்சென்ற சிறுமலர் இராசமணி தம்பதியரின் அன்பு மூத்த மகனும், காலஞ்சென்ற ஞானமுத்து, மாக்கிறேட் தம்பதியரின் அன்பு மருமகனும், பத்திமா அமலமேரி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அமலதாஸ் மற்றும் ஜெருசலேம் (பட்டு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயக்குமார், அமரர் பத்திமா ஜீவமேரி, பத்திமா செல்வமேரி, அமரர் செல்வக்குமார், அமரர் சந்திரகுமார், வசந்த மேரி, ரத்னமேரி, ஆனந்தி ஆகியோரின் மைத்துனரும், அருள் நிஷாந்த், அருள் பிரசாந்த், அமல நிஷாந்தினி, அருள் றொசாந்த், கார்மேல் சங்கீதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், எமில்ரா, அலெக்சனா ஆகியோரின் மாமனாரும், நிருத்திகன், அபிசாந்த் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (12.06.2023) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு தூய மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு , பின்னர் கோப்பாய் புனித மரியன்னை சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மகன்: 077 977 9706
077 284 5585

தகவல்:
குடும்பத்தினர்.

(CS25206)(J-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயுதக்...

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையுடன் இணைந்ததாக இராணுவத்தினரின் ஆயுதக் கிடங்கும் காணப்பட்டது. நல்லாட்சிக் காலத்தில் ஜே/233 கிராம அலுவலர் பிரிவான காங்கேசன்துறை மேற்குப் பகுதியை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆயுதக் கிடங்கு காரணமாக அதற்குப் பாதுகாப்பு வழங்கும் நோக்குடன் அமைக்கப்பட்ட இராணுவ முகாம் அகற்றப்படவில்லை. மேற்படி காணி இதன் காரணமாக விடுவிக்கப்பட்டிருக்கவில்லை.

கடந்த மாதம் ஆயுதக் கிடங்கை இராணுவத்தினர் இடமாற்றியுள்ளனர். இதனையடுத்து அதன் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டிருந்த முகாமிலிருந்து இராணுவத்தினர் நேற்று வெளியேறியுள்ளனர். இதனையடுத்து, மாங்கொல்லை வைரவர் ஆலயமும் மற்றும் அதனைச் சூழவுள்ள சுமார் 30 ஏக்கர் காணிகள் இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை - இது தொடர்பில் யாழ். மாவட்டச் செயலகத்துக்கு எந்தவொரு உத்தியோகபூர்வ தகவலும் இராணுவத்தினரால் தெரிவிக்கப்படவில்லை.

(அ-ஓ.5.26)

## ஒடுக்கப்பட்டோரின்...

கரவெட்டி, கொற்றாவத்தையில் அமைந்துள்ள அவர் வாழ்ந்த வீட்டில் நேற்று சனிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மாநகரசபை ஆணையாளரும் கவிஞருமான இ.த.ஜெயசீலன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து தெணியானின் உருவச் சிலையையும், கல்வெட்டையும் மல்லாகம் நீதிமன்றின் பதில் நீதவானும், சட்டத்தரணியுமான சோ.தேவராஜா திறந்து வைத்தார்.

நூல் வெளியீட்டுரையையும் கருத்துரையையும் எழுத்தாளர் மு.அநாதரட்சகன் நிகழ்த்தினார். தொடர்ந்து தெணியான் பற்றிய நினைவுப் பகிர்வை கலாநிதி ந.ரவீந்திரன் நிகழ்த்தினார்.

(அ-ஓ.27.66)

## பௌத்தத்தை...

கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை பிரிவுகளுக்கான நீதிமன்ற சங்கநாயக்க பதவிக்கான சன்னஸ் பத்திரம் வழங்கும் வைபவத்தில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சம்புத்த சாசனத்தைப் பாதுகாப்பதும் மேம்படுத்துவதும் நம் அனைவரினதும் பொறுப்பாகும். இதற்காக புத்தசாசன அமைச்சு, பௌத்த நிதியம் மற்றும் பல சாசன ஊக்குவிப்பு நடவடிக்கைகள் எமது நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையில் பல்வேறு காரணிகளால் தற்போது சம்புத்த சாசனம் சில பின்னடைவுகளைச் சந்தித்துள்ளது.

சம்புத்த சாசனத்தைப் பாதுகாப்பது வெறும் வார்த்தைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமல் நடைமுறைச் செயல்களால் அமையவேண்டும்.

நாடு முழுவதும் உள்ள விகாரைகளில் பல்வேறு தியாகங்களைச் செய்து, கடினமானதொரு பயணத்தில் ஈடுபட்டுவரும் சம்புத்த சாசனத்தின் காவலர்களாக கருதப்படும் மரியாதைக்குரிய மகா சங்கரத்தினரைப் பாதுகாப்பது அனைவரின் பொறுப்பாகும். அதை நடைமுறை யதார்த்தமாக்குவதற்கு அனைவரும் ஒன்றித்து சமமாக பங்களிக்க வேண்டும்.

புத்தபெருமான் போதித்த தசராஜ தர்மத்தின் பிரகாரம் அரசாட்சி நடத்தப்பட்டால் நாடும், இனமும், மதமும், சம்புத்த சாசனமும் பாதுகாக்கப்படும். அந்த இலக்கை அடைவதற்கு செயற்படுவது அனைவரின் பொறுப்பாகும். தற்போது பொய் கோலோச்சி உண்மை மூடிமறைக்கப்பட்டுள்ளது - என்றார்.

(ஒ-இ)

## விபத்தை...

கிளிநொச்சியில் பணியை முடித்து மருத்துவர் ஒருவர் யாழ்ப்பாணத்துக்கு மோட்டார் சைக்கிளில் பரந்தன் ஊடாக இரவு திரும்பியுள்ளார். ஆள்கள் நடமாட்டம் குறைவான பகுதியில் மருத்துவரின் மோட்டார் சைக்கிளை மற்றொரு மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள் இடித்து வீழ்த்தியுள்ளனர். கீழே வீழ்ந்த மருத்துவரை அருகிலிருந்த வாய்க்கால் பக்கமாக அவர்கள் இழுத்துச் சென்றுள்ளனர். காயங்களுடன் மருத்துவர் இருந்தமையால் அம்புலன்ஸுக்கு அறிவிக்க அலைபேசியைத் தருமாறு மருத்துவரிடம் கேட்டுள்ளனர். அலைபேசியை மருத்துவர் கொடுத்ததும் அதன் கடவுச் சொல்லையும் கேட்டுப்பெற்று, அலைபேசியை தமது சட்டையினுள் வைத்துள்ளனர். இதன் பின்னர் மருத்துவரின் மோட்டார் சைக்கிளையும் கொள்ளையடித்துச் செல்வதற்கு அவர்கள் முயன்றுள்ளனர். தெய்வாதீனமாக அந்தச் சமயத்தில் குறித்த அந்த வீதியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மற்றொருவர் செல்லும்போது இந்தச் சம்பவத்தை கண்டுள்ளார். இதனையடுத்து அவர் அங்கு விரைந்து சென்று மருத்துவரைக் காப்பாற்றினார். அதனையடுத்து, அங்கு நின்றிருந்த கொள்ளையர்கள் மூவரும் அலைபேசியுடன் தப்பித்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் மருத்துவரால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்ற கொள்ளை நடவடிக்கைகளில் ஒரு குழு ஈடுபடுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மருத்துவரிடம் கொள்ளையிட முயன்ற குழுவைச் சேர்ந்தவர்கள் சிறைத்தண்டனை அனுபவித்து சில தினங்களுக்கு முன்னரே விடுவிக்கப்பட்டிருந்தனர் என்று ஊர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

(அ-ஓ.5)

## 300 பொருள்களுக்கு...

வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிவித்துள்ளார். நேற்றுமுன்தினத்துடன் நடைமுறைக்கு வரும் வகையில் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன. இலத்திரனியல் பொருள்கள், சுகாதார உபகரணங்கள் மற்றும் உணவுப் பொருள்கள் உட்பட 300க்கும் மேற்பட்ட பண்டங்களின் மீதான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன.

(அ-ஓ.இ)

## இந்திய..

சருமான பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார் என சிங்கள இணைய ஊடகமொன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

பொதுஜன பெரமுனவின் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்களுடன் மொட்டுக் கட்சி தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே பஸில் ராஜபக்ச இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் அழுத்தத்தால் மாகாண சபைத் தேர்தலை முதலில் நடத்த வாய்ப்புள்ளதால், அதனை எதிர்கொள்வதற்குத் தயாராகுமாறு கூட்டத்தில் பங்கேற்ற உறுப்பினர்களுக்கு பஸில் ராஜபக்ச ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த மாதம் 10 ஆம் திகதி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திக்கவுள்ளார் எனவும், இதன்போது மாகாணசபைத் தேர்தல் சம்பந்தமாக தீர்மானம் எடுக்கப்படலாம் எனவும் பஸில் ராஜபக்ச தகவல் வெளியிட்டுள்ளார்.

இதேவேளை- தமிழ் அரசுக் கட்சியினருடனான சந்திப்பில் மாகாணசபைத் தேர்தலை நடத்தும் திட்டம் இல்லை என்றும் இடைக்கால நிர்வாகசபையே தனது நோக்கம் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ-ஓ.22)

## அலைபேசிகளின்...

செயலர் சர்மித் செனரத் தெரிவித்தார்.

இலங்கை நாணயத்தின் டொலருக்கு எதிரான தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. டொலர் அதிகரிப்பு காரணமாக அலைபேசிக் கொள்வனவு 40 வீதத்தால் குறைவடைந்துள்ளது' என்றும் அவர் குறிப்பிட்டார்.

(அ-ஓ.இ)

## வவு. திரும்பிய...

வவுனியா மாவட்டத்தில் எச்.ஐ.வி. சிகிச்சைப் பிரிவு 2003ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து கடந்த டிசெம்பர் வரை 30பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டிருந்தனர். அவர்களில் சிகிச்சைக்கு பிந்திய நிலையில் வந்தவர்கள் மற்றும் சீராக சிகிச்சை பெறாத 7 ஆண்களும் 5 பெண்களுமாக 12 பேர் உயிரிழந்துள்ளனர். ஏனையவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(ஓ-18)


**மாபெரும் மலிவு விற்பனை**

ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மறுசீரமைக்கப்பட்ட பெண்களிற்குரிய துவிச்சக்கர வண்டிகள் விசேட கழிவு விலையில்

இன்று (11.06.2023) தொடக்கம் புதன்கிழமை (14.06.2023) வரை விற்பனைக்குண்டு.

120/1, ஆஸ்பத்திரி வீதி, (காஸ் கொம்பனிக்கு அருகாமை யாழ்ப்பாணம்)

077 226 4930, 077 731 0953


**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 15 பரப்புக் காணி விற்பனைக்கு.

* கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 1/2 km தூரத்தில் பருத்தித்துறை வீதியில் இருந்து 1200 m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி).
* கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்.
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
* ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சத்தி ஐம்பது ஆயிரம் ரூபாய் (250,000/=) மட்டும்.

தொடர்பு: 076 739 0413
076 4365 814


# மரண அறிவித்தல்



தோற்றம் 21 . 10 . 1951

மறைவு 10 . 06 . 2023

## பொன்னையா தில்லைநாதன் (அப்பன்)

உடுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா தில்லைநாதன் நேற்று (10.06.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - அன்னமுத்து தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான முத்துலிங்கம் - இரத்தினம் தம்பதிகளின் பாசமிகு மருமகனும், முத்துமலரின் அன்புக் கணவரும், வேணுகானனின் (பொறியியலாளர் - RDA - அனுராதபுரம்) பாசமிகு தந்தையும், பிரணவியின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், பத்மநாதன் மற்றும் சந்திராதேவி, கமலநாதன், கமலாதேவி, இரத்தினேஸ்வரி, பஞ்சநாதன், சத்தியநாதன், மதனேஸ்வரி, சிவகுருநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற பொன்மலர் மற்றும் தங்கமலர், நடேஸ்வரன், ஞானேஸ்வரி, காலஞ்சென்றவர்களான தவமலர், சண்முகராஜா மற்றும் மகேஸ்வரன், வைகுந்தவாசன், வரலஷ்சுமி, வேலாயுதபிள்ளை, ஜெயராணி, வாகினி, இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இணுவில் மேற்கிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

077 486 4079

(CS/50781)AH-1

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருள்களை ஒரே தடவையில் கொண்டு செல்லக்கூடிய கப்பலை வாடகைக்கு அமர்த்தியுள்ளது. இந்தக் கப்பல் பாண்டிச்சேரியிலிருந்து காங்கேசன் துறையை நோக்கி இந்த வாரம் தனது சேவையை ஆரம்பிக்கவுள்ளது.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த இறக்குமதியாளர்கள் இதுவரை காலமும் கொழும்புத்துறைமுகத்தின் ஊடாகவே பொருள்களை இறக்குமதி செய்துவந்தனர். தற்போது காங்கேசன்துறை துறைமுகத்தின் ஊடாக பொருள்களை இறக்குமதி செய்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ள நிலையில் அதனைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதன் ஊடாக நேர விரயம், வீண் செலவு என்பனவற்றைக் குறைத்துக் கொள்ளமுடியும் எனக் கூறப்படுகின்றது.

அதேபோன்று வடபகுதியிலுள்ள ஏற்றுமதியாளர்கள் தமது உற்பத்திப் பொருள்களை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் தயாராகவேண்டும். காங்கேசன்துறை துறைமுகத்தின் ஊடாக பொருள்களை குறைந்த செலவில் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்ய முடியும் என்பதால் அதற்குரிய வகையில் முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஓ.5)

---

### பணிப்பெண் தேவை

யாழ் நகரில் சிறிய குடும்பம் ஒன்றில் இரண்டு குழந்தைகளை தங்கி நின்று பராமரிப்பதற்கு 40 - 60 வயதுக்குட்பட்ட பெண் தேவை.

சம்பளம் 40,000/=

077 937 0000
075 988 1000

(CS/25195A)AH-1

### வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் அழகுசாதனப் பொருட்கள் விற்பனை நிலையமொன்றில் பணிபுரிய ஆண், பெண் இருபாலாரிலுமான வேலையாட்கள் தேவை. யாழ் நகரப்பகுதியை சேர்ந்தவர்களாயின் வரவேற்கத்தக்கது. (சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.)

077 716 4125, 076 343 2145

### காணி விற்பனைக்கு

கச்சேரியடியில் 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. 4 பக்க சுற்று மதில், கிணறு உண்டு. A9 றோட்டில் இருந்து 50m தூரம்.

தொடர்பு: 077 358 2704

### வெல்டிங் வேலையாள் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள கடை ஒன்றுக்கு அனுபவம் மிக்க வெல்டிங் வேலையாள் தேவை. நாள் ஒன்றுக்கு 3000/= மதிய உணவுடன்.

077 937 0000
075 988 1000

(CS/25195B)AH-1

### காணி விற்பனைக்கு

பலாலி வீதி கோண்டாவில் இராசமணி திருமண மண்டபத்திற்கு அருகாக கொட்டைக்காடு வீதியில் அண்ணளவாக 400 மீற்றர் தூரத்தில் 2 பரப்பு சதுரக்காணி விற்பனைக்குண்டு. தரகர்கள் இல்லை. விலை பேசித் தீர்மானிக்கலாம்.

070 786 0821, 077 922 5704

### கடை வாடகைக்கு

ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணத்தில் கடை வாடகைக்கு உண்டு.

075 803 9586

### காணி விற்பனைக்கு

யாழ்.நகரின் மையப் பகுதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. யாழ் மத்திய பேருந்து நிலையம், பொதுச்சந்தை, வைத்தியசாலை ஆகியவற்றுக்கு 20 நிமிட நடை பயணதூரம். யாழ் பண்ணைக் கடற்கரைக்கு மிக அருகில் அமைதியான சூழலில் உள்ளது. தங்குமிட வசதி, நட்சத்திர விடுதி கட்டுவதற்கு உகந்த இடம். விலை பேசித் தீர்மானிக்கப்படும். (தரகர் தேவையில்லை) அத்துடன் குறிப்பிட்ட காணிக்கு முன்பாக 1 1/4 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

(CS/50722)AH-1

074 062 1242

### Spoken English Classes

வெளிநாடு செல்வோருக்கு **Video / Audio** / புத்தகங்களின் துணையுடன் பயிற்சி. 30 வருட அனுபவமுள்ள ஆசிரியரால் கொழும்பில் வீடுகளிற்கு வந்து கற்பிக்கப்படும்.

077 731 5186

### வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பலசரக்கு வணிக நிலையத்திற்கு Computer Billing ற்கும், பில் கட்டி கொடுப்பதற்கும் ஆண் வேலையாட்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் நேரில் சுயவிபரக்கோவையுடன் சமூகம் தரவும்.

விநாயகர் ஸ்ரோர்ஸ்
424, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
077 419 5015

### ENGLISH CLASSES

யாழ்நகரில் **GCE O/L** எடுத்தவர்கள் **3** மாதத்தில் விரைவாக **Spoken, Grammar** தனித்தனியாக படிக்கும். **24** வகுப்புகள்.
**1** வகுப்பு, **2** மணி நேரம் கிழமையில் **2** வகுப்புகள்.

K.Ganesh B.A 077 766 8725

### காணி விற்பனைக்கு

சண்டிலிப்பாயில் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

(CS24384)(J-1) 070 701 3060

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் குருநகர் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் 5 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. முழுமையாகவோ அல்லது பிரித்தும் கொடுக்கப்படும். குருநகர், பாசையூர் பிரதான வீதிக்கு அருகில் உண்டு.

077 653 1980,
077 192 2010

(CS/50746)AH-1

### தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்

எமது பாடசாலையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் ( ICT English Medium ) கற்பிப்பதற்குத் தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம்.

இடம்:- உடுவில் மகளிர் கல்லூரி
காலம் :- 14.06.2023
நேரம் :- 1.30 pm - 2.30 pm

Ms.R.M.Kulendran
Principal

(CS/40116)AH-1

### INFORMATION TECHNOLOGY PARK

*Jaffna, Srilanka*
*Under the purview of the Ministry of Investment Promotion*

MPCS Building,
127,K.K.S.Road, Jaffna, Srilanka
Office :- 021 222 3641
Fax No :- 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது

O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான விசேட பிரிவுகள்

2023 June Batch
- Dip.in Microsoft Office
- Dip.in Desktop publishing
- Dip.in Information Technology
- Dip.in Computer Programming

06 Month Online Course
- Dip.in PC Application & Office Management

06 Month
- VB.net
- PHP
- C/C++
- C#
- Java
- AotoCAD

20 hours Workshop
- Internet & e-mail
- Webpage Designing & Development

விண்ணப்பப் படிவங்களை யாழ். பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம்

வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் :-30.06.2023
வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் :-01.07.2023

*CENTRE FOR INFORMATION TECHNOLOGY*
- Executive Officer -

### MATHS CLASSES

**From Grade 6 to 11**
**Personal Classes and Group Classes**
வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.

077 594 5456

(CS/ 50771)AH-1

### பகுதிநேர வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம் சுண்டுக்குளியில் அமைந்துள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றுக்குப் பகுதிநேர வேலைவாய்ப்புக்குப் பெண் பணியாளர் தேவை. தகைமையாக உயர்தரம் கற்றிருத்தல் வேண்டும். (வைத்தியசாலைக்கு அண்மையிலுள்ளவர்கள் விரும்பத்தக்கது)
(19 - 35 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

தொடர்பு:- 075 618 7562
நேரம்:- முற்பகல் 9.00- பிற்பகல் 1.00 வரை
திகதி:- 11.06.2023 - 18.06.2023

(CS/50733)A

### IELTS

Academic
General
UKVI

#Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
# Unique Test Tips
# 40 hrs with free 4 mock exam
# Latest course Material (Book 17)

நேரடி , zoom வகுப்புக்களாக

A1 IELTS Life Skills — திருமணம் செய்து UK செல்வோருக்கானது
B1 Skilled Worker Visa — மூலம் வெளிநாடு செல்வோருக்கானது

DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

புதிய பிரிவு ஆரம்பம் 12/6/2023-Mon,15/6/2023-Thu-9 am or 3 pm


யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்
DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH
DMI COMPUTER EDUCATION
0777 17 35 17

DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி 0777 24 07 07 021 222 4403

| | | | | |
|---|---|---|---|---|
| வல்வெட்டித்துறை | சாவகச்சேரி | கள்ளாலகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
| 021 226 2470 | 021 227 0275 | 021 224 1570 | 021 225 6665 | 021 228 5656 |
| 0777573333 | 0777227074 | 0776032300 | 0761354503 | 0776398095 |

### 2 & 3 bedrooms apartment for sale in wellawatte

GALLE ROADக்கு மிக அருகாமையில்



20 months payment plan available

COMPLETION 2024

தொடர்புகளுக்கு
KURINCHI HOME
+94 76 290 1111
+94 777 044 501

address
541/5 , Galle Road , Wellawatte

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

உலகத்தில் திருடர்கள் சரி பாதி
ஊமைகள் குருடர்கள் அதில் பாதி
உலகத்தில் திருடர்கள் சரி பாதி
ஊமைகள் குருடர்கள் அதில் பாதி
கலகத்தில் பிறப்பது தான் நீதி
மனம் கலங்காதே மதி மயங்காதே
கலங்காதே மதி மயங்காதே - கண்ணதாசன்

Registered as a Newspaper

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 வைகாசி 28 ஞாயிற்றுக்கிழமை (11.06.2023) சிக





# மருதங்கேணியில் நடந்ததும் அதன் விளைவும்

○ நிலாந்தன்

புலனாய்வுத்துறை தமிழ்மக்களின் அரசியல் நடவடிக்கைகளைக் கண்காணிப்பது என்பது கடந்த பல தசாப்தகால யதார்த்தம். குறிப்பாக கடந்த 14 ஆண்டுகளாக தமிழ்க் கட்சிகள் மற்றும் செயற்பாட்டாளர்களின் எல்லா நடவடிக்கைகளையும் புலனாய்வுத் துறை கண்காணித்து வருகின்றது. அதை அவர்கள் நேரடியாகவும் செய்கிறார்கள்; மறைமுகமாகவும் செய்கின்றார்கள். அச்சுறுத்தலாகவும் செய்கின்றார்கள்; நாகரிகமாகவும் செய்கின்றார்கள். எதுவாயினும், தமிழ் மக்களைக் கண்காணிக்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலில் மாற்றம் இல்லை. ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரும் நிலைமை அப்படித்தான் இருக்கிறது. தமிழ்மக்களை தொடர்ச்சியாகக் கண்காணிப்புக்குள் வைத்திருப்பது என்பது ஆக்கிரமிப்பு மனோநிலைதான்.

மருதங்கேணியிலும் அதுதான் நடந்தது. அதன் விளைவாக நடந்த கைது நடவடிக்கைகள் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியை அச்சுறுத்தும் நோக்கிலானவை. அண்மைய மாதங்களாக முன்னணி அரச படைகளோடும் பொலிஸாரோடும் நேரடியாக முட்டுப்படும் போராட்டக்களங்களைத் திறந்து வருகின்றது. இதனால் ஆத்திரமடைந்திருக்கும் அரச படைகளும் காவல்துறையும், முன்னணிக்கு அதன் வரையறைகளை உணர்த்தும் நோக்கத்தோடு மேற்படி கைது நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கலாம். அந்தக் கட்சியை அச்சுறுத்தி அதன் செயற்பாட்டாளர்களை தற்காலிகமாகவேனும் உள்ளே தள்ளுவதன்மூலம் அந்தக்கட்சியைத் தொடர்ந்து போராடவிடாமல் தடுப்பது அரசாங்கத்தின் நோக்கமாக இருக்கலாம். இது ஏற்கனவே சிறீதரனுக்கும் நடந்தது. அவருடைய இரண்டு உதவியாளர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் பிடிபட்டு பல மாதங்கள் சிறையில் இருந்தவர்கள்.

கடந்த 14 ஆண்டுகளாக ஆயுத மோதல்கள் இல்லை. எனினும் தமிழரசியல் அதிகம் இராணுவமயப்பட்டே காணப்படுகிறது. தமிழ்மக்கள் எந்த ஒரு போராட்டத்தை முன்னெடுத்தாலும் அரசபடைகளுக்கும் புலனாய்வுத்துறைக்கும், திணைக்களங்களுக்கும், பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கும் எதிராகப் போராடவேண்டியிருக்கும். அவ்வாறு அரச படைகளோடு மோதி அல்லது முரண்பட்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் உள்ளே தள்ளுப்படுவதற்கு சாதாரண ஜனங்கள் அச்சப்படும் ஒரு சூழல்தான் இப்பொழுதும் உண்டு.

அண்மையில் தையிட்டியில் விகாரைக்கு எதிரான போராட்டத்தில் கஜேந்திரன் தனி ஒருவராக புதர்களின் மத்தியில் தரையில் உறங்கும் காட்சி அவருடைய ஆதரவாளர்களால் அதிகம் பகிரப்பட்டது. அவர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர். இருபதாயிரத்துக்கும் குறையாத வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டவர். அவர் ஏன் அங்கே தனியாக நிலத்தில் உறங்க வேண்டும்? அவருக்கு வாக்களித்த மக்களும் அந்தக் கட்சியின் ஆதரவாளர்களும் எங்கே? அது உயர் பாதுகாப்பு வலயத்தை அண்மித்த பகுதி. அங்கே சென்று போராடினால் கைது செய்யப்படலாம் என்ற நிலைமை உண்டு. அவ்வாறு போராடிய கட்சிக்காரர்களை பலாலி பொலிஸ் கைதுசெய்து பின் விடுவித்தது. சட்டத்தரணிகளையும் விட்டுவைக்கவில்லை. போராடப் போனால் கைது செய்யப்படலாம் என்ற ஒரு நிலையை ஏற்படுத்துவதே பொலிஸின் நோக்கம்.

மருதங்கேணிச் சம்பவத்திலும் ஒரு புலனாய்வாளர் தன்னைத் தடுக்கமுயன்ற கஜேந்திரகுமாரைத் தட்டிவிட்டுத் தப்பியோடுகிறார். அவரை இரண்டு கட்சிக்காரர்கள்தான் துரத்திக்கொண்டு போகிறார்கள். ஏனைய பொதுமக்கள் குறிப்பாக, சந்திப்பில் கலந்துகொண்ட விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் அவரைத் துரத்திக்கொண்டு போகத் துணியவில்லை. அது ஒரு தமிழ் யதார்த்தம். அரச படைகள் மற்றும் பொலிஸ், புலனாய்வுத்துறை போன்றவற்றோடு நேரடியாக மோத சாதாரண தமிழ்மக்கள் பயப்படுகிறார்கள். ஏன் அதிகம்போவான், நினைவு நாட்களின் போது எல்லா ஆலய மணிகளையும் அடிக்குமாறு கேட்கப்படுகிறது. ஆனால் எல்லாக் கோவில்களிலும் மணி அடிக்கப்படுவதில்லை. எல்லா வீடுகளிலும் வெளிப்படையாக ஒரு சுட்டிகூட ஏற்றப்படுவதில்லை. கட்சி அலுவலகங்களில் மட்டுந்தான் வெளிப்படையாக நினைவுச்சுடர் ஏற்றப்படும். சாதாரண ஜனங்கள் அவ்வாறு ஒரு சுட்டியை ஏற்றுவதற்குக் கூட பயப்படும் ஒரு நிலை.

அந்த அச்சத்தைப் போக்குவதென்றால் மக்களைத் திரளாக்க வேண்டும். உதிரியாக இருக்கும்வரைதான் அச்சமிருக்கும். ஆனால் பெரிய திரளாகக் கூடினால் எத்தனை பேரைத் தூக்குவது? போராட்டம் என்றாலே சட்டமறுப்புத்தான். சிறைகளை நிரப்புவதுதான். பொதுமக்கள் அதிகமாகக் குவியும்போது எல்லாரையும் தூக்கி உள்ளே போடமுடியாது. உதிரியாகப் போராடும்போதுதான் தனித்தனியாகத் தூக்கி உள்ளே போடலாம். திரளாகக் குவிந்தால் முழுச் சமூகத்தையும் உள்ளே தூக்கிப் போட முடியாது. உதிரிகளாக இருக்கும்வரை மக்கள் பயப்படுவார்கள். திரண்டால் அதுதான் பலம். திரட்சி தான் பயத்தைப் போக்கும். தைரியத்தை உருவாக்கும். எனவே மக்கள் எந்தளவுக்கு எந்தளவு தங்களுடைய சௌகரிய வலயத்தை விட்டு வெளியே வருகிறார்களோ, அந்தளவுக்கு அந்தளவு போராட்டம் மக்கள் மயப்படும். ஆனால் தமிழ்க் கட்சிகளிடம் அதற்குரிய பொருத்தமான வேலைத்திட்டங்கள் இல்லை. அவ்வாறான ஒரு பின்னணியில்தான் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனியாக அரசு தரப்புடன் முட்டுப்பட வேண்டி வருகிறது.

மக்கள்முன்னணி அந்தப் பயத்தை உடைத்துக் கொண்டு போராட முயற்சிக்கின்றது. அதில் தனிமனித சாகசம் இருக்கலாம். எனினும், அந்தக்கட்சிக்கு ஒரு தட்டுத் தட்டி அடக்க வேண்டும் என்று அரசாங்கம் சிந்தித்ததன் விளைவே மேற்படி கைது நடவடிக்கை. எல்லாவிதமான விமர்சனங்களுக்கும் அப்பால் தமிழ் அரசியலை அண்மை மாதங்களாக நொதிக்கச் செய்வது முன்னணிதான்.

அதேசமயம், மருதங்கேணிச் சம்பவத்தின் பின்னணியில் அந்தக்கட்சியின் அரசியல் எதிரிகளும் கட்சியின் தூய்மைவாத நடவடிக்கைகளால் எரிச்சல் அடைந்தவர்களும் பின்வரும் விமர்சனங்களை முன்வைக்கின்றார்கள்... அது ஒரு நாடகம், முன்னணி வேண்டுமென்று முரண்பாடுகளை தோற்றுவிக்கின்றது. அதன்மூலம் தன்னுடைய ஆதரவுத் தளத்தைப் பலப்படுத்த முயற்சிக்கின்றது என்பது ஒரு பகுதியினரின் விமர்சனம். இன்னொரு பகுதியினர் முன்னணியைப் பலப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு அரசாங்கம் மேற்படி கைது நடவடிக்கைகளை முன்னெடுத்திருப்பதாக விளக்கம் அளிக்கிறார்கள். இந்தியாவை எதிர்க்கும் ஒரு கட்சியைப் பலப்படுத்தினால் தமிழ்மக்கள் மத்தியில் இந்திய எதிர்ப்பை நிறுவனமயப்படுத்தலாம். அதனால் அரசாங்கத்தின் வேலை இலகுவாக்கப்பட்டு விடும். இரண்டாவதாக, தனது தூய்மைவாத நடவடிக்கைகளால் ஏனைய கட்சிகளோடு இணைய மறுக்கும் முன்னணியானது தமிழ் ஐக்கியத்துக்கு ஏதோ ஒரு விதத்தில் தடையாகக் காணப்படுகின்றது. எனவே அந்தக்கட்சியைப் பலப்படுத்தினால் அது தமிழ்த் திரட்சியைப் பலவீனப்படுத்தும் என்று அரசாங்கம் சிந்திப்பதாக ஒரு விளக்கம்.

இவைதவிர, இக்காலப்பகுதியில் ஒரு 'பேப்பர் கட்டிங்' முன்னணியின் அரசியல் எதிரிகளால் அதிகமாக பகிரப்பட்டு வருகிறது. அது விடுதலைப்புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட காலகட்டம் ஒன்றில் அது தொடர்பாக ரெலோ இயக்கமும் குமார் பொன்னம்பலமும் தெரிவித்த கருத்துக்களைக் கொண்ட ஒரு செய்திக் குறிப்பு. குமார் பொன்னம்பலம் புலிகள்இயக்கம் தடை செய்யப்பட்டமையை ஆதரித்து கருத்து தெரிவித்திருக்கிறார். முன்னணியை விமர்சிக்கும் தரப்புகள் குமார் பொன்னம்பலத்தின் விசுவாசத்தைக் கேள்விக்கு உள்ளாக்கும் நோக்கத்தோடு மேற்படி 'பேப்பர் கட்டிங்கைப்' பகிர்ந்து வருகிறார்கள்.


கடந்த 14 ஆண்டுகால தமிழ் அரசியலில் விகாரமாக மேலெழுந்து வரும் ஒரு போக்கு இது. தமது அரசியல் எதிரிகளுக்கு எதிராக சூழ்ச்சிக் கோட்பாடுகளை உருவாக்குவது. முன்பு மொட்டைக்கடிதம் இருந்தது. இப்பொழுது புனை பெயரில் முகநூல் கணக்கு உள்ளது. தமக்குத் தெரியாத ஒன்றைப் பற்றி கருத்துக்கூறும் சுதந்திரத்தையும் துணிச்சலையும் சமூகவலைத்தளங்கள் அதிகப்படுத்தியுள்ளன. அதனால் யானை பார்த்த குருடர்கள் எல்லாம் விமர்சகர்கள் ஆகிவிட்டார்கள். அவர்கள் ஒரு கூட்டமாகச் சேர்ந்து சமூக வலைத்தளங்களில் தமது அரசியல் எதிரிகளின் மீது அவதூறை அள்ளி வீசுகிறார்கள். குமார் பொன்னம்பலம் சம்பந்தப்பட்ட பேப்பர் கட்டிங்கை பரவலாக்குவதும் அதே சீரழிந்த விமர்சனப் பண்பாட்டின் ஒரு வெளிப்பாடுதான்.

ஆனால் அந்த விமர்சனப் பண்பாட்டை வளர்த்தெடுத்ததில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்கும் பெரிய பங்கு உண்டு. தமது அரசியல் எதிரிகளை இனத்துரோகிகளாக உருவகிப்பதன்மூலம் அவர்களின் ஆளுமையை சிதைக்கும் ஒரு அரசியல் விமர்சனப் பண்பாட்டை அந்தக் கட்சிதான் அதிகமதிகம் முன்னெடுத்து வருகின்றது. யாராவது தமக்கு எதிராக எழுதினால் "சோறு முக்கியம்" "அவர்களுக்குப் பசிக்குந்தானே" என்றெல்லாம் எழுதுவது அந்தக் கட்சிக்காரர்கள்தான். அரசியல் விமர்சகர்களை சில ஆயிரம் ரூபாவுக்கு கட்டுரை எழுதுபவர்கள்; 'யூடியூப்பில்' உழைப்பவர்கள் என்று எழுதுவதும் அந்தக் கட்சிக்காரர்கள்தான். தமிழ் அரசியலில் விமர்சனத்தை அவதூறாக மாற்றியதில் அந்தக்கட்சிக்குப் பெரிய பங்குண்டு. இப்பொழுது அதேவிதமான அவதூறு அவர்கள் மீதும் அள்ளிவீசப்படுகிறது.

குமார் பொன்னம்பலம் சம்பந்தப்பட்ட அந்த பேப்பர் கட்டிங்கில் இருப்பது உண்மையா, பொய்யா என்பதை உறுதிப்படுத்த வேண்டும். சிலவேளை, அந்தச்செய்தி உண்மையாக இருந்தாலும், அதை மட்டும் வைத்து குமார் பொன்னம்பலத்தை மதிப்பிட முடியாது. அவருடைய வாழ்க்கையை முழுமையாகத் தொகுத்துப் பார்க்க வேண்டும். அந்தப் பேப்பர் கட்டிங்கில் காணப்படும் செய்தி உண்மையாக இருந்தால்

05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேட்டோவை நிராகரித்த டில்லியும் மோடியின் அமெரிக்கப் பயணமும்

## தமிழ்த்தரப்பிடம் உருப்படியான பொறிமுறைகள் இல்லை

அ.நிக்ஸன்

அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் அண்டனி பிளிங்கன் எதிர்வரும் வாரங்களில் சீனாவுக்குப் பயணம் செய்வார் என்று அமெரிக்காவின் ப்ளூம்பெர்க் (BloombergNews) செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்ட பின்னர் மேற்குலக மற்றும் ஐரோப்பிய நாடுகளின் செய்தி நிறுவனங்களும் அதற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளன. ஆனாலும் அண்டனி பிளிங்கனின் சீனப் பயணம் தொடர்பாக அமெரிக்க வெளியுறவு அமைச்சு அதிகாரபூர்வமாகச் செய்தி வெளியிடவில்லை.

சீனாவின் வெளியுறவு அமைச்சும் அவ்வாறு அறிவிக்கவில்லை. இருந்தாலும் சீனாவின் அதிகாரபூர்வ செய்தித்தளமான குளோபல் ரைம்ஸ் (globaltimes) அண்டனி பிளிங்கனின் வருகையைச் சீனா வரவேற்பதாகக் கடந்த புதன்கிழமை செய்தி வெளியிட்டிருந்தது. அமெரிக்கச் செய்தி நிறுவனங்களை மேற்கோள் காண்பித்து வெளியிடப்பட்டிருந்த செய்தியில், சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் பற்றி விமர்சிக்கப்பட்டுமிருந்தன.


அமெரிக்காவை மையப்படுத்திய 'நேட்டோ பிளஸ்' கட்டமைப்பில் இந்தியா சேரவுள்ளதாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்த நிலையில், அண்டனி பிளிங்கன் சீனாவுக்குப் பயணம் செய்யவுள்ளதன் நோக்கம் பற்றிய சந்தேகங்களையும் குளோபல் ரைம்ஸ் செய்தி நிறுவனம் வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில் 'நேட்டோ பிளஸ்' இராணுவக் கூட்டணியில் இந்தியா இணையும் என்று அமெரிக்க ஊடகங்களில் வெளியான செய்திகளை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் நிராகரித்துள்ளார் என்று 'இந்தியாரீவி' நியூஸ் செய்தி (indiatvnews) இணையம் சென்ற வெள்ளிக்கிழமை இரவு செய்தி வெளியிட்டுள்ளது. .

"சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடனான மூலோபாயப் போட்டியில் வெற்றி பெறவும், தாய்வானின் பாதுகாப்பை உறுதி செய்யவும், இந்தியா உள்ளிட்ட நமது நட்பு நாடுகளுடனும் பாதுகாப்புப் பங்காளிகளுடனும் அமெரிக்கா உறவுகளை வலுப்படுத்த வேண்டும்"

"நேட்டோ பிளஸ் பாதுகாப்பு ஏற்பாடுகளில் இந்தியாவைச் சேர்ப்பது, உலகப் பாதுகாப்பை வலுப்படுத்தவும், இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆக்கிரமிப்பைத் தடுக்கவும், அமெரிக்க - இந்திய அரசுகளின் நெருங்கிய கூட்டுறவு அடிப்படையில் கட்டமைக்கப்படும்" என நேட்டோ பிளஸ் கட்டமைப்பில் இந்தியாவை இணைக்கும் நோக்கில் செயற்பட்ட அமெரிக்கக் காங்கிரஸ் தெரிவுக்குழு பரிந்துரைத்தது. இந்த நிலையில், அதுவும் நரேந்திரமோடி அமெரிக்காவுக்குப் பயணம் செய்யவுள்ள பின்னணியில் அமைச்சர் ஜெய்சங்கர் மேற்படி திட்டத்தை நிராகரித்துள்ளார்.

நேட்டோ ஓர் இராணுவக் கூட்டணி அது இந்தியாவுக்கு உகந்தது அல்ல. நேட்டோ கட்டமைப்பின் பிரகாரம் இது 29 ஐரோப்பிய மற்றும் இரண்டு வட அமெரிக்க நாடுகள் உள்ளிட்ட 31 உறுப்பு நாடுகளுக்கு இடையேயான இராணுவக் கூட்டணியாகும். அதன் முக்கியமான நோக்கம் அரசியல் மற்றும் இராணுவ வழிமுறைகள் மூலம் தன் உறுப்பு நாடுகளின் சுதந்திரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதாகும்.



இந்தப் பின்புலத்தோடு இந்தியாவையும் சேர்த்து நேட்டோ பிளஸ் கட்டமைப்பை வலுப்படுத்த சக்தி மிக்க அமெரிக்கக் காங்கிரஸ் தெரிவுக்குழு பரிந்துரைத்த சில வாரங்களுக்குப் பின்னர் இந்தியாவில் இருந்து கடும் விமர்சனக் கருத்துக்கள் எழுந்தன. சில இந்திய அச்சு ஊடகங்கள் மோடி அரசை விமர்சித்துமிருந்தன.

நேட்டோ பிளஸ் என்பது உலகளாவிய பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரிக்க ஐந்து உறுப்பு நாடுகளான அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, ஜப்பான், இஸ்ரேல் மற்றும் தென் கொரியாவை ஒன்றிணைக்கும் ஒரு பாதுகாப்பு ஏற்பாடாகும். இதில் ஆறாவது நாடாக இந்தியாவைச் சேர்க்கும் உத்திகள் அமெரிக்க அரசினால் வகுக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் ஜெய்சங்கர், 'நேட்டோ கட்டமைப்பு இந்தியாவுக்குப் பொருந்தாது' என்று கூறிவிட்டார்.

நரேந்திர மோடி எதிர்வரும் 21 ஆம் திகதி அமெரிக்காவுக்குப் பயணம் செய்வதற்கு முன்னதாக நேட்டோவில் இந்தியா இணைய வேண்டுமென அமெரிக்கா எதிர்பார்த்திருந்தது. ஆனால் இந்திய அரசியலில் எழுந்த கடும் விமர்சனங்கள் மற்றும் ஆலோசனைகளுக்குப் பின்னர் இந்திய மத்திய அரசு அதனை அதிகாரபூர்வமாக மறுத்திருக்கிறது.

இதனால் புவிசார் அரசியல் பொருளாதார நகர்வுகளில் வேறு திருப்பங்களை விரைவில் எதிர்பார்க்க முடியும். அந்தத் திருப்பங்கள் இந்தியாவுக்குத் தலைவலியாகவே இருக்கும் என்பதும் கண்கூடு.

இரண்டாம் உலகப் போர் முடிந்தவுடன் அமெரிக்காவும், முன்னாள் சோவியத் ஒன்றியமும் பலம்வாய்ந்த நாடுகளாக இருந்தன. சோவியத் ஒன்றியத்தில் கம்யூனிசக் கொள்கைகளே இருந்தன. ஆகவே சோவியத் மற்ற நாடுகள் மீது படையெடுப்பதைத் தடுக்கவே நேட்டோ அமைப்பு அன்று உருவாக்கப்பட்டது.

அப்போது அமெரிக்கா, பிரித்தானியா, கனடா மற்றும் பிரான்ஸ் ஆகியவை உள்ளிட்ட 12 நாடுகள் மாத்திரமே இணைந்து இந்த அமைப்பை 1949இல் உருவாக்கியிருந்தன. நேட்டோ ஒப்பந்தத்தின்படி ஒரு நேட்டோ உறுப்பு நாடு தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டால் மற்ற நாடுகள் கூட்டுச் சேர்ந்து உதவியளிக்கும்.

ஆகவே இந்தப் பின்னணியில் மேலும் பல நாடுகள் நேட்டோவில் இணைந்தாலும் ஆசியாவில் வல்லரசாகக் கருதப்படும் இந்தியா, நேட்டோ அமைப்பில் இணையவில்லை. ஆனாலும் டொனால்ட் ட்ரம்ப் 2016 இல் அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னரான சூழலில் இந்தியாவை ஒரு அறிவிக்கப்படாத நேட்டோ நாடாகவே அமெரிக்கா அணுகியிருந்தது.

இந்தப் பின்னணியிலேயே ஜோ பைடன் நிர்வாகமும் இந்தியாவை முதலில் நேட்டோ பிளஸ் கட்டமைப்பில் இணையுமாறு அதிகாரபூர்வமாகக் கேட்டிருந்தது. மோடியின் அமெரிக்கப் பயணத்துடன் இந்தியா நேட்டோவில் இணைந்துள்ளது என்ற அறிவிப்பைச் செய்யும் நோக்கம் அமெரிக்காவுக்கு இருந்திருக்கிறது. ஏனெனில் அமெரிக்க ஊடகங்கள் மிக நுட்பமாக இந்தியா பற்றியும் இந்தியப் பாதுகாப்புக் குறித்தும் அக்கறையுடன் விமர்சனங்களை முன்வைத்து வந்தன.

ஆனால் ரஷ்யாவுடன் நெருக்கமான உறவைப் பேணி வரும் சூழலில் நேட்டோவில் சேருவதா, இல்லையா என்று மோடி அரசு குழம்பியிருந்தது உண்மையே. சீனாவிடம் இருந்து வட இந்தியாவைப் பாதுகாப்பதற்கான கூட்டணி புதுடில்லிக்குத் தற்போது தேவை என்று'இந்தியாரீவி' செய்தித் தளம் வெள்ளிக்கிழமை இரவு விமர்சனம் ஒன்றை வெளியிட்டிருந்தது.

அதேநேரம் சென்ற செவ்வாய்க்கிழமை சீனா மற்றும் ரஷ்ய இராணுவத்தினர் ஆசிய-பசுபிக் பிராந்தியத்தில் ஒரு கூட்டு வான்வழி மூலோபாய ரோந்துப் பணியை மேற்கொண்டன. இது அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு உகந்தது என்று சீன நிபுணர்கள் கூறியதாக பாகிஸ்தான் டுடே (pakistantoday) சென்ற புதன் கிழமை செய்தி வெளியிட்டிருந்தது.

பிராந்தியத்தில் தொடர்ச்சியான அமெரிக்கா தலைமையிலான ஆத்திரமூட்டல்களின் தாக்கத்தை ஈடுகட்டவே இந்தப் பயிற்சி என்றும் அந்த விமர்சனத்தில் கூறப்பட்டிருந்தது.

அதேநேரம் சீன மற்றும் ரஷ்ய இராணுவங்களுக்கு இடையிலான வருடாந்திர ஒத்துழைப்பு அட்டவணையின் அடிப்படையில், இரு தரப்பினரும் செவ்வாயன்று ஜப்பான் கடல் மற்றும் கிழக்கு சீனக் கடலில் ஆறாவது கூட்டு வான்வழி மூலோபாய ரோந்து நடவடிக்கையை மேற்கொண்டதாக சீனாவின் தேசிய பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஜப்பானின் பாதுகாப்பு அமைச்சின் கூட்டுப் பணியாளர்கள் செவ்வாயன்று வெளியிட்ட அறிக்கையில், சீனாவின் இரண்டு குண்டுவீச்சு விமானங்களும், இரண்டு ரஷ்யக் குண்டுவீச்சு விமானங்களும், இரண்டு அடையாளம் தெரியாத சீனப் போர் விமானங்களின் துணையுடன், கிழக்கு சீனக் கடல் மற்றும் ஜப்பான் கடல் மீது ஒன்றாகப் பறந்ததாகக் கூறப்பட்டிருந்தது.

இவ்வாறு ஆசிய - பசுபிக் பிராந்தியத்தில் அதிகரித்து வரும் பதற்றங்களுக்கு மத்தியில் சிங்கப்பூரில் கடந்த வாரம் நடைபெற்ற சங்ரி-லா உரையாடலில் சீன - அமெரிக்க பாதுகாப்புத் தலைவர்களுக்கு இடையே எந்தச் சந்திப்பும் நடைபெறவில்லை, இருதரப்பினரும் சந்தித்து உரையாடுவர் என ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்த நிலையில் சங்ரி-லா உரையாடல் குறிப்பிடத்தக்களவு வெற்றி பெறவில்லை என்று குளோபல் ரைம்ஸ் செய்தி நிறுவனம் கூறியுள்ளது. ஆகவே அமெரிக்க - இந்திய உறவு, ரஷ்ய இந்திய உறவு என்ற இரு தளங்களில் எந்தத் தளம் மேலோங்கும் என்று கூறுவதைவிடவும் இந்திய அரசின் வெளியுறவுக் கொள்கையில் பின்பற்றப்படும் இரட்டைத்தன்மை நீடித்துச் செல்ல இடமில்லை என்ற தகவல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்திரா காந்தி காலத்தில் அணிசேராக் கொள்கை என்று கூறிக் கொண்டு அன்றைய சோவியத் யூனியனுடன் இரகசிய உறவைப் பேணியது போன்று தற்கால நவீன புவிசார் அரசியல் பொருளாதாரப் போட்டிச் சூழலுக்குள் ரஷ்யாவுடனும் மறுபுறத்தில் அமெரிக்காவுடனும் உறவைப் பேணிக் கொண்டு சீனாவிடம் இருந்து வட இந்திய எல்லைகளைப் பாதுகாத்துவிட முடியும் என புதுடில்லி நம்புவது வேடிக்கை. இலங்கை விவகாரத்திலும் இந்தியா பின்பற்றும் இவ்வாறான இரட்டைத் தன்மையால், இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கத்துக்கும் இலங்கை சீனாவின் தளமாக மாறுவதற்கும் இடமளிக்குமே தவிர இந்தியாவின் நட்பு சக்தியாக இலங்கை மாறுவதற்கு வாய்ப்பில்லை.

இலங்கை ஒற்றையாட்சி அரச கட்டமைப்பை எவ்வாறு பாதுகாப்பது என்பதில் தற்போது ஜனாதிபதியாகவுள்ள ரணில் விக்கிரமசிங்க மாத்திரமல்ல சிங்களக் கட்சிகளின் தலைவர்கள் அனைவருமே மிக நிதானமான அடியெடுப்புகளை முன்வைக்கின்றனர். புவிசார் அரசியல் சூழலில் இந்திய அரசியல் நகர்வுகளையே சிங்களக் கட்சிகள் நுட்பமாக அவதானிக்கின்றன. நிதியுதவி வழங்குவதில் இந்தியாவுக்கு நன்றி தெரிவிக்கும் இலங்கை, இந்தோ - பசுபிக் விவகாரத்தில் இந்தியாவைவிடவும் சீனாவுக்கு அல்லது அமெரிக்காவுக்கு முழு ஒத்துழைப்பை வழங்கவேண்டுமென்பதிலேயே விருப்பம் கொண்டுள்ளது. அதேநேரம் இந்தியா ஈழத்தமிழர்களுடன் நெருங்கிவிடக்கூடாது என்பதிலும் இலங்கை மிகக் கவனமாகவுள்ளது. தமிழ் நாட்டு அரசு கூட, ஈழத்தமிழர் விவகாரம் குறித்த புதுடில்லியின் நிலைப்பாட்டை முன்னெடுக்கவேண்டுமென்ற நோக்கிலேயே புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதுவர் மிலிந்த மொறாகொட செயற்படுகிறார் என்பதும் வெளிப்படை.

முன் எப்போதுமில்லாத அளவுக்குப் புதுடில்லியில் இருந்து தமிழ் நாட்டுக்குப் பயணம் செய்து வரும் மிலிந்த மொறாகொட, இலங்கைத்தீவின் அபிவிருத்தித் திட்டங்கள் என்ற பெயரில் கலந்துரையாடல்களில் ஈடுபடுகிறார். அதாவது இலங்கை ஒற்றையாட்சிக் கட்டமைப்பை நியாயப்படுத்தும் நுண் அரசியலில் ஈடுபடுகிறார். அத்துடன் ரஷ்ய - உக்ரைன் போர்ச் சூழலில் உருவாகியுள்ள புவிசார் அரசியல் - பொருளாதார நெருக்கடிகள் இலங்கைப் பொருளாதாரத்தில் பெரிய தாக்கத்தைச் செலுத்தியதாகக் கூற முடியாது. ஏனெனில் புவிசார் அரசியல் போட்டிகளினால் இலங்கை போன்ற சிறிய நாடுகளுக்கு மேலும் பல உதவிகள் ஏட்டிக்குப் போட்டியாகக் கிடைத்திருக்கின்றன. குறைந்த பட்சம் இலங்கை மூச்சு விடுவதற்கு அமெரிக்க , இந்திய, சீன அரசுகள் உதவியளிக்கும் என்று சிங்களத் தலைவர்களுக்கு நன்கு புரியும்.

இந்தியாவிடம் ஈழத்தமிழர் நெருங்கிவிடக் கூடாது என்ற நோக்கில் 2009 ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்னரான சூழலிலும் சிங்களத் தலைவர்கள் கையாண்டு வரும் உத்திகள் பற்றிப் பல தடவைகள் இந்த அரசியல் பத்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இன்றுவரைகூட இலங்கைக்குச் சாதகமான முறையில் இறுக்கமான புவிசார் அரசியல் பொருளாதார போட்டிகள் இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் நிலவ வேண்டும் என்பதையே சிங்களத் தலைவர்கள் விரும்புகின்றனர் என்பது தெரிகிறது. 'சிறிய நாடு என்ற முறையில் அரசியல் - பொருளாதார லாபங்களைச் சம்பாதிப்பது இலங்கையின் இலக்காகவும் இருக்கலாம். இந்த நிலையில் இந்தியாவை ஈழத்தமிழர் பக்கம் நிற்க வைப்பதற்கான எந்த ஒரு நகர்வுகளிலும் தமிழ்த்தரப்பு உரிய முறையில் ஈடுபடவேயில்லை. உத்திகளைக் கையாள்வதைவிடவும், தமிழ்த்தரப்பை இந்தியா கையாண்ட சந்தர்ப்பங்களே அதிகம். 13 ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு இந்தியாவைக் கேட்பதைத் தவிர வேறு உருப்படியான அரசியல் உத்திகள் பொறிமுறைகள் இதுவரை தமிழ்த்தரப்பால் தயாரிக்கப்படவேயில்லை என்பதுதான் ஆகப்பெரிய துரதிர்ஷ்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி காயத்திரி சாரங்கன்



> நாம் உருவாக்கும் கழிவுகளில் பிளாஸ்ரிக் பொருட்கள் முக்கியமானவை. விட்டெறியும் நம் சமூகத்தின் சின்னங்களாக அவை விளங்குகின்றன. அவைகள் பயன்படுத்தப்பட்டு, பின்பு மறக்கடிக்கப்படுகின்றன. மேலும் அவை என்றும் அழியாத ஒரு கொடூரமான மரபை விட்டுச்செல்கின்றன
>
> ஜாக் கோல்ட்ஸ்மித்

# எங்கும் பிளாஸ்ரிக்: கொல்லும் பிளாஸ்ரிக்!

காலையில் எழுந்ததும் நாம் பல்துலக்கும் தூரிகையில் இருந்து. இரவு படுக்கைக்கு செல்லும் முன் பார்க்கும் கடிகாரம் வரையில் பிளாஸ்ரிக்கால் சூழப்பட்டுள்ளவர்களாக இருக்கின்றோம். அதாவது தற்போதைய உலகில் பிளாஸ்ரிக்கானது நீண்டவாழ்வுடையதாலும், இயற்கை மாற்றங்களுக்கு தாக்குப்பிடிக்க கூடியதாக உள்ளமையாலும், மிகமலிவாக கிடைப்பதாலும் 70 ஆண்டு கால வரலாற்றின் தவிர்க்கமுடியாத ஒன்றாக பிளாஸ்ரிக் எம்மோடு பரிணமித்துவிட்டது.

உலகம் பிளாஸ்ரிக் பூமியாக மாறி வருவதாக அமெரிக்காவின் விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர். புதிய கணிப்பீட்டின் படி உலகில் 8.3 பில்லியன் தொன் எடை கொண்ட பிளாஸ்ரிக் பொருட்கள் உலகெங்கும் உள்ளன. இவை கடந்த 65 வருடங்களில் மாத்திரம் உருவாக்கப்பட்டவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இவற்றின் பாதி அளவானவை கடந்த 13 வருடங்களில் உருவாக்கப்பட்டவையாகும். உலகெங்கும் உள்ள பிளாஸ்ரிக் பொருட்களின் எடையானது. ஒரு பில்லியன் யானைகளின் நிறைக்கு அல்லது அமெரிக்காவில் உள்ள 25 ஆயிரம் அரச கட்டங்களின் எடைக்கு நிகரானதாகும். குறுங் காலத் தேவைக்காக பயன்படுத்தப்படுகின்ற பிளாஸ்ரிக்காலான பொதியிடல் அட்டைகள் போன்றனவே தற்போது உலகத்துக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்துவதாக உள்ளன. உற்பத்தி செய்யப்பட்டுள்ள பொலித்தீன்களில் 70 சதவீதமானவை தற்போது கழிவுகளாக மாறியுள்ளதுடன், இவை உலக நிலப்பரப்பு மற்றும் கடற்பரப்பில் பெருமளவான பகுதியை ஆக்கிரமித்துள்ளன. கழிவுப்பொருட்களாக மாறுகின்ற பிளாஸ்ரிக்குகளில் 9 சதவீதமானவையே மீள்சுழற்சிக்கு உள்ளாக்கப்படுகின்றன. 12 சதவீதமான பிளாஸ்ரிக் பொருட்கள எரியூட்டப்படுகின்றபோதும், 79 சதவீதமானவை நிலத்தில் அல்லது கடலில் கொட்டப்படுகின்றன. தற்போதைய இந்த நிலைமை நீடிக்கும் பட்சத்தில், 2050 ஆம் ஆண்டாகும் போது. உலகெங்கும் 12 பில்லியன் எடைகொண்ட பிளாஸ்ரிக் சேர்ந்திருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


பிளாஸ்ரிக்கை கண்டுபிடிக்க முன்பு மக்கள் தங்களுடைய பொருள்களை பாதுகாக்க இயற்கை இறப்பரையே பயன்படுத்தி வந்தனர். தொடர்ந்து வந்த மனிதத்தேவைகளின் அதிகரிப்பால் இயற்கை இறப்பருக்கான கேள்வி அதிகரித்தது. ஆனால் இயற்கை இறப்பரானது. இறப்பர் மரங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட இறப்பர் பாலால் உருவாக்கப்படுவது என்பதால் அதன் உற்பத்தியை அதிகரிப்பது கடினமாக இருந்தது. இதற்கு மாற்றாக முழுவதும் செயற்கை மூலக்கூறுகளாலான ஒரு பொருளை உருவாக்க வேண்டிய நிர்ப்பந்தம் விஞ்ஞானிகளுக்கு உருவானது.

பிளாஸ்ரிக்கின் வரலாறு 1800களின் மத்தியில் ஆரம்பமானது. உலகம் முழுவதும் இருந்த விஞ்ஞானிகள் இறப்பரின் உற்பத்திச் செயன்முறையில் இருக்கும் இயற்கை லாடெக்ஸை அகற்றி முழுவதும் செயற்கையான (syntheitc) ஒரு உற்பத்தியை மேற்கொள்ள ஆராய்ச்சிகளில் ஈடுபட்டனர்.

இதன்படி பிளாஸ்ரிக்கை கண்டுபிடித்தவர் இங்கிலாந்தைச் சேர்ந்த உலோகவியலாளரும், கண்டுபிடிப்பாளருமான அலெக்சாண்டர் பார்க்ஸ். அலெக்சாண்டர் தன்னுடைய வாழ்வின் பெரும்பகுதியை இறப்பர் சார்ந்த பொருட்கள் குறித்து ஆய்வுசெய்வதற்கு செலவழித்தார். இறுதியாக 1950 இல் செலுலோஸ் (cellulose) இல் இருந்து பெறப்பட்ட சில சேதன (orgniac) மூலப்பொருட்களை யும், வேறு சில கனியங்களையும் ஒன்றிணைத்து பார்க்சின் (யசமநளநைெ) என்ற முதல் பிளாஸ்ரிக் உருவானது. பின்னர் புதிய உற்பத்தி பெருமளவில் உலகெங்கும் மேற்கொள்ளக்கூடியவாறு இருக்க வேண்டும் என்ற நோக்கத்தால் சில தசாப்தங்கள் கழித்து 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பல நுண்ணிய செப்பமாக்கல்களுக்கு பின்னர் பிளாஸ்ரிக் பிரமாண்டமான ஒரு உற்பத்திப்பொருளாக மாறியது.

இன்றைய காலகட்டத்தில் பல்வேறு துறைகளில் பிளாஸ்ரிக் மூலப்பொருளாக விளங்கிவருகிறது. அவற்றுள் மிகப்பெரிய துறைகளில் ஒன்று விளையாட்டு பொருட்கள் உற்பத்தி. தவழ்ந்து திரியும் சிறு குழந்தைகளில் இருந்து பள்ளி செல்லும் மாணவர்கள் வரை அனைத்துச் சிறார்களுமே பிளாஸ்ரிக் பந்து, பொம்மைகளை தங்கள் வாழ்வின் ஒரு அங்கமாக வைத்துக்கொள்வார்கள். குறிப்பாக நித்திரைக்குச் செல்லும் போது கூட சில குழந்தைகள் அவற்றைக் கைவிடுவதில்லை. அத்துடன் காய்கறி, பால், துணிக்கடைகள், மருந்துக்கடைகள், மின்னணு சாதனங்கள், மளிகைப் பொருட்கள், தேநீர்க் கடைகள், வாகனப் பொருட்கள், உணவுப் பொருட்கள் போன்ற எண்ணற்ற முறையில் பிளாஸ்ரிக்கின் பயன்பாடு அதிகமாக உள்ளது. ஆனால் இவ்வாறு உபயோகப்படுத்தப்படும் பிளாஸ்ரிக்கின் நன்மைகள் அல்லது தீமைகள் பற்றி பலரும் சிந்திப்பது இல்லை.

இயற்கைப் பொருட்கள் யாவும் காலவோட்டத்தில் உக்கிக் கரைந்துபோக, செயற்கைப் பிளாஸ்ரிக் மட்டும் அதன் பிரம்மாவான மனிதனிடம் சாகாவரம் வாங்கி வந்தது போல் நிலம், நீர், காற்று என்று இயற்கையின் மேனி முழுவதும் தன் கோரப் பற்களை ஆழப்பதித்துள்ளது. இதனால் மனிதர் மாத்திரமன்றி, விலங்குகள், கடல்வாழ் உயிரினங்கள் என அனைத்து உயிரினங்களுக்கும் பாதிப்பை எதிர்கொள்கின்றன. தாவரங்கள், நுண்ணுயிர்க் கிருமிகள் கூட விதிவிலக்கல்ல. அதாவது காற்றிலும் நீரிலும் நிரம்பியுள்ள பிளாஸ்ரிக் நுண்துகள்கள் சுவாசத்தின் மூலமும் உணவின் மூலமும் மனித உடலினுள் நுழைந்து நுரையீரலிலும் உள் இழையங்களிலும் தேங்கி வருகின்றன. இவ்வாறு வார



மொன்றுக்கு 5 கிராமளவு பிளாஸ்ரிக் நுண்துகள்கள் மனித உடலைச் சென்றடைந்து கொண்டிருப்பதாக மருத்துவ விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். குறிப்பாக பிளாஸ்ரிக் துகள்கள் மனித உடலை தண்ணீர், உணவு சுவாசம் என்பவற்றின் ஊடாக வந்தடைகின்றன. அதிலும் நீருடன் உடலில் கலக்கும் துகள்களே அதிகம் என்று அறியப்பட்டுள்ளது. பிளாஸ்ரிக்கின் துகள்கள் மிகச் சிறிய அளவில் இருப்பதால் இவை சமிபாட்டுத் தொகுதியில் அகத்துறிஞ்சப்பட்டு இரத்தச் சுற்றுடன் கலந்து சகல உறுப்புகளையும் சென்றடைகின்றன. கலச் சுவர்களையும் இவை ஊடறுத்துச் செல்லக் கூடியதாக இருப்பதால் இவற்றின் தாக்கம் அதிகமாக உள்ளது. இவற்றை உடலை விட்டு வெளியேற்றவும் முடியாமல் ஈரல், சிறுநீரகம் என்பன சிரமத்தை எதிர் நோக்குகின்றன. இதனால் இந்தத் துகள்களின் படிவால் உடல் உறுப்புகள் மெதுமெதுவாகப் பாதிப்புக்குள்ளாகின்றன. காலவோட்டத்தில் இவற்றின் செயற்திறன் பாதிப்புக் குள்ளாகின்றது. இறுதியில் இவ்வுறுப்புகள் செயலிழக்கும் நிலைமையும் உருவாகின்றது. சுவாசக் கோளாறுகள் முதல் புற்றுநோய்கள் வரை பல்வேறு விபரீதங்களை எதிர்கொள்கின்றோம். அத்துடன் பிளாஸ்ரிக் கழிவுகளை எரிப்பதால் வெளிவரும் கொடும் டையொக்சின் வாயு மனிதர்களை மலடாக்கி வருகிறது. மக்கள் பண்டைய காலத்தில் இருந்து வாழை இலையில் சாப்பிடுவதையும் துணிப்பைகளில் தாம் பூலப் பைகள் தருவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். பித்தளை, சில்வர் போன்றவைகளில் தண்ணீர் சேமித்தல், நீர் அருந்துதல் போன்ற முறைகளில் இருந்தவர்கள் தற்போது பிளாஸ்ரிக் மோகத்தில் இயற்கை வாழை இலைக்குப் பதிலாக பிளாஸ்ரிக் இலைகள், தட்டுகள், பிளாஸ்ரிக் டம்ளர்கள், பிளாஸ்ரிக் கரண்டிகள் போன்ற எண்ணற்ற வடிவில் செயற்கையை நாடிச் செல்கின்றனர்.


ஆனால் பிளாஸ்ரிக்கால் உருவாகும் பொருட்கள் அனைத்தும் வேதியல்முறையில் தயாரிக்கப்பட்டவை. இந்த பிளாஸ்ரிக்கில் சூடாகவோ, குளிர்ச்சியாகவோ, வெகு நாட்களாக இருப்பினும் பிளாஸ்ரிக்கானது வேதிவினை புரிவதால், அவற்றை நாம் பயன்படுத்தும் போது நம் உடலில் தேவையற்ற கொடிய வேதிப்பொருட்கள் சேர்ந்து பல நோய்கள் ஏற்படுகின்றன.

குறிப்பாக தற்காலத்தில் குழந்தைகள் முதல் வேலைக்கு செல்லும் பெரியவர்கள் வரை அனைவருமே தண்ணீர் கொண்டு செல்ல பிளாஸ்ரிக் போத்தல்களையே அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். எனினும் இந்தப் பிளாஸ்ரிக் போத்தல்களுக்கு நிலைத்திருக்கும் ஆற்றலை வழங்குவதற்கு சேர்க்கப்படும் phthaletes மற்றும் BPA என்பவை ஆண், பெண் இருபாலாரிலும் கணிசமான ஹோர்மோன் தாக்கத்தை ஏற்படுத்தும். இவ்வாறான பிளாஸ்ரிக் போத்தல்களை தொடர்ந்து பயன்படுத்தி வரும் போது ஆண்களின் விந்து எண்ணிக்கை தொடர்ச்சியாகக் குறைவடை வதுடன், பெண்கள் மிக இளவயதிலேயே பருவமடையும் (premature puberty) நிலையும் உருவாகும். மேலும் பிளாஸ்ரிக் பொருட்களை உற்பத்தி செய்யும் போது சுழலுக்கு வெளியிடப்படும் நச்சுவாயுக்களால் (toxic gases) பாதக விளைவுகளைத் தடுக்கும் முகமாக பிளாஸ்ரிக்கை மீள்சுழற்சி செய்யும் முறையை அறிமுகம் செய்தனர் விஞ்ஞானிகள். எனினும் பிளாஸ்ரிக் பொருட்களை மீள்சுழற்சி செய்யும் போதும் அதே வகையான டாக்ஸிக் வாயுக்கள் வளிமண்டலத்தில் சேர்ந்தவண்ணமே இருக்கின்றன. பிளாஸ்ரிக் உற்பத்தியின் போது சேர்க்கப்படும் சில சேர்மானங்களால் மனித உடலின் அனுசேபத் தொழிற்பாடுகள் (metabolism) மோசமாகப் பாதிப்படையச் செய்யும். சிறிய விளையாட்டுப் பொம்மைகளை குழந்தைகள் வாயிலோ அல்லது மூக்கிலோ உட்செலுத்துவதன் மூலம் பல துர்மரணங்கள் சம்பவித்தமை உலக அளவில் பல நாட்டு அரசாங்கங்களின் கண்டனத்துக்கு உரியதாக மாறின. இதனைத் தொடர்ந்தே ஒவ்வொரு விளையாட்டு பொருள் உற்பத்தியிலும் அவற்றைப் பயன்படுத்தக்கூடிய ஆகக்குறைந்த வயதெல்லை அச்சிடப்பட்டது. இவற்றை விட பொலித்தீன் பைகள் கூட மிகவும் ஆபத்தான பொருட்களாக மாறிவிட்டன. விளையாட்டாக பொலித்தீன் பைகளால் தலையை சுற்றிக்கொண்டு மூச்சுத்திணறலால் உயிரை விட்ட குழந்தைகள் பற்றியும் பல செய்திகளை அறியமுடிகின்றது. பிளாஸ்ரிக் கழிவுகள் நிலத்தைப் போர்த்தி மண்ணினுள் மழை நீர் இறங்குவதை அனுமதிக்காததோடு ஊற்றுப்புகுவதையும்

([illegible] பக்கம் [illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொன்மையும், நவீனமும் கலந்த புதிய பாதையில் தமிழ் பயணிக்கும்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் தலைவராக மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ள பேராசிரியர் கி. விசாகரூபன், நான்காவது சர்வதேசத் தமிழியல் மாநாட்டுக்கான பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றார். அந்தப் பணிச்சுமைக்கிடையில், தமிழியல் மாநாடு குறித்தும் தமிழ்த்துறையின் செயற்பாடுகள் குறித்தும் 'சஞ்சீவிக்காக' வழங்கிய நேர்காணல் இது.

நேர்கண்டவர்: ஔண்யன்

**கே: மூன்றாவது முறையாகத் தமிழ்த்துறையின் தலைவராக நீங்கள் பொறுப்பேற்றமைக்கு எமது வாழ்த்தோடு இந்த நேர்காணலை ஆரம்பிக்கிறோம். தமிழ்மொழி தொடர்பில் தமிழாராய்ச்சி மாநாடு, செம்மொழி மாநாடு என்று பரவலாக ஆய்வு மாநாடுகள் இடம்பெற்ற , இடம்பெறுகின்ற சூழலில் யாழ். பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையின் தமிழியல் மாநாடு எவ்விதம் தனித்துவமானது?**

ப: ஏனைய ஆய்வுமாநாடுகள் ஒரு பொதுவான அமைப்பால் அல்லது நிறுவனங்களால் நடத்தப்பட, தமிழியல் மாநாடு யாழ்.பல்கலைக்கழகம் என்ற உயர்கல்வி நிறுவனத்தால் நடத்தப்படுவதே ஒரு தனித்துவம் தான். பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் ஆய்வு மாநாடு என்ற ரீதியில், ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு கருப்பொருள் தீர்மானிக்கப்பட்டு, அதனடிப்படையில் தகைமையானோரிடம் ஆய்வுக்கட்டுரைகள் கோரப்பட்டு, அவை இறுக்கமான வகையில் பரிசீலிக்கப்பட்டு, பொருத்தமானவையெனத் தெரிவுசெய்யப்படும் ஆய்வுகள், மாநாட்டில் பங்கேற்க அனுமதிக்கப்படுகின்றன.

இந்த ஆய்வுக்கட்டுரைகளைத் தனியே பல்கலைக்கழக மட்டத்திலானோர் மட்டுமே சமர்ப்பிக்கலாமென்ற வரையறைகள் எதுவுமில்லை. எல்லோருக்குமான வாசல்கள் திறந்துவிடப்பட்டுள்ளன. இம்முறை சிங்கப்பூர், இந்தியா, பிரான்ஸ்,கனடா போன்ற நாடுகளில் இருந்தெல்லாம் ஆய்வுக்கட்டுரைகளை பலரும் சமர்ப்பித்துள்ளனர். இந்தியாவில் உள்ள பல்கலைக்கழகங்களின் துறைத் தலைவர்கள் கூட சமர்ப்பித்துள்ளனர். அதனைவிட, யாழ்ப்பாணத்துப் பாடசாலையொன்றின் உயர்தர மாணவன் ஒருவனும் இம்முறை ஆய்வுக்கட்டுரையைச் சமர்ப்பிக்கவுள்ளான் . இவ்வாறு எல்லா மட்டத்தில் இருந்தும் ஆய்வுக்கட்டுரைகள் வந்தாலும், அவை பொருத்தமானவையா என்பது இறுக்கமாகப் பரிசீலிக்கப்பட்டே ஆய்வில் பங்கேற்க அனுமதிக்கப்பட்டு, தொகுக்கப்பட்டு நூலுருவாக்கமும் செய்யப்படுகின்றன. இத்தகைய செம்மையான ஆய்வுகள் தமிழுக்கு புதிய இரத்தத்தைப் பாயச் செய்வதோடு, செழுமையான தளத்தையும் உருவாக்குமென நம்புகிறோம்.

**கே: அப்படியானால் நான்காவது தமிழியல் மாநாட்டுக்கான ஆய்வுகளின் கருப்பொருளாக எதனைத் தீர்மானித்திருக்கிறீர்கள்?**

ப: 'சமூகக் கட்டுமானத்தில் சங்கமருவிய கால அற இலக்கியங்கள்' என்பதையே நான்காவது தமிழியல் மாநாட்டுக்கான கருப்பொருளாகத் தெரிவு செய்துள்ளோம்.தமிழிலக்கியத் தேட்டத்திலே கணிசமானவை அறநீதி இலக்கியங்களே. அத்தகைய அறநீதி இலக்கியங்கள் எக்காலத்துக்கும் பொருந்தக்கூடியனவாக இருப்பதை , அவற்றின் பெறுமதியை இந்த உலகம் அறிந்து கொள்ளவேண்டுமென்ற நோக்கோடே இந்தமுறை தமிழியல் மாநாட்டுக்கான கருப்பொருள் தெரிவு செய்யப்பட்டது.

அதைவிட இன்னொரு முக்கியமான காரணமும் இந்தக் கருப்பொருள் தெரிவில் உண்டு. சங்ககாலத்தில் இடையறாத போர், அழிவு என்பவற்றால் உருக்குலைந்து, துவண்டிருந்த தமிழ் மக்களுக்கு சங்கமருவியகால அறநீதி இலக்கியங்கள் ஒரு உள ஆற்றுப்படுத்தலை வழங்கி, மீண்டும் தமிழ்ச் சமூகம் மீண்டெழ வழிவகுத்தன. ஏறக்குறைய அதேநிலையில் தான் இப்போதும் தமிழ்ச்சமூகம் தாழ்வுற்று, வறுமை விஞ்சி, விடுதலை தவறிக்கெட்டு பாழ்பட்டு நிற்கின்றது. இத்தகைய நேரத்தில் சங்கமருவிய கால அற நீதி இலக்கியங்கள் மூலம் செய்யப்பட்ட அதே ஆற்றுப்படுத்தலை மீளவும் செய்வதே இந்த மாநாட்டின் சமூகப் பயனாக அமையுமென நம்பலாம்.

**கே: தமிழியல் மாநாடு ஏற்கனவே கடந்த மூன்று வருடங்களாக நடந்தேறி வருகின்றது, இம்முறை நான்காவது மாநாடு புதிய தடத்தில் புதிய அம்சங்களோடு பயணிக்குமா?**

ப: நிச்சயமாக. கடந்தகால மாநாட்டின் நீட்சியாகவே இந்தமுறையும் மாநாடு நடக்க இருந்தாலும், சில புதிய அம்சங்களையும் உள்ளீர்த்துள்ளோம். குறிப்பாக பாடசாலை மாணவர்களையும், பல்கலைக்கழகத்தின் பிற பீட மாணவர்களையும் தமிழியல் மாநாட்டோடு இணைக்கும் வகையில் புதிய நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளோம். யாழ்.மாவட்டத்தின் 5 கல்வி வலயங்களிலும் உள்ள உயர்தர மாணவர்களுக்கென ஒரு பேச்சுப்போட்டியை நடத்தியுள்ளோம். அதேபோன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் உள்ள சகல பீட மாணவர்களுக்கும் இடையேயான தமிழறிவுப் போட்டியொன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன. இந்தப் போட்டிகளில் வெற்றியீட்டுவோருக்கு மாநாட்டின் போது, துணைவேந்தரின் கைகளால் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

இன்னொரு சிறப்பான அம்சமும் இந்த மாநாட்டில் உண்டு.பொதுவாக எல்லோரும் தமிழ் என்றவுடன் வடக்கையும், கிழக்கையும் மட்டும் தான் கணக்கில் எடுக்கிறார்கள். நாங்கள் இந்தத் தமிழியல் மாநாட்டில் மலையகத்தையும் உள்வாங்க எண்ணியுள்ளோம். கூத்துக் கலைக்கு பங்களிப்புச் செய்த மூத்த அண்ணாவிமார்களை மலையகம் , கிழக்கு, வடக்கு என நாடெங்கிலும் இருந்து தெரிவு செய்து அவர்களுக்கான கௌரவிப்பை தமிழியல் மாநாட்டில் வழங்கவுள்ளோம்.

அதேபோன்று தமிழ்த்துறையின் வளர்ச்சிக்கு வித்திட்ட மூத்த பேராசிரியர்களையும் தமிழியல் மாநாட்டில் கௌரவிக்கவுள்ளோம். பேராதனைப் பல்கலைக்கழக மூத்த பேராசிரியர் சி.தில்லைநாதன், பேராசிரியர் எம்.ஏ.நுஃமான், யாழ்.பல்கலைக்கழக மூத்த பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆகியோர் தமிழியல் மாநாட்டில் இம்முறை கௌரவிக்கப்படவுள்ளனர். கூடவே, கடந்த மாநாடுகளின் போது தவறவிடப்பட்ட பண்டிதர்களும் கௌரவம் பெறவுள்ளனர். அத்தோடு யாழ்ப்பாணத் தமிழ் அகராதியைத் தொகுத்தமைக்காக நடராஜா சிறிரஞ்சன் என்ற ஆளுமையும் மாநாட்டில் வைத்து கௌரவிக்கப்படவுள்ளார்.

இன்னொரு சிறப்பசம் யாதெனில், இம்முறை மாநாட்டுக்காக, இந்தியாவின் சென்னைப் பல்கலைக்கழகத்தின் மொழித்துறைத்தலைவர் பேராசிரியர் ய.மணிகண்டன் நேரடியாக வந்து திறப்புரையை நிகழ்த்தவுள்ளார்.

ஓகஸ்ட் 7 ஆம் திகதி நடத்த உத்தேசித்துள்ள இந்த மாநாட்டின் ஓர் அம்சமாக ஓகஸ்ட் 9 ஆம் திகதி எமது எமது பண்பாட்டின் பேறான பாரம்பரியக் கூத்து முதலான அரங்கவடிவங்களின் அளிக்கையும் இடம்பெறவுள்ளது. எமது மரபார்ந்த கூத்து வடிவம் தன் இருப்பை இழந்துவரும் நிலையில்,அதனை மீளுயிர்ப்பூட்டும் வகையில் கூத்தில் உள்ள பல்வேறு விதமான மோடிகளை, பாணிகளை இதன்போது ஆற்றுகை செய்யவுள்ளோம். அதற்கான ஒத்திகைகள் வடக்கில் உள்ள நாட்டுக்கூத்துக் கலைஞர்களோடு இணைந்து இப்பொதே தொடங்கி விட்டன. ஆய்வுமாநாட்டையும், இந்தக் கலைநிகழ்வுகளையும் சகலரும் இலவசமாக கண்டுகளிக்க முடியும்.

## போரால் உருக்குலை
## தமிழ்ச் சமூகத்துக்கு
## தமிழ் இலக்கியங்க
## ஒத்தடம் கொடுக்கு

## பேராசிர

**கே: இப்போதைய பொருளாதார நெருக்கடியில், இப்படியொரு ஆய்வு மாநாட்டுக்கான பொருளாதார இயலுமையை யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறையால் தாங்கிக் கொள்ளமுடியுமா?**

ப: இதற்கு நாங்கள் சிங்கப்பூர் கந்தையா கார்த்திகேசன் அறக்கொடை நிதியத்தினரைத்தான் நன்றியோடு நினைவில் கொள்ளவேண்டும். ஏனெனில் இந்த மாநாட்டுக்கான நிதியனுசரணையை இந்த அறக்கொடை நிதியத்தினரே வழங்குகின்றனர். மதிப்புக்குரிய எமது துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜாவும், கலாநிதி ஆறுதிருமுகனும் இந்த நிதியனுசரணை கிடைப்பதற்காகத் துணைநின்றார்கள். தமிழ்த்துறைக்கும், இசைத்துறைக்குமென கந்தையா கார்த்திகேசன் அறக்கொடை நிதியத்தால் வைப்பிடப்பட்டுள்ள பணத்தின் வட்டியிலேயே வருடாவருடம் இந்த ஆய்வு மாநாட்டை நாம் சிறப்பாகச் செய்ய முடிகின்றது. இதனால் தமிழியல் மாநாட்டுக்காக வேறெந்த நிதியனுசரணையாளர்களையும் தேடவேண்டிய பெரும் சுமை இல்லாமல் போயுள்ளது.

**கே: பொதுவாக இதுபோன்ற ஆரோக்கியமான முன்னெடுப்புகளின் போது பலவழிகளில் இருந்தும் இடையூறுகள், தடைகள் வருவதுண்டு. தமிழியல் மாநாட்டுக்கு அப்படியான தடைகள் ஏதுமுண்டா? இந்த மாநாட்டுக்கான பல்கலைக்கழகத்தின் ஆதரவு எப்படியிருக்கிறது??**

ப: பதில்: உண்மையில் அப்படியான தடைகளோ, இடையூறுகளோ இதுவரை எமக்கில்லை. மாறாக யாழ்.பல்கலைக்கழக மட்டத்தில் ஆதரவுதான் பெருகிவருகிறது. தன்னுடைய கடுமையான வேலைப்பளுவின் மத்தியி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழியல் மாநாடு: தமிழில் ஒரு பெரும் பாய்ச்சல்

லைந்த
ங்கு
கள்
தும்!

சிரியர் கி.விசாகரூபன்

லும் துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா . என்னை அடிக்கடி தொடர்பு கொண்டு மாநாட்டுப் பணிகள் குறித்து அக்கறையோடு விசாரித்து அறிந்து, தேவையான உதவிகளையும் செய்தபடியுள்ளார். அதேபோன்றே கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராமும் எமது தமிழியல் மாநாட்டுக்கு பெரும் உந்துதலை தந்தபடியிருக்கிறார். அத்தோடு ஏனைய துறைத்தலைவர்கள், பீடாதிபதிகள், மாணவர்கள் என சகலரும் தமிழியல் மாநாட்டுக்கு தாமாகவே முன்வந்து ஆதரவை நல்குகின்றனர்.

**கே:** இப்போது தமிழ்மொழி ஒருவித தேக்கநிலையை அடைந்திருப்பதாகப்படுகின்றது. குறிப்பாக ஏனைய பாடங்களை விடவும் தமிழை ஒரு தரம் தாழ்ந்த வகையிலேயே பாடாசாலை மட்டத்தில் இருந்து பல்கலை வரை நோக்கும் போக்கு இருப்பதாகச் சொல்லப்படுகின்றதே ?

**ப:** தமிழின் இப்போதைய தேக்க நிலைக்கு மிக முக்கியமான காரணம், வாசிப்பின்மை தான். இலத்திரனியல் வாசிப்புக்குள் இன்றைய சந்ததி மூழ்கினாலும் கூட, அவர்கள் வாசிப்பதென்னவோ செய்திகளும், மேலோட்டமான பதிவுகளும் தான். ஆழமான வாசிப்புக்கு இப்போது இடமில்லாமல் போய்விட்டது. அதைவிட, பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை ஆசிரியர்களின் கற்பித்தல் அணுகுமுறையிலும், பாடத்திட்டத்திலும் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, சந்தைக்குத் தேவைப்படும் வகையிலான பாடத்திட்டத்தையே உலகவங்கி முதலானவை பரிந்துரைக்கின்றன. அதனால் ஒரு மட்டுப்பாட்டுக்குள் தான் தமிழை போதிக்கவேண்டியிருக்கிறது. மாணவர்களின் 'விடாய்' தீருமட்டும் தமிழைப் புகட்டினாலேயே அவர்களுக்கு தமிழ் மீது ஆர்வமும் பற்றும் பிறக்கும். ஆனால் இப்போது பல்கலைக்கழக மட்டத்தில் தமிழ்த் துறையில், ஆர்வமும் , ஈடுபாடும் கொண்ட பல மாணவர்களை மீண்டும் இனம் காண முடிகின்றது. அவர்களது தமிழ்ப்பற்று எதிர்காலத்தில் தமிழ்மொழி இன்னமும் செழுமையடையும் என்ற நம்பிக்கையைத் துளிர்க்கச் செய்கின்றது.

**கே:** மூன்றாவது முறையாக நீங்கள் தமிழ்த் துறைத்தலைவராகப் பொறுப்பேற்றுள்ள இந்தப் பதவிக்காலத்தில் தமிழுக்கும், அதன் வளர்ச்சிக்கும், நீட்சிக்குமென எப்படியான செயற்பாடுகளைத் திட்டமிட்டுள்ளீர்கள்?

**ப:** பல்கலைக்கழக தர நிர்ணயத்துக்கு ஏற்ற வகையில், எமது பாடத்திட்டத்தில் சில மாற்றங்களையும், காலத்துக்குத் தேவையான புதிய விடயங்களையும், நவீன கற்றல் அணுமுறைகளையும் உள்ளடக்கத் திட்டமிட்டுள்ளேன். காலம் கைகூடும் போது அவை நடைமுறைக்கு வரும். அதுதவிர, எமது எமது பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் முதுகலைமாணிக் கற்கைநெறிமூலம், ஒவ்வொரு அணியிலும் சுமார் 50 பேர் தமிழ்த் துறையில் உள்ளீர்க்கப்படுகின்றனர்.

ஏனைய பல்கலைக்கழகங்களில் இவ்வளவு தொகை மாணவர்கள் முதுகலைமாணிக் கற்கைக்கு உள்வாங்கப்படுவது குறைவு. இங்கு எண்ணிக்கையை மட்டும் நான் சிலாகிக்கவில்லை. வேறெந்தப் பல்கலைக்கழகங்களிலும் இல்லாதவகையில், இந்த முதுகலை மாணி மாணவர்களுக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்களோடு, பண்டித மரபில் வந்தவர்களும் தமிழ்மொழியைப் போதிக்கிறார்கள். இதனூடாக எமது மரபார்ந்த தமிழ்மொழிக் கற்றல் அனுபவத்தையும், நவீன கற்றல் அனுபவத்தையும் ஒருங்கே பெற்றுக்கொள்ளும் வாய்ப்பையும் உண்டாக்கியுள்ளோம். இதுபோன்று , எமது மரபுரீதியான தமிழ்மொழிக் கற்றலையும், நவீனத்தையும் இணைக்கும் வகையிலான முயற்சிகளை மேற்கொள்வதனூடாக தமிழ் மொழியின் தொன்மையத் தக்கவைப்பதோடு, நவீனத்துவத்துகேற்ற வகை யிலும் தமிழ்மொழி தன்னைப் புதுப் பித்துக் கொண்டு, அதனை எக்காலத்துக்கும் எங்கும் வியாபிக்க வைப்பதே எமது நோக்கம்.



# எங்கும்....

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தடைசெய்கின்றன. பிளாஸ்ரிக் பைகளின் சராசரி பயன்படுநேரம் வெறும் 20 நிமிடம் மட்டுமே. ஆனால் பிளாஸ்ரிக் மக்குவதற்கு 400 முதல் 1000 ஆண்டுகள் எடுத்துக்கொள்கிறது.

**பிளாஸ்ரிக் மக்குவதற்கு எடுக்கும் காலம்**

| | |
|---|---|
| பிளாஸ்ரிக் பைகள் | 100-1000 ஆண்டுகள் |
| பஞ்சுக் கழிவுகள் | 15 மாதங்கள் |
| காகிதம் | 25 மாதங்கள் |
| தோல் காலணி | 25-40 ஆண்டுகள் |
| டயபர் நாப்கின் | 500-800 ஆண்டுகள் |

எனினும் இந்தக் காலப்பகுதிக்கு இடையே இவை காடுகளிலும் கடல்களிலும் சேர்வதால் விலங்குகள் அதிகம் பாதிப்படைகின்றன. ஏற்கனவே மனித நாகரிக வளர்ச்சியால் பாதிப்படைந்து, வாழ்விடங்களை இழந்து வரும் விலங்குகள் பிளாஸ்ரிக் கழிவுகளை உணவோடு சேர்த்தும், உணவென நினைத்தும் விழுங்குவதால் தரையில் யானைகள் முதல் கடலில் மீன்கள் வரை பல மில்லியன் கணக்கான உயிர்கள் ஆண்டு தோறும் பலியாகி வருகின்றன. சராசரியாக 8 மில்லியன் தொன் பிளாஸ்ரிக் கழிவுகள் வருடத்திற்கு கடலில் சேர்ந்தவண்ணம் உள்ளன. இந்தக்கழிவுகளை உணவு என நினைத்து உட்கொள்வதால் கடல்வாழ் உயிரினங்களின் வாழ்க்கைக்கும் பறவைகளின் வாழ்க்கைக்கும் மாபெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளன. பிளாஸ்ரிக் கழிவுகளை உட்கொள்ளும் மீன்களை மனிதர்கள் உட்கொள்வதால் மனித உணவுச்சங்கிலிக்குள் பிளாஸ்ரிக் சேர்ந்து மோசமான உடல் உபாதைகளை ஏற்படுத்தும். இதன் விளைவாகப் பூமி தினந்தோறும் பல உயிர்களை இழந்து வருகிறது.

இலங்கைக் கடற்பரப்பில் கடந்த 2021 ஆம் ஆண்டு தீ விபத்துக்குள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் காணப்பட்ட பொருட்களில் அதிகளவானவை பிளாஸ்ரிக் பொருட்களே. இதுவரையில் கரையொதுங்கி கொள்கலன்களில் சேகரிக்கப்பட்டுள்ளவையும் பிளாஸ்ரிக் பொருட்களேயாகும். இவை இரு நிறுவனங்களால் 3 மாதங்களுக்கு உபயோகிப்பதற்கு மாத்திரம் கொண்டு வரப்பட்டவையாகும். இவற்றில் பெரும்பாலானவை கடலில் கலந்திருக்கக் கூடும். ஏனையவை மீன்களின் உடலுக்குள் சென்றிருக்கும்.

இரு நிறுவனங்களால் மாத்திரம் இந்தளவு பெருந்தொகை பிளாஸ்ரிக் கொண்டு வரப்பட்டுள்ளது என்றால், இலங்கையில் இயங்கும் 8 நிறுவனங்களும் வருடாந்தம் எந்தளவு பிளாஸ்ரிக் பொருட்களை இறக்குமதி செய்யும் என்று மதிப்பிட முடியும். இவ்வாறு உபயோகிக்கப்படும் பிளாஸ்ரிக் கடலிலும், நீர் நிலைகளிலும், வாவிகளிலும், நிலத்திலும் கலக்கும். இவற்றினால் நூற்றாண்டு காலத்திற்கு மீள முடியாத பெரும் சூழல் மாசு ஏற்படும்.

மிகச் சொற்பமான பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகளே மீள் சுழற்சி செய்யப்படுகின்றன. மண்ணில் புதைக்கப்படுகின்ற இந்தக்கழிவுகள் உக்கி அழிவதில்லை. அதேவேளை அவற்றில் ஒரு பகுதி சிறு துகள்களாகி மண்ணில் இருந்து மழை நீருடன் நிலத்தடி நீரோடு இணைகின்றது. பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகள் எரிக்கப்படும் போதும் அவை அதிக மாற்றமின்றி வளிமண்டலத்தில் சேர்கின்றன. இந்தத்துகள்களும் மழை நீரோடு கலந்து நிலத்தை வந்தடைந்து, கீழிறங்கி, நிலத்தடி நீரை மாசுபடுத்துகின்றன. இதனால் நிலத்தடி நீர் மாசடைந்து எமது குடிநீரும் மாசடைகின்றது.

மழை வீழ்ச்சியுடன் கலந்து வரும் இதன் துகள்கள் ஆற்று நீரையும், நீர்த் தேக்கங்களையும் மாசுபடுத்துகின்றன. இதனால் ஆற்றிலிருந்து பெறப்படும் குடிநீரும் மாசடைந்தே காணப்படுகின்றது. வடிகட்டலையும், சுத்திகரிப்பையும் தூண்டும் அளவுக்கும் பிளாஸ்ரிக் துகள்கள் மிகச் சிறியனவாக உள்ளமையால் குடிநீர் மாசினைத் தவிர்க்க முடியவில்லை. உலகளாவிய ரீதியில் இன்று குடிநீரில் 80 வீதத்துக்கும் மேற்பட்ட இடங்களில் பிளாஸ்ரிக் மாசுகள் உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதில் அமெரிக்கா முதலிடத்திலும், இந்தியா இரண்டாம் இடத்திலும் உள்ளதாக இனம் காணப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதங்கேணியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அது அவருடைய ஒரு காலகட்ட அரசியல் நிலைப்பாடு என்றே எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால் பிறகு ஒரு காலம் அவருடைய வேறொரு அரசியல் நிலைப்பாட்டுக்காகவே அவர் கொல்லப்பட்டார். அந்த நேரத்தில் அவர் தனது கொழும்பு மைய வாழ்க்கையை, தன்னுடைய சொத்துக்களை பாதுகாக்கும் ஓர் அரசியல் நிலைப்பாட்டை எடுத்திருந்திருந்தால் அவர் தன் உயிரைப் பாதுகாத்து இருந்திருக்கலாம். ஒரு மூத்த வாக்காளர் கூறினார்"ஜீ.ஜீ.பொன்னம்பலம் பெற்றெடுத்த ஒரு செல்வநாயகந்தான் குமார் பொன்னம்பலம்" என்று.

தமிழ் அரசியலில் சட்டச் செயற்பாட்டாளர்கள் என்று பார்த்தால், குறிப்பாக பயங்கரவாத தடைச்சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களிடம் ஒரு சதம்கூட வாங்காமல் வழக்காடியவர் என்று பார்த்தால், குமார் பொன்னம்பலத்தின் வாழ்வு பெரியது. மனிதர்களை அவர்களுடைய தொகுக்கப்பட்ட வாழ்க்கைக்குள்ளால்தான் நிறுக்கலாம். ஒரு மனிதருடைய ஒரு காலகட்ட நிலைப்பாட்டை மட்டும் வைத்து நிறுக்க முடியாது. எதிலும் ஒரு தொகுக்கப்பட்ட முழுமையான பார்வை அவசியம். தமிழ் அரசியலில் ஒருவர் தனது துறைசார்ந்து அதிகமாகத் தொண்டு செய்தாரா அல்லது தொழில் செய்தாரா என்று பார்க்க வேண்டும். இது குமார் பொன்னம்பலத்துக்கும் பொருந்தும். முன்னணியால் கேவலமாகவும் கீழ்த்தரமாகவும் விமர்சிக்கப்பட்டவர்களுக்கும் பொருந்தும். எனினும், சரிக்கும் பிழைக்கும் அப்பால் முன்னணி தமிழ் அரசியலை நொதிக்கச் செய்கின்றது. இது அந்தக்கட்சியின் ஆதரவுத் தளத்தை பலப்படுத்தும். முன்னணி பயப்படாமல் போராடுகிறது. அந்த முன்னுதாரணத்தை பின்பற்றி மக்கள் திரளக்கூடாது என்று சிந்தித்தே அரசாங்கம் முன்னணியின் முக்கியஸ்தர்கள் மீது கைவைத்தது. அதன்மூலம் தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்கள் அரச படைகளோடும் புலனாய்வுத் துறையோடும் காவல்துறையோடும் முட்டுப்படுவதில் உள்ள வரையறைகளை, ஆபத்தை உணர்த்துவதே அரசாங்கத்தின் நோக்கம்.

மேற்படி கைது நடவடிக்கைகளின்மூலம் ரணில், சிங்கள பௌத்த உணர்வுகளைத் திருப்திப்படுத்தலாம். அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலை நோக்கி அவர் உழைக்கின்றார். தாமரை மொட்டின் ஆதரவோடு அவர் களமிறங்கினால், தமிழ்வாக்குகள் அவருக்கு கிடைக்காது என்று அவர் அஞ்சக்கூடும். எனவே முழுக்கமுழுக்க சிங்களமக்களின் வாக்குகளில் தங்கியிருப்பது என்று முடிவெடுத்தால், தமிழ் அரசியல்வாதிகளில் கை வைக்க வேண்டும். மேலும் ஐ.எம்.எஃப் பின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் பொழுது சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படக்கூடிய கொதிப்பைத் திசை திருப்பவும் மேற்படி கைது நடவடிக்

சஞ்சீவி
11 ஜூன் 2023

# விழிப்படைவது எப்போது?



சிவகுரு முருகதாஸ்

விழிப்படைதல்; இச்சொல் பல்வேறு கருத்துக்களை தன்னுள் அடக்கியிருந்தாலும் இன்று அது ஆன்மிகத்துள் சிறைபிடிக்கப்பட்டுவிட்டதாகவே காணப்படுகிறது. அதனால் தானோ என்னவோ, படிப்பறிவு மட்டுமல்ல பகுத்தறிவு கொண்ட மக்களில் பெரும்பாலானவர்கள் நுனிப்புல் மேய்தலோடு நாட்களைக் கடத்துகின்றனர். இது மிகவும் அபாயகரமானது மட்டுமன்றி ஏமாளிகளாகவே வாழ எங்களை நிர்ப்பந்தித்தும்விடும்.

1987இல் ஏற்படுத்தப்பட்ட இந்திய=இலங்கை ஒப்பந்தம் ,அதன் தொடர்ச்சியாக உருவாகிய மாகாணசபை முறைமை தொடர்பில் மூன்று தசாப்தங்களைக் கடந்துவிட்ட நிலையிலும் எங்கள் மத்தியில் இந்த நுனிப்புல் மேய்தலே அதிகமானவர்களிடம் காணப்படுகிறது.

எம்மிடம் காணப்படும் இந்தப் பலவீனமான நிலைமையினை சிலர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றனர். எமது உணர்வுகளைத் தூண்டிவிடும் வார்த்தைப் பிரயோகங்களையும் வரிவடிவங்களையும் பயன்படுத்தி இலங்கைத்தீவின் அனைத்து அரசியல்வாதிகளும் தமது சுயநலத்துக்காக, தமது குடும்ப உறவுகளது மேம்பாட்டுக்காக செய்யும் தப்புத்தாளங்கள், பித்தலாட்டங்கள், ஊழல்கள் என்பவற்றின் விளைவாக ஏற்படும் ஒட்டுமொத்த பாதிப்புக்களையும் ஈடுகட்ட, அரசு என்ற ரீதியில் அவர்கள் எடுக்கும் அனைத்து வரிவிதிப்புக்களையும் சுமக்க வேண்டியவர்களாக நாம் நிர்ப்பந்திக்கப்பட்டு விடுகின்றோம்.

இதனால்தான் நாம் காலத்துக்குக் காலம் 226 பேரை வாழவைக்க, நம் அனைவர் மீதும் ஏற்றப்படும் சிலுவைகளை குடும்பத்தோடு சுமந்தபடி, நோய்களால் பீடிக்கப்பட்டு இறந்து போகின்றோம். இவைபற்றி நாம் விழிப்படைய மாட்டோமோ? இப்பத்தியை எழுதுவதன் நோக்கம், அரசியல்வாதிகள் மீதோ, கட்சிகள் மீதோ குற்றஞ்சுமத்துவதல்ல. மாறாக, மூன்றுவேளை உணவுக்காகவும், தொடரும் மருத்துவ செலவுகளுக்காகவும் தினமும் போராடிக்கொண்டிருக்கும் என்மீதும், என் சகோதர உறவுகளின் மீதுமே நான் குற்றம் சுமத்துகின்றேன். ஏனெனில் நாம்தானே விழிப்படையவில்லை. இதுவரை காலமும் தேர்தல்கள் நடைபெறும்போது கண்களை மூடிக்கொண்டு சின்னங்களுக்கு வாக்களிப்பதை ஒரு கௌரமாக, உயர்வான, துணிச்சலான ஒரு விடயமாக நினைத்து மந்தைக்கூட்டம் போல் செயற்பட்டு வந்தோமே, அந்த முட்டாள்தனத்தின் மீது குற்றஞ்சுமத்துவதற்கே நான் இதனை வரைகின்றேன். குழுமம் குழுமமாக பிரிந்துகிடந்து வீராப்பு பேசினோமே அந்த முட்டாள்தனம்தான் யுத்தவலியும் யுத்தவடுவும் சுமந்தவர்களாக, நடமாடும் பிணங்களாக எம்மக்கள் இங்கே உலாவிட, இறக்குமதி செய்யப்பட்டவர்களும் இறக்குமதியானவர்களும் எங்களது விதிகளைத் தீர்மானிக்கும் தலைவர்களாகப் பாத்திரமேற்று, இன்று எங்களை தமது தேவைக்கேற்ப அடகுவைக்கப்பார்க்கிறார்கள். 'வாக்குரிமை' என்ற பலத்தைக் கொண்டிருக்கும் நாம் எம்மால் தெரிவுசெய்யப்பட்டவர்களால் பகடைக்காரர்களாக்கப்பட்டுவிட்டோம். விழிப்படையமாட்டோமா?

திம்பு கோட்பாடுகளின் விளைவாக உருவாக்கப்பட்ட மாகாணசபைகள் சட்டமூலம் இலங்கை அரசியல் அமைப்பின் 13வது திருத்தமாக இடம்பெற்றது. நான்கு தசாப்தமாக தமிழர்கள் நடத்திய தேசவிடுதலைப் போராட்டத்துக்கும் அவர்களது உயிர், உடைமை இழப்புகளுக்கும் மாகாணசபை ஒருபோதும் ஈடாகமாட்டாது. ஆயினும் மாகாணசபை என்கின்ற தீர்வே போதும் என நாம் அன்றே நினைத்திருந்தால் வடக்கு= கிழக்கு இணைந்த பிரதேசம் , எமது தேசமாக சட்டப்படி இருந்திருக்கும். முள்ளிவாய்க்கால் வரையிலான பேரவலத்தை நாம் அனுபவித்திருக்கத் தேவையில்லை.

ஆயிரக்கணக்கான இளைஞர்களையும் யுவதிகளையும் காணாமல், நாம் இன்றுவரை தேடிக்கொண்டிருக்க வேண்டிய ஒரு துன்பியல் சூழல் ஏற்பட்டிருக்காது. இருந்தும் தமிழர்கள் நாம் போராடினோம். 2009 மே 19 வரை தாயக விடுதலைக்காக ஆயுதபலத்தோடு போராடினோம். பொருளாதார ரீதியில் போராடினோம். தேவை ஏற்பட்டபோது அகிம்சை ரீதியிலும் போராடிப் பார்த்தோம். இருந்தும் பல்வேறு உலக நாடுகள் இணைந்து, இலங்கையுடன் சேர்ந்து எமது தாயக விடுதலைப் போராட்டத்தை, ஆயுத ரீதியிலான விடுதலைப் போராட்டத்தை மௌனிக்கச் செய்துவிட்டன. பெருமைப்படக்கூடியதாக வளர்ந்திருந்த பல்வேறு கட்டமைப்புக்களை சிதைத்துவிட்டன. இது இலகுவாக மறந்துவிடக்கூடிய ஒரு நிகழ்வல்ல.

போரின் தழும்புகளையும் வலிகளையும் சுமந்து கொண்டிருக்கும் எனது உறவுகளுக்குத் தெரியும் மாற்றம் ஒன்றே நிரந்தரமானது என்று. அதுமட்டுமன்றி இன்னும் ஒன்றும் அவர்களுக்குத் தெரியும். இலக்குகள் எப்பொழுதும் எம்மை நோக்கி வருவதில்லை. ஆம், மாகாணசபை என்பது தமிழர் எம் அரசியல் விடுதலைக்கான தீர்வு அல்ல. எனவே [illegible]க்கான தீர்வை வேண்டி நாம் இலங்கை அரசோடு, சர்வதேச நாடுகளின் ஆதரவுகளை [illegible] பெற்று தொடர்ந்தும் போராட வேண்டும். [illegible] வழிகளில் பலமுனைகளில், பல்வேறு வடிவங்க[illegible] வேண்டும் பலமான வகையில் நிலைத்துநின்று, [illegible] ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் கெட்டியாகப் பிடித்த[illegible] வேண்டும் [illegible] விழிப்படைதல் அவசியம்.

இதற்கு சமாந்தரமாக, இலங்கை அரசியல் அமைப்பு ரீதியாக, சட்டப்படி எமக்கு கிடைக்கின்ற நன்மைகளை எமது மக்கள் அனுபவிப்பதற்கு வாய்ப்புக்களையும் பரவலாக்கி பலப்படுத்த வேண்டும். அரசியல் அமைப்பு ரீதியில் இலங்கை அரசு இதுவரை வழங்கியுள்ள ஒரு சில சிறிய அளவுகளிலான நன்மைகளைக் கூட எந்தவொரு நிலைமையிலும் தந்திரோபாயமற்ற காரணங்களைக் கூறி எம்மக்களை அனுபவிக்க விடாமல் தடுப்பது விவேகமான ஒன்றாக அமையமாட்டாது. 13ஆவது அரசியல் திருத்தத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களை, குறிப்பாக காணி, பொலிஸ் அதிகாரங்களை முழுமையாக பெற்றுத்தருமாறு இந்திய - இலங்க ஒப்பந்தத்தின்போது தமிழர் தரப்புக்காக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்த இந்தியாவை ஒரேபிடியில் பிடித்துக் கோரி இருந்தால் இன்று நாம் பறிகொடுத்த நிலங்களாவது காப்பற்றப்பட்டிருக்குமல்லவா? (வடக்கு கிழக்கு இணைந்த ஒரே மாகாணம்) குருந்தூர்மலை, வெடுக்குநாறிமலை, திரியாய், கன்னியாய், தையிட்டி என நீளும் காணி பறிப்புக்கள் நிறுத்தப்பட்டிருக்கலாம் அல்லவா? எங்கள் தேசத்தை அங்கீகரித்து எமது இருப்பைத் தக்கவைத்திருக்கலாமல்லவா? ஏன் நாம் அப்படிக் கோரவில்லை?

தமிழர் பிரச்சினைக்கு மாகாணசபை தீர்வல்ல என்ற கோட்பாட்டில்தான் நிற்கின்றோம் என்றால் ஏன் நாங்கள் மாகாண சபைத்தேர்தல்களில் போட்டியிட்டோம்? வென்று கிடைத்த வரப்பிரசாதங்களை வருடாவருடம் ஏன் அனுபவித்தோம்? இன்றும் அனுபவித்து வருகின்றோமல்லவா? எமது அரசியல்வாதிகளுக்கு ஏன் இந்த பச்சோந்தித்தனம்? பட்டுவேட்டி எனக்குத் தேவைதான். பட்டுவேட்டியைப் பெறுவதே எனது இலக்கும். நாம் எமது இலக்கை அடையும்வரை எமது இடுப்பில் இருக்கும் கோவணத்தை பறிகொடுக்காமல் இருக்க வேண்டுமே. இதுதானே விவேகம். கோவணத்தை முழுமையாக பறிகொடுத்துவிட்டு நிற்கும்போது எமக்கு பட்டுவேட்டி எதற்கு? விழிப்படைய மாட்டோமா?

அன்று ஒரே தலைமை. வளைந்து கொடுக்காத , விட்டுக் கொடுக்காத, விலைபேசல்களுக்கு வீழ்ந்துவிடாத வீரத் தலைமை. அந்தத் தலைமையின் கீழ் உயிரையே தந்துவிடும் தியாகங்களாக ஆயிரக்கணக்கில் அணிதிரண்ட இளைஞர் யுவதிகள், ஆயுதத்தளபாடங்கள், கட்டமைக்கப்பட்ட அணிகள் இவற்றின் பலத்தோடு நாம் இருந்தபோது 'தாயக விடுதலையே' தமிழர் தம் இலக்காக இருந்தது. அதனை நோக்கியே எமது பயணமும் அமைந்தது. தலைவனின் பாதச்சுவடுகளின் கீழ் பயணமும் தொடர்ந்தது. இன்று............? முள்ளிவாய்க்கால் முகப்பினில் அப்படியே ஸ்தம்பித்து நிற்கின்றோம். வீரமும் விவேகமும் கொண்ட தலைவனைக் காணவில்லை. இருந்தும் ஏழெட்டுப் பேர் தங்களைத் தாங்களாகவே தலைவனாக வரிந்து கட்டிக்கொண்டு பல்வேறு நிறங்களில் கொடிபிடித்தபடி, மடிப்புக் குலையாத ஆடைகளுடன் தேசம், தேசியம், தாய்மொழி, இனம், பண்பாடு, கலாசாரம் என கோஷமிட்டபடி கூவி அழைக்கின்றனர். தம்பின்னே அணிதிரளுமாறும் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுத்தருவதாகவும் 2009 முதல் இன்றுவரை கோஷமிட்டு வருகின்றனர். யாரை நம்புவது? எவர் எமது நம்பிக்கைக்குரிய தலைவர் ? இவர்கள் அனைவருமே 'ஒரே அமைப்பாக' இணைந்து ஒரே குரலாக எமது அரசியல் தேவை என்ன என்பதை இலங்கைக்கும் இந்தியாவுக்கும் ஏன் சர்வதேசத்துக்கே உரத்துக்கூறிட இதுவரை முடியாமல் போனது? இந்த தலைவர்கள் தமக்குள் ஒற்றுமைப்பட்டு ஓரணியில் ஒன்றுபட முடியவில்லை. ஆனால் வடக்கு=கிழக்கிலுள்ள தமிழ் பேசும் மக்களை தமக்குக் கீழ் ஒன்றுபட்டு அணிதிரளுமாறு கூவுகின்றனர். இது எவ்வகையில் நியாயமானது? விழிப்படையமாட்டோமா?

கடந்த சில தசாப்தங்களாக- குறிப்பாக 14 வருடங்களுக்கும் மேலாக நாடாளுமன்றக் கதிரைகளை அலங்கரித்தபடி தனிச்செயலாளர், உதவியாளர், சாரதி, வாகனக் கொடுப்பனவு என அனைத்து வரப்பிரசாதங்களையும் தமது குடும்ப உறுப்பினர்களது பெயரில் அனுபவித்துக் கொண்டிருக்கும் இவர்கள் முள்ளிவாய்க்கால் முடிவின்பின் எதனை எம்மக்களுக்காக பெற்றுத் தந்திருக்கின்றனர்? விழிப்படைய மாட்டோமா?

இலங்கை அரசுடன் பேசவேமாட்டோம்.... இலங்கை அரசுடன் நிபந்தனைகளுடன் பேசப்போகின்றோம்.... சமஷ்டித் தீர்வுக்கு உடன்பட்டால் மட்டுமே பேச்சுவார்த்தை... என்றவாறு பகிரங்க அறிக்கைகளை ஊடகங்களுக்குத் தெரிவித்து காலங்களுக்கு காலம் உசுப்பேத்தும் செயற்பாடுகளில் ஈடுபடும் எங்களது பிரதிநிதிகள், சிங்கள அரசியல்வாதிகளது வீட்டு விசேடங்களில் முகம் நிறைந்த புன்னகையோடு கலந்து மகிழ்கின்றபோது, பெற்ற பிள்ளைகளையும் உறவுகளையும் முள்ளிவாய்க்கால் வரை இழந்துவிட்டு நிர்க்கதியாக, ஒருநேர உணவுக்காக கையேந்தி நிற்கும் எம் உறவுகளின் வலி அவர்களுக்கு எங்கே தெரியப்போகின்றது? இன்னுமா நாம் இவர்களை நம்பியிருக்கப் போகின்றோம்? பிச்சை எடுப்பவர்கள் தமது காயங்கள் ஆறிப்போவதை விரும்பமாட்டார்களல்லவா? விழிப்படைய மாட்டோமா?

தமிழருக்காக ஒப்பந்தங்களில் கையெழுத்திட்ட இந்திய அரசை ஒருபிடியாகப் பிடித்து உரக்கக் கேட்க வேண்டாமா? இந்திய அரசே, தொப்புள்கொடி உறவான உம்மை நம்பித்தானே தமிழர் நாம் திம்புக்கோட்பாட்டை முன்வைத்தோம். அனைத்து இயக்கங்களும் அரசியல்கட்சிகளும் இணைந்து தீர்வுக்காக உம்மை வரவேற்றோம்? இடையில் நடந்தவை உமக்கும் எமக்கும் விரும்பத்தகாதவைகளாக இருந்தாலும் இன்றும் தமிழர் நாம் உம்மை நம்புகின்றோமே, ஏன் எங்களைக் கைவிட்டீர்கள்?

இந்தக்கேள்விகளை எமது தலைமைகள் இதுவரை இந்தியாவிடம் கேட்டிருக்க வேண்டாமா? எல்லோரும் இணைந்து தத்தமது கட்சிபேதங்களை கைவிட்டு 'ஒரே குரலாக' இந்திய அரசிடம் உரத்துக்கேட்டிருக்க வேண்டமா? தொடர்ந்தும் எங்களை ஏமாற்றியபடி ,எங்களுக்காக குரல் தரும் அமைப்புக்களையும் ஏமாற்றியபடி எமது தாயகநிலத் தொடர்பையே கூறுபோடும் வேலைத்திட்டத்தை கச்சிதமாக முன்னெடுத்துவரும் இலங்கை அரசின் கபடத்தனத்தை தடுத்து நிறுத்த, தனக்குள்ள பொறுப்பை முழுமையாக நிறைவேற்றி, எங்களைக் காப்பாற்றுமாறு ஏன் இவர்களால் இந்திய அரசைக் கோரமுடியாது போனது? 2009களின் பின்னர் தாமே தமக்கு முடிசூடிக்கொண்ட எமது அரசியல் தலைமைகள் 'இதோ இந்தியா போகப் போகின்றோம்..., இந்தியப் பிரதமரிடம் பேசப் போகின்றோம்... 'என எத்தனை தடவைகள் அறிக்கைகள் விட்டனர்? ஞாபகம் இருக்கிறதா? இருந்தும் ஒரு தடவையாவது போய்க் கதைத்தனரா? கடவுச்சீட்டைக் காணவில்லை, கடவுச்சீட்டு காலாவதியாகிவிட்டது என்ற கதைகளைக் கூறியே இந்திய அரசு அழைத்தும் அதனை இவர்கள் புறக்கணித்திருந்தனர் அல்லவா? ஏன் இந்தக் கபடநாடகம்? பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் வேடம் இன்னும் எத்தனை நாளைக்கு? சகோதரர்களே நாம் விழிப்படைய மாட்டோமா?

மீண்டும் நாம் ஒரு தேர்தலுக்கு முகம் கொடுக்கும் சூழல் உருவாகி வருகிறதுபோல் தெரிகிறது. ஏனெனில் எமது அரசியல் பிரதிநிதிகள் ஜனாதிபதியுடனான சந்திப்பு, வெளிநாட்டு தூதுவர்களுடனான சந்திப்பு, அறிக்கைப் போர் என சுறுசுப்பாக உள்ளனர். இவர்கள் தூக்கி எறிவதை ஏந்தி, அந்த நன்றிக்கடனுக்காக இவர்கள் பின்னே ஏவல்வேலை செய்ய ஒரு சிறுகூட்டமும் தயாராகிவிட்டது. ஆகமொத்தம் மீண்டும் ஒரு தடவை நாம் கௌரவத்தோடு ஏமாளியாக்கப்படப் போகின்றோம். கனவுகளோடு சாவினைத் தழுவிய அனைத்து ஆத்மாக்கள் மீதும் மீளவும் ஒரு தடவை ஏறிமிதிக்கப் போகும் ஒரு கூட்டத்தை எமது பிரதிநிதிகளாக்க நாம் தயாராகுகின்றோம். தயார்ப்படுத்தப்படுகின்றோம், இது இன்னும் எத்தனை காலத்துக்கு...? குழுமம் குழுமமாக சிந்திப்பதைவிடுத்து ஒரே குடும்பமாக விழிப்படைய மாட்டோமா?

அமைதியாக உளவிழிப்புணர்வுடன் மெதுமெதுவாக ஒருநிலைப்படுத்தப்படும் சிந்தனையே விழிப்படைதலின் தாரகமந்திரமாம். இவை இப்பொழுது எமக்கு அவசியமான ஒரு திறன் என நான் கருதுகின்றேன். எம் முதுகின்மீது ஏறி பலரும் சவாரி செய்தது போதும். எம் உணர்வுகளை உசுப்பேத்தி உசுப்பேத்தி பலரும் சுகவாழ்வு வாழ்ந்தது போதும்.. இனியும் வேண்டாம் இந்த அவலநிலை. விழிப்படைதல் ஒன்றே இப்போதைக்கு நம் அனைவருக்கும் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கமலாதாஸ்: துயரில் முளைத்த கவிதை




○ கோகுலராகவன்

**Losing battle**

How can my love hold when the
Other
Flaunts a gaudy lust and, is lioness
To his beast
Men are worthless ,to trap them
Use the cheapest bait of all ,but
Never
Love , which in a women must
mean
Tears
And a silence in the blood.

யுத்தத்தில் தோற்றவள்.

காமுகனை
என்னுடைய தூய அன்பு
எவ்வாறு அரவணைக்கும்?
கொடூரமான மிருகங்களைத்
தேடுபவன்.
பிரயோசனமற்றவன்.
சிறிய தேங்காய்ச் சொட்டுக்காக
பொறியில் இறந்து போகும்
அற்ப பிராணி.
காதலின் அர்த்தம் புரியாதவன்.
ஒரு பெண்ணின் அன்பு
எப்போதும்
கண்ணீருக்குரியதும்
அடங்கிப் போதலுக்குரியதும்.




நான் பெண்ணியம் சார்ந்த எழுத்துக்களை படிப்பதில்லை. அநேகமாக அவை செய்யப்பட்டவையாக இருக்கின்றன. வாழ்தலுக்கான அழகியலை, ஒரு ஆணும் ஒரு பெண்ணும் தனித்தனியாக உணராதவரை வாழ்க்கை ஒரு போதும் அழகாக இருக்கப்போவதில்லை. குடும்பம் என்கிற கோட்பாட்டுக்குள் ஆண், பெண் இருவரும் உட்படும்போது அதன் நன்மை, தீமைகளையும் அனுபவித்தே தீர வேண்டும். இல்லாவிட்டால் குடும்ப அமைப்பை உதறத் தயாராக இருக்க வேண்டும்.

வேலியில் போகிற ஓணானை யார் மடிக்குள் விடச்சொன்னது? ஆனால் கமலாதாஸ் பெண்ணியவாதி அல்ல. தனக்கு இழைக்கப்பட்ட துரோகங்களுக்கு எதிராக எழுதினார். அவர் வாழ்க்கை துயரங்கள் நிறைந்தது. ஒரு சராசரிப் பெண்ணுக்கான வாழ்க்கை சித்திரம் கிழிக்கப்படுவதை யாரும் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த இடத்தில்தான் கமலாதாஸ் வாசகனை கவர்கிறார்.

பதினைந்து வயதில் திருமணம். வந்த கணவனிடம் காதலோ அன்போ துளி கூட கிடையாது. இதற்கிடையில் தனது லீலைகளை பற்றிய கணவனின் வீரப்பிரதாபங்கள் வேறு. பாரதி சொல்வானே "கற்பு ஆணுக்கும் பெண்ணுக்கும் பொது". இது கமலாதாஸைப் பொறுத்த வரை மீறப்பட்டேயிருந்தது . பெண்ணை வெறும் உடலாகக் கருதும் கணவனோடு வாழ்ந்தாக வேண்டும். தூய அன்பு கிடையாது. காதலின் மகத்துவம் தெரியாதவனை என்னவென்பது?

இவையே கமலாதாஸைக் கவிஞராக மாற்றுகிறது. அவருடைய கவிதைகளில் அன்புக்கான ஏக்கமே நிறைந்திருக்கும். ஒரு ஆண், பெண்ணின் அன்பினால் கவரப்படுவதும், ஒரு பெண், ஆணின் அன்பினால் கவரப்படுவதும், இயற்கையின் நியதி . இதற்கு யாரும் விதிவிலக்கல்ல.

கமலாதாஸ் கேரளாவைச் சேர்ந்த மலையாளி. ஆனால் கவிதைகளை ஆங்கிலத்தில் எழுதினார்.

ஏனைய படைப்புக்களை மலையாளத்தில் எழுதினார். "என் கதா" என்கிற அவரது சுயசரிதை வெளிப்படையாக அவரது உள்ளக்குமுறல்களை அள்ளிக்கொட்டியது. "என் கதாவை" வாசித்தால் உங்கள் மனச்சாட்சி உங்களைக் குற்றவாளியாக உங்களுக்குத் தெளிவாகக் காட்டும். ஒரு பெண் தன் மன ஆதங்கங்களை ,மன விருப்பங்களை வெளிப்படையாகத் தெரிவிக்கக் கூடிய சமூகக் கட்டமைப்பு கீழைத்தேசக் கலாசாரத்தில் அறவே இல்லை.

கமலாதாஸ் இவற்றை உடைத்து எறிந்தார் என்பதே உண்மை.

கமலதாஸ் ஆச்சரியம் மிக்க துணிச்சலான பெண் .

ஆனால் அவர் எழுத்தில் நேர்மை இருக்கிறது .

இதுவே அவர் கொண்டாடப்படக் காரணம் ஆகியது.

*(இன்னும் கதைப்பம்)*

○ இயல்வாணன்



நடிகராக, நாடக இயக்குநராக, நாடகப் பயிற்சியினை வழங்கும் வளவாளராக, எழுத்தாளராக, அரங்க ஆய்வாளராக, விமர்சகராக, கூத்துக் கலைஞராக அரங்கும் கூத்துமாக வாழ்வைக் கொண்டாடிய கலைஞர் ஓய்வுநிலைப் பேராசிரியர் சின்னையா மௌனகுரு. அவர் நேற்றுமுன்தினம் (ஜூன் 9ஆம் திகதி) அகவை 80இல் அமுதவிழாக் கண்டுள்ளார். ஈழத்தின் அரங்கத்துறை ஆளுமைகளில் முக்கியமானவரான இவர் கிராமங்களில் வழக்கொழிந்து கொண்டிருந்த கூத்துகளை மீளுருவாக்கம் செய்வதிலும் ஆவணப்படுத்துவதிலும் முதன்மையான பங்களிப்பை வழங்கிய ஒருவர்.

மட்டக்களப்பு அமிர்தகழியிலுள்ள சீலாமுனைக் கிராமத்தில் 09.06.1943 இல் பிறந்த மௌனகுரு தனது ஆரம்பக் கல்வியை அமிர்தகழி மெதடிஸ்த மிசன் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை வந்தாறுமூலை மத்திய கல்லூரியிலும் பெற்று, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தையும்(1965), தமிழ் முதுமாணிப் பட்டத்தையும் (1973) பெற்றுக் கொண்டார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் க.கைலாசபதியின் வழிகாட்டலில் கலாநிதிப் பட்டத்தைப் (1982) பெற்றார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டத்தையும் (1975) பெற்றுக் கொண்டார்.

1966இல் ஆசிரியப் பணியில் இணைந்து கொண்ட இவர் 5 ஆண்டுகள் கொழும்பு பாடவிதான அபிவிருத்தி நிலையத்தில் அரச பாடநூல் எழுதும் பணியில் ஈடுபட்டார். மீண்டும் கற்பித்தல் பணியில் ஈடுபட்டு, 1981 வரை ஆசிரியராகப் பணியாற்றினார். 1979இல் இருந்து மூன்றாண்டுகள் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். 1984 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறையின் உதவி விரிவுரையாளராகப் பணியை ஆரம்பித்த அவர், விரிவுரையாளராக, முதுநிலை விரிவுரையாளராக அங்கு பணியாற்றினார். 1991 இல் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளராகப் பணியேற்ற இவர் நுண்கலைத்துறைத் தலைவராகவும், கலைப்பீடாதிபதியாகவும் பணியாற்றினார்.






தனது இந்தப் பணிகளின் போது பல நூற்றுக்கணக்கான அரங்கவியல் கலைஞர்களையும், கூத்துக் கலைஞர்களையும் உருவாக்கியுள்ள இவர் அரங்கு சார்ந்தும், கூத்து சார்ந்தும் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் தனது வாழ்நாளைச் செலவிட்டுள்ளார். அத்துடன் கிராமப் புறத்துக்குள் முடங்கியிருந்த கூத்தினை பேராசிரியர் வித்தியானந்தனின் அடியொற்றி புலமைத்துவ மட்டத்துக்கு எடுத்துச் சென்ற பெருமையும் இவரைச் சாரும்.

இவரது கிராமம் வடமோடிக்கூத்தில் பிரபலம் பெற்ற ஒரு கிராமமாகும். அங்குள்ள செல்லையா அண்ணாவியாரிடத்தில் கூத்துப் பயின்ற மௌனகுரு, அவரது அண்ணாவியத்தில் 'பாசுபதாஸ்திரம்' கூத்தில் நடித்தார். அந்த நடிப்பைப் பார்வையிட்டு மதிப்பீடு செய்து வைத்திருந்த பேராசிரியர் சு. வித்தியானந்தன் பல்கலைக்கழகம் சென்ற மௌனகுருவை சிக்கெனப் பிடித்துக் கொண்டார். அவர் மரபுவழித் தமிழ் நாடக மறுமலர்ச்சி இயக்கத்தை ஆரம்பித்து நாடகங்களை மேடையேற்றிய காலமது. மௌனகுருவை பிரதான பாத்திரமாகக் கொண்டு இராவணேசன், நொண்டி நாடகம், கர்ணன் போர், வாலிவதை முதலான நாடகங்களை மேடையேற்றினார்.

ஆரம்பத்தில் தமிழ்த் தேசியக் கருத்துநிலைப்பட்டு இயங்கிய இவர் பின்னர் மார்க்ஸிய சிந்தனைகளால் கவரப்பட்டார். அதன் விளைவாக 1969ஆம் ஆண்டு கொழும்பு லும்பினி அரங்கில் நடைபெற்ற சாதி ஒழிப்பு மாநாட்டுக்காக அவர் தயாரித்து அளிக்கை செய்த சங்காரம் நாடகம் அக்காலத்தில் அதிர்வலைகளை ஏற்படுத்தியதெனலாம்.

சிறுவர் அரங்கச் செயற்பாடுகளிலும் ஈடுபட்ட இவர் வேடனை உச்சிய வெள்ளைப் புறாக்கள், தப்பி வந்த தாடி ஆடு, ஒரு முயலின் கதை, பரபாஸ் முதலான நாடகங்களைத் தயாரித்து மாணவர்களை நடிக்க வைத்து மேடையேற்றினார். அத்துடன் சக்தி பிறக்குது, சரிபாதி, நம்மைப் பிடித்த பிசாசுகள் முதலான பெண்ணிய நாடகங்களையும் அவர் தயாரித்துள்ளார்.

அரங்கு சார்ந்தும், தமிழிலக்கியம் சார்ந்தும், பண்பாடு சார்ந்தும் பல நூல்களையும் அவர் எழுதியுள்ளார். அரங்கு ஓர் அறிமுகம் (பேராசிரியர் கா.சிவத்தம்பி,க.திலகநாதன் ஆகியோருடன் இணைந்து - 1999), அரங்கியல்(2003), 20ஆம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழிலக்கியம் (எம்.ஏ.நுஃமான், திருமதி சித்திரலேகா மௌனகுருவுடன் இணைந்து - 1979), ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு(1999), கலை இலக்கியக் கட்டுரைகள்(1997), சுவாமி விபுலானந்தர் காலமும் கருத்தும்(1993), மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்(1998), தமிழர் வரலாறும் பண்பாடும்(2005), தமிழ்க் கூத்துக்கலை(2010), சங்ககால இலக்கியமும் சமூகமும் ஓர் மீள்பார்வை(2003), சடங்கிலிருந்து நாடகம் வரை(1988), நாடகம் அரங்கியல் பழையதும் புதியதும்(2005), பண்டைத் தமிழர் வரலாறும் இலக்கியமும்(2005), பழையதும் புதியதும்(1992), பேராசிரியர் எதிர்வீர சரத்சந்திரவும் ஈழத்து நாடக மரபும்(1997) கால ஓட்டத்தினூடே ஒரு கவிஞன்(1994) முதலான பல நூல்களை அவர் எழுதியுள்ளார். அவர் எழுதிய நாடக ஆக்கங்கள் இராவணேசன்(1998), சக்தி பிறக்குது(1997), நாடகம் நான்கு(இ.முருகையனின் கடூழியம், நா.சுந்தரலிங்கத்தின் அபசுரம், இ.சிவானந்தனின் காலம் சிவக்கிறது, மௌனகுருவின் சங்காரம் ஆகியவை - 1980), மௌனகுருவின் மூன்று நாடகங்கள்(மழை, நம்மைப் பிடித்த பிசாசுகள், சரிபாதி ஆகிய நாடகங்கள் 1987), சங்காரம், தப்பி வந்த தாடி ஆடு, வேடனை உச்சிய வெள்ளைப் புறாக்கள், புத்துயிர்ப்பு முதலான பலவும் நூல்களாக வெளிவந்துள்ளன.

மகாபாரதக் கதையை மையமாகக் கொண்டு அதிகாரப் போட்டியால் உருவாகும் யுத்தத்துக்கு எதிரான குரலாக சார்வாகன் (2000) என்ற குறுநாவலையும் இவர் எழுதியுள்ளார். மக்கள் இலக்கியக் கவிஞர் சுபத்திரனது கவிதைகளையும்(2002) இவர் தொகுத்துள்ளார். பல்கலைக்கழகத்தில் பயின்ற காலத்தில் சிறுகதைகள், கவிதைகளை எழுதியுள்ளார். அத்துடன் இலங்கை வானொலியிலும் சங்கநாதம், கிராம சஞ்சிகை நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கியுள்ளார். சிறுவர் பாடல்களையும் எழுதியுள்ளார். பொன்மணி திரைப்படத்திலும் நடித்துள்ளார். இவரது கலைச்சேவையைப் பாராட்டி வழங்கப்பட்ட நாடககீர்த்தி(2013), கொடகே தேசிய சாகித்திய வாழ்நாள் சாதனை விருது(2014), தேசநேத்துரு விருது(2015), இலங்கை அரசின் பாரம்பரிய மற்றும் நவீன கலைச்சேவைக்கான வாழ்நாள் சாதனையாளர் விருது (2019), சாதனைத் தமிழன் விருது(2020) போன்றன இவருக்கான மணிமகுடங்களாக அமைந்துள்ளன. 2017இல் மகுடம் சஞ்சிகை இரட்டைச் சிறப்பிதழை வெளியிட்டு மௌனகுருவைக் கௌரவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இன்றும் வாலையில் ஆடிய துடிப்போடு [illegible] அரங்க ஆய்வுகூடத்தை நிறுவி, தனது அறிவையும் அனுபவங்களையும் [illegible] கடத்தும் பணியில் தொடர்ந்தும் செயலாற்றி வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



○ ந.பரமேஸ்வரன்

# யாழ்ப்பாண வரலாறு

1505-1948 வரை

**1938 ஜூன் 11**
சட்டசபையில் சிறுபான்மையினருக்கு சம பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டுமென்ற ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் கோரிக்கை தொடர்பான கூட்டம் , மட்டக்களப்பு லக்ஷ்மி மண்டபத்தில் நடைபெற்றது. மட்டக்களப்பு நகர அபிவிருத்திச் சபையின் தலைவர் சின்னையா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஜீ.ஜீ.பொன்னம்பலம், சு.நடேசபிள்ளை, காரியப்பர் உட்பட வடக்கு - கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்திய பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு -

1. சட்டசபையில் சிறுபான்மையினருக்கு சம பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டும்.
2. வடக்கு – கிழக்கு மாகாணங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்படவேண்டும்.
3. கிழக்கு மாகாணத்துக்கு குறைந்தது ஐந்து ஆசனங்கள் ஒதுக்கப்பட வேண்டும்

இந்தக்கூட்டத்தில் உரையாற்றிய ஜீ.ஜீ. பின்வருமாறு கூறியிருந்தார்.
" 1912 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு இனத்துக்கும் ஒவ்வொரு பிரதிநிதி இருந்தார். 1912 - 1921 டொனமூர் ஆணைக்குழுவின் சிபாரிசின் பின்னர் சனத்தொகையை அடிப்படையாகக்கொண்டு தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட்டமையால் சிறுபான்மையினரின் பிரதிநித்துவம் குறைந்துவிட்டது.
இதனால் பெரும்பான்மை சர்வாதிகாரம் ஏற்பட வாய்ப்புள்ளது. இந்தியாவில் முஸ்லிம்கள் மொத்த சனத்தொகையில் மூன்றிலொரு பங்கினராகக் காணப்படுகின்றனர். அவர்களுக்கு 40% ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன" எனத் தெரிவித்திருந்தார்.
இதேவேளை 50:50 கோரிக்கை அவசியமற்றது என்ற தலைப்பிலும் ஒரு கூட்டம் மட்டக்களப்பு முற்றவெளி மைதானத்தில் சட்டத்தரணி சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. ஜீ.ஜீயின் கோரிக்கையை இனவாதக் கோரிக்கை என சிங்களத் தலைவர்கள் வர்ணித்தனர்.

**1938 நவம்பர்**
கடந்தவாரம் கதிர்காம நிர்வாகத்தில் இந்துக்களுக்கும் பங்கு வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை பற்றிப் பார்த்தோம். இந்துக்களின் கோரிக்கைக்கு பௌத்த பிக்குமார் மறுப்புத் தெரிவித்து விட்டனர். கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் நடைபெற்ற கதிர்காம நிர்வாகத்தில் இந்துக்களுக்கும் பங்கு வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை பற்றிய கூட்டத்தில் ஸ்ரீ சமயனுரக்ஷண தேரர் கதிர்காமக் கந்தன் ஆலயம் இலங்கைக்கு இந்துக்கள் வருவதற்கு முன்னரே சிங்கள அரசன் ஒருவனால் கட்டப்பட்டதுடன் கதிர்காம நிர்வாகமும் பௌத்தர்களிடமே இருந்துள்ளது எனக் கூறினார்.
முன்னதாக இலங்கை வந்திருந்த பாபு ராஜேந்திர பிரசாத் வட இந்திய புத்த யாத்திரை தலமான புத்த கயாவை இலங்கை பௌத்தர்களிடம் ஒப்படைக்கலாமெனவும் பதிலாக கதிர்காமத்தை இந்துக்களிடம் ஒப்படைக்க வேண்டுமெனவும் உரையாற்றியிருந்தார்.
இந்தக்கூட்டத்தில் உரையாற்றிய திரு. மலலசேகர, 'இது ஒரு சிக்கலான விடயம் .ஒரு நாட்டிலுள்ள சொத்து அந்த நாட்டிற்கே உரியது. இலங்கை பௌத்தர்கள் புத்தகாயாவுக்கு எதுவித பங்களிப்பும் செய்யவில்லை அத்துடன் இது இந்தியத் தலைவர்கள் அனைவருடனும் கலந்துரையாடி முடிவெடுக்கப்பட வேண்டிய விடயம்' என உரையாற்றியிருந்தார்.
கதிர்காமத்துக்குபொறுப்பான திரு. அதிகாரம் உரையாற்றுகையில் கதிர்காமக்கந்தன் ஆலயம் கட்டப்பட்டபோது கதிர்காமத்தில் இந்துக்கள் வணங்குவதற்கு இடம் ஒதுக்கப்படவில்லை என உரையாற்றியிருந்தார்.
இந்தகாலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் வன்முறைகள் கட்டுக்கடங்காத அளவில் அதிகரித்துக்காணப்பட்டன. பல கிராமங்களில் வன்முறைகளுக்கெதிரான அமைப்புகள் உருவாக்கப்பட்டன (Anti crime society) .இந்த வன்முறை எதிர்ப்புச் சங்க உறுப்பினர்கள் இரவு வேளைகளில் ஒழுங்கைகளில் ரோந்துப் பணியில் ஈடுபட்டனர்.இந்த விடயத்தை சபாநாயகர் வைத்திலிங்கம் துரைசாமி உள்நாட்டலுவல்கள் அமைச்சர் சேர்.பரோன் ஜெயதிலகவின் கவனத்துக்குக்கொண்டு வந்தார். சேர்.பரோன் ஜெயதிலக கிராமசேவகர்களை இறுக்கமான நடவடிக்கைகளைப் பின்பற்றுமாறு அறிவுறுத்தும்படி அரசாங்க அதிபருக்கு சுற்றுநிருபம் ஒன்றை அனுப்பினார். பிரித்தானியர் ஆட்சியில் கிராமசேவகர்களுக்கு (விதானை) பொலிஸாருக்கு உள்ள அதேயளவு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. அத்துடன் மாலை 6.00 மணியுடன் கள் மற்றும் சாராய விற்பனையை தடை செய்யுமாறும் மதுவரித்திணைக்களத்துக்கு உத்தரவிட்டார்.

**1939 ஜனவரி**
திரு S.நடராஜா, அநுராதபுரம் நகர அபிவிருத்தி சபைத்தலைவராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

சட்டசபையில் சில சீர் திருத்தங்களை மேற்கொள்வதற்கு பிரிட்டிஷ் அரசு தீர்மானித்தது. இதன் பிரகாரம் ஒன்பது அம்ச யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டது. இந்த யோசனைகள் சிறுபான்மையினருக்கு குறிப்பாக தமிழர்களுக்கு பாதகமாக அமையும் என ஜீ.ஜீ. லண்டன் சென்று குடியேற்ற நாடுகளின் செயலாளர், பிரபுக்கள் சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு எடுத்துக்கூறினார்.
பிரிட்டிஷ் அரசாங்கம் கொண்டு வரவுள்ள அரசியல் சீர்திருத்தம் தொடர்பாக இரண்டு கலந்துரையாடல்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றன. வட இலங்கைத் தேசிய கழகம் (North Ceylon Tamil League) நாடாளுமன்றத்தில் 7/2 என்ற விகிதத்தில் ஆசனப் பங்கீடு இடம்பெற வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தது.
யாழ்ப்பாண சங்கம் ஏற்பாடு செய்த கூட்டத்தில் சட்டசபை உறுப்பினர்களான சு.நடேசபிள்ளை,அருணாசலம், மகாதேவா, ஜீ.ஜீ.ஆகியோர் கலந்து கொண்டனர்.இந்தக்கூட்டத்தில் 68 உறுப்பினர்களைக்கொண்ட சட்டசபையில் வடக்கு- கிழக்குக்கு குறைந்தது 17 ஆசனங்களாவது ஒதுக்கப்பட வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
திரு. N. இளையதம்பி, மலாயாவின் தைப்பிங் மாகாண சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

*(வரலாறு நீளும்)*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org